சைவ சித்தாந்த உரை நடை

# சைவ சித்தாந்த உரைநடை

(ஒன்பது நூல்களின் தொகுப்பு)

*பதிப்பாசிரியர்*

**வித்துவான் சு. பாலசாரநாதன்**

*உதவி ஆசிரியர்*

**எஸ். சாயிராமன்**

*மகாமகோபாத்தியாய*

*டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலையம்*

*திருவான்மியூர், சென்னை-600 041.*

**1983**

மகாமகோபாத்தியாய
டாக்டர் உ. வே. சாமிநாதையர்
நூல் நிலைய வெளியீடு எண் : 76

முதற் பதிப்பு:—1983. 1000 பிரதிகள்.

© மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
திருவான்மியூர், சென்னை-600041.

விலை :—ரூ. 5-00

Published with the Financial assistance from the
Government of India, Department of Culture—New Delhi

Printed at RAJAN & Co. (Printers) 1, Goomes Street, Madras-1

## இப்புத்தகத்தில் அடங்கியவை


| | பக்கம் |
|---|---|
| முன்னுரை ... ... ... | i—xx |
| சைவசித்தாந்த உரைநூல் தொகுப்பு | xxi—xxv |
| பிழையும் திருத்தமும் | |
| சுத்த சிவப்பிரகாசக் கட்டளை ... | 1—13 |
| அநாதிப்பொருள் ஆறுக்கு வகை ... | 14—25 |
| ஞானசாதகப்பனுவல் ... ... | 26—37 |
| சைவ சித்தாந்த உரை நடை ... | 38—58 |
| உண்மை நிட்டை கூடும் உபாயம் ... | 59— |
| சுத்தாவத்தைக்குத் திட்டாந்தம் ... | 60—61 |
| உன்மனை வகுப்புத் தெரிசனை ... | 62—63 |
| ஞானம் உணர்த்தும் முறைமை ... | 64—74 |
| பஞ்சபூதத்தில் தசகாரியத்தின் வகை | 75—100 |

# முன்னுரை

வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவதாய், 'நீ' என்ற முன்னிலையும், அவன் என்ற படர்க்கையும் இன்றித் தன்மைக்கண் * தானேயாய்—தான் அன்றி வேறொன்றும் இல்லா ஞானப்பேராளுய்த்திகழும் சிவத்துடன் சம்பந்தம் உடையது சைவம்,

என்றுமே ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலப் பாசமாம் அழுக்கற்ற சுத்த அறிவே சிவம். சிவமே ஆன்மாக்களாகிய பசுக்களுக்குப் பதியாகும். நம: சர்வாயச **பசுபதயேச** என யஜுர் வேதத்தின் நடுவண் விளங்கும் ஸ்ரீருத்ரம், சிவபெருமானைப் பசுபதியாகப் போற்றிப் பணிகிறது. சுத்த அறிவாம் சிவத்துக்கு ஆணவம் முதலிய மும்மலம் இன்மையால் என்றுமே பிறப்பும் இல்லை; இறப்பும் இல்லை. ''பிறப்போடிறப்பென்றும் இல்லாதான்காண்'' எனப் பிறப்பிறப்பற்ற சிவபரம்பொருளைத் திருஆரூர்த் திருத்தாண்டகத்திற் சிந்தித்து வந்திக்கிருர் திருநாவுக்கரசர். ஆணவம் முதலிய மும்மலப் பாசத்திற்கட்டுண்டு எல்லாப் பிறப்பும் பிறந்து, இறந்து மீட்டும் மீட்டும் பிறப்புக்கும், இறப்புக்கும் ஆளாகித் தவித்து அல்லலுற்று இளைத்து வருந்தும் ஆன்மாக்களாகிய பசுக்கள், சிவபரம்பொருளை ஆணவம் முதலிய மும்மலப் பாசப் பற்று அறப் பற்றிச் சார்ந்து பிறப்பிறப்பற்ற பூரண ஞான முத்தி அடைவதை விரிவாகத் தெரிவிப்பதே சைவ சித்தாந்தமாகும்.

பிறப்பிறப்பினின்றும் விடுபட்டுக் காலதேசாதீதமான பேராமுத்தியடைவதற்கு, பிறப்பிறப்புக்களிற் சிக்கித் தவிக்கும் ஆன்மாக்களுக்கு எப்போது பக்குவம் தோன்றும் என்பதையும் சைவசித்தாந்தம் தெரிவிக்கிறது. மற்றும் ஆன்மாக்கள் சிவத்தைச் சார்ந்து பிறப்பிறப்பினின்றும் நீங்கி முத்தி அடைவதற்கு வேண்டிய வழிவகைகளையும் விளக்கமாக எடுத்துரைப்பதே சைவசித்தாந்தமாகும்.

---

* நான் என்னும் அகங்காரம் அற்ற ஞான நிறைவான தன்மைக்கண்

ஆன்மாவின் பக்குவ காலத்தில், குருநாதர் பக்குவ நிலையில் உள்ள மாணுக்கனுக்குப் பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள் உண்மையைத் தெரிவிக்கிறார். பின்னர் பாசமாகிய மும் மலங்களினின்றும் விடுபட்டுப் பதியாகிய பரசிவத்தைச் சாரும் பிறப்பிறப்பற்ற முத்தி (வீடுபேறு)யைத் தம்மை அடைந்த மாணுக்கன் பெறுதற்குரிய வழிவகைகளையும் குருநாதர் தம் மாணுக்கனுக்குத் தெரிவிக்கிறார். குருநாதர் (ஞானசாரியார்) வாயிலாக மாணுக்கனுக்கு முத்தியுற உதவுவது சிவபெருமானின் திருவருளே ஆகும். "சத்தம் அற எனை ஆண்ட குருமௌனிகையினால் தமியனேற்கு உதவு பொருளே" (சச்சிதானந்தசிவம்—7) எனத் தாயுமானசுவாமிகளும், குருவருளாக உதவுவது திருவருளே ஆகும் என்று உணர்த்துகிறார். கருணைகரக்கடவுளை, மைவிடாது எழும் நீலகண்ட குருவாகவும், விஷ்ணுவடிவான ஞானகுருவாகவும், மலர் மேவிமறை ஓதும் நான்முகக் குருவாகவும் தாயுமானசுவாமிகள் வணங்கித் துதித்துள்ளாரே! குருவேமகேஸ்வரன்; குருவேவிஷ்ணு; குருவே பிரமா; குருவே பரப்பிரம்மம் எனப்பொருள் தரும் சமஸ்கிருத சுலோகமும் இங்கே உணர்தற்குரியது.

"ஆரியன் தோற்றமுன் அற்ற மலங்களே" எனக் குருவருளாக ஞானத்துக்குப் பக்குவமுள்ள மாணுக்கனுக்கு உதவும் திருவருட் சிறப்பைத் திருமந்திரம் பேசுகிறது. ஆதலின் குருவருளே திருவருள் எனத் தெளியலாம். சிவபெருமானே குருவடிவாகத் திருப்பெருந்துறையில் நிறைம் மலர்க் குருந்தம் மேவி மணிவாசகருக்குத் திருவருள் செய்த சிறப்பும் சிந்திக்கத் தக்கதாகும். குருலிங்க சங்கமத்துள் குருவுக்கன்றோ சைவ சித்தாந்தம் முதலிடம் அளித்துள்ளது? ஞானம் உணர்த்தும் முறைமை என்னும் நூல் (பக்கம்-64) முழுமையுமே ஞானத்துக்குப் பக்குவமான மாணுக்கனுக்கு ஞானசாரியார் படிப்படியாக ஞானம் உணர்த்தும் முறைமையைப் பற்றிக் கூறுகிறது.

இனி இம் முன்னுரையை அடுத்துப் பின்வரும் சைவ சித்தாந்த நூல்களுள், ஞானசாதகப்பனுவல், சைவசித்தாந்த உரைநடை, பஞ்சபூதத்தில் தசகாரியத்தின் வகை ஆகிய நூல்களில் உள்ள சில சைவசித்தாந்த அரும்பதங்

களின் — அரும்பதத் தொடர்களின் — அரும்பதங்கள் அமைந்த வாக்கியங்களின் நுட்பப்பொருளை விரிவாகக் காணலாம்.

ஞானசாதகமின்றிப் பாசம் நீங்காது. அது நீங்கிய தன்றிச் சுட்டறிவு ஒழியாது. அது ஒழிந்தன்றி வியாபக அறிவு விளங்காது (ஞானசாதகப் பனுவல் பக்கம் 27). ஞான சாதகப்பனுவலின் மேற்குறித்த அரும்பொருள் நிறைந்த வாக்கியத்தில் உள்ள சுட்டறிவு என்ற அரும்பதத் துக்கும், வியாபக அறிவு என்ற அரும்பதத் தொடருக்கும் உள்ள பொருட் சிறப்பை விரிவாகக் காண்போம்.

முன்னிலை வையாதே (தாயுமானசுவாமி பாடல்கள் 17-5)—"நான் என்ற ஆணவ நினைவை முளைக்கவிட்டு அதை நீ எனப் பிறர் சுட்டிக் காட்டும் முன்னிலைவையாதே. நான் என்ற ஆணவ நினைவை, அந்நினைவின் நினைப்பாற்றலுக்கு ஆதாரமான சிவத்தில் ஒடுக்குக. சீவ போதச் சுட்டுணர் வைப் பரபோதமெனும் சிவஞானப் பேருணர்வாகிய உதித் தொடுங்கல் இல்லாப் பிரக்ஞானத்தில் அகமுகமாகத் திருப்பி ஒன்றுக. நீ என்ற முன்னிலைச் சுட்டுக்குள் அகப் படாதவாறு கால தேசங் கடந்த நிலை பேரும் நிறைவை அடைய முன்னிலை வையாதே" எனத் தாயுமானசுவாமிகள் அருளிச் செய்தமையும் நோக்குக. ஆதலின் சுட்டறிவாகிய காலதேசத்துக்கு உட்பட்ட சிற்றறிவு, காலதேசங் கடந்த பேரறிவாம் சிவத்தில் ஒடுங்கினுல் வியாபக அறிவின்-அறிவும் அறியாமையுங் கடந்த அறிவின் நிறைவும், ஒரு காலத்தும் மறைக்கப்படாது என்றும் விளங்கிப் பிரகாசிக் கும் இயல்பும் விளங்கும். வியாபக அறிவாம் சிவம் எப் போதும் உதயம். ஒரு காலத்தும் அறியாமையாகிய ஆணவ மலத்தால் மறைக்கப்படாத பிரக்ஞானமாம் பேரறி வாக இருப்பதால் அதன் இருப்பு கால தேசங்களால் மறைப் புக்கு உட்படாத என்றும் தோற்றமாய்-வியாபக அறிவாக உள்ளது. வியாபக அறிவு என்பது அறியாமையாகிய ஆணவ மூல மலத்தை ஒரு போதும் சாராமலும், ஆணவம் அற்றதாலேயே கன்ம, மாயை மலங்களின் சார்பும் எஞ் ஞான்றும் இல்லாமலும்-"ஆணவம் அகன்ற சுத்த அறிவ லாலுருவமில்லாத்தாணு" (திருவானைக்காப் புராணம்

கடவுள் வாழ்த்து) வாயும் போக்கு வரவின்றி அகண்ட பரி பூரணமாய் நிறைந்து நிலைபெற்றுள்ளது.

'அறிவே' என்றும் 'நல்லறிவே' என்றும் திருவாசகம் சிவபரம்பொருளைப் போற்றுவதையும் கருதுவோம்.

''அகர உயிர்போல் அறிவாகி எங்கும்
நிகரில் இறை நிற்கும் நிறைந்து''.

''ஒப்பற்ற இறையாகிய சிவபரம்பொருள் ஆணவம் இன்றி எவ்விடத்தும், எக்காலத்தும்-கால தேசங்களால் குறைவின்றி நிறைந்து, பிறப்பிறப்பின்றிப் போக்குவரவின்றி நிலை பெற்றிருக்கும்'' என்ற பொருளுடைய மேற்காணும் திருவருட்பயனின் திருவருள் மொழியையும் இங்கு வியாபக அறிவின் நிறைவாம்பதி இலக்கணம் காண நினைவு கூர்வோம். ''ஊரிலாய் என்று ஒன்றாக உரைப்பதோர் பேரிலாய்'' என்று வியாபக அறிவேயான சிவபெருமானை, ஊரில்லாததனால் தேசத்துக்குட்படாத நிறை பொருளாகவும், ஒன்றாக உரைப்பதோர் பேரில்லாததனால் குறிப்பிட்ட ஒரு பெயருக்குள் மட்டும் அடங்கிய சுட்டுணர்வாம் முன்னிலைக் குறைவில்லாத நிறை பொருளாகவும் திருநாவுக்கரசர் திருவாய் மலர்ந்து அருளியமையும் காண்போம். குறிப்பிட்ட பெயரொன்றே இறைவனுக்கு இருக்குமாயின் அவனும் குறிப்பிட்ட கால தேசத்துக்குட்பட்டவனாகவே இருப்பான். காலதேசங்கடந்தவனாக இறைவன் ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றும் இல்லாது இருத்தலால் ஆயிரம் (அளவற்ற) திருநாமங்களால் பாடி நாம் தெள்ளேணம் கொட்டுவதற்கு ஏற்றவாறு வியாபக அறிவாக விளங்குகிறான். ஆதலின் நான் என்ற அகங்காரம் எங்கு முளைக்கிறதோ அங்குக் கால தேசமும் உண்டு. ஏனெனில் நான் என்ற ஆணவம் காலதேசத்துக்குட்பட்டது. (நான் என்ற எண்ணம் எழும்போது ஆன்மாக்களுக்குக் காலதேச உணர்வுகள் தோன்றுகையால் ஆணவ மலம் காலதேசத்துக்கு உட்பட்டது என்று இங்குக் கூறப்பட்டுள்ளதே அன்றிச் சைவசித்தாந்தக் கருத்துப்படி ஆணவமலம் அநாதியாகும். ஏனெனில் ஆன்மா எடுக்கும் பிறவிகள் அனைத்துக்கும் ஆணவ மலமே அடிப்படைக் காரணம் ஆகும்,

ஆகவே அனைத்துப் பிறவியிலும் ஆன்ம அறிவில் ஆணவ மலம் இருந்து வருகிறது. ஆன்மா முத்தி அடையும்போது ஆணவ மலத்தின் வலி கெடுகிறது) அகங்காரமாகிய ஆணவம் காலதேசத்துக்குள் அடங்கியதாதலின் அதைச் சார்ந்த அறிவும் நினைப்பு மறப்பு என்று மாறி மாறி வரு கின்றது. அவ்வறிவும் சீவ போதச் சிற்றறிவாகும்.

உணர்ந்தேன் என்னும் சொல், ஒரு காலத்து உணரா திருந்து, பின்பு உணர்ந்தேன் என்ற பொருள் தருவதால் உணர்வைக் காலத்துடன் பொருத்திப் பேசுகிறோம். கால மும் இடமும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்று பிரிக்கமுடியாத ஒன்றாகும். ஆகவே நினைப்பும் மறப்பும் கால தேசத்துக்குட்பட்ட சிற்றறிவைச் சார்ந்து வருவதும் போவதுமாக இருக்கும். ஞாபகம் வந்தது என்றும் மறந்து போயிற்று என்றும் கூறுகிறோம் அல்லவா? ஞாபகம் எங்கிருந்து வந்தது? ஒரு போதும் ஞாபகம் வராததால் என்றுமே மறக்காத-நினைப்பு மறப்பற்ற, இரவு பகலற்ற மாறுஞானச் சுடரினின்றே ஞாபகம் வந்தது. இவ்வாறு அங்கு இங்கு எனுதபடி எங்கும், அன்று இன்று எனுதபடி என்றும் வியாபகமாகிப் போக்கு வரவற்று நிறைந்து நிலை பெற்றிருக்கும் பேரறிவாம் சிவமே ஆன்மாக்களின் நினைப்பு மறப்புக்குட்பட்ட சிற்றறிவுக்கு அறிவாகி அச்சிற்றறிவின் நினைப்பு மறப்புக்களினுல் சற்றும் தாக்குறுத எல்லையற்ற ஒன்றேயான பேரறிவாகப் பொலிகிறது. உணராமறவாப் பேரறிவே ஆன்மாக்களின் அறிவைத் தூண்டுகிறது. 'தூண்டா விளக்கின் நற்சோதி'' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகளும், ''தூண்டுவாரற்ற சோதிப்பிரான்'' என்று தாயுமானசுவாமிகளும், அணையாது ஏற்றுது எத்தகைய சார்புமின்றிச் சுயஞ்சோதியாய், ஞானப்பேரொளியாய் ஒளிரும் ஒளிவளர் விளக்காம் சிவபெருமானை, எப்போதும் மங்காததால் ஒரு போதும் தூண்டப் பெருது ஆன்மாக் களின் அறிவைத் தூண்டி ஒளிரச் செய்யும் வியாபக அறி வொளியாகப்பாடியருளிய திறத்தையும் இங்கே ஓர்ந்துணர் வது பொருத்தமாகும். ''பிரக்ஞானம் பிரம்மம்'' என்ற வேதப் பிரமாணமும் வியாபக அறிவை-பிரக்ஞானத்தைப் பிரம்மமாகப் பராவுவுதையும் நினைவு கூர்வோம். சீவ போதத்தை (ஆன்ம அறிவு)ச் சிவபோதமே உணர்த்து

கிறது என்னும் உண்மையை "உணர்வினுக்கு உணரக் கூறி" எனத் திருநாவுக்கரசர் 4 ஆம் திருமுறைத் திருவதிகைத் தேவாரத்தில் உணர்த்துகிறார். "உணர்த்தும் உனை" எனப் பராபரக்கண்ணியில் தாயுமானார் பகர்வதும் காண்க.

தாயுமானசுவாமிகள் தம்திருப்பாடலில் (27 பாயப்புலி-23) "முன்னிலைச்சுட்டொழி நெஞ்சே நின்போதம் முளைக்கில் ஐயோ பின்னிலைச் சன்மம் பிறக்குங்கண்டாய்" என்று அவ்யாபக-நிறைவற்ற சுட்டறிவை ஒழித்துக் கால தேசங் கடந்த வியாபக அறிவுடன் ஒன்றுக என நெஞ்சுக்கு அறிவுறுத்துகிறார். முன்னிலைச்சுட்டு ஒழிநெஞ்சே நின் சீவ போதத்தை முளைக்கவிட்டால் கால தேசத்துக்குள் சிக்கிப் பிறப்புக்கும், இறப்புக்கும் உள்ளாவாய் என, நெஞ்சைக் கால தேசத்துக்குள் அல்லலுறும் அவ்யாபகச் சுட்டறிவுக்கு இலக்காவதைத் தடுத்து நிறுத்தும் முகத்தான், காலதேசங் கடந்த-சீவபோதம் முளைக்காத வியாபக அறிவில் நீ ஒன்றுக என நெஞ்சுக்கு அறிவுறுத்துகிறார். நீர்த்துளி தனியே இருந்தால் சூரிய வெப்பத்தால் வற்றிவிடும்; கடலோடு சேர்ந்தால் வற்றாது நிறைந்திருக்கும். அகங்காரச் சுட்டறிவு தனியே முளைத்து இருந்தால் பிறப்பிறப்புக்கு உள்ளாகும்; அகண்டாகார வியாபக அறிவாம் சிவத்துடன் ஒன்றிப் பிரிவற்றிருப்பின் பிறப்பிறப்பற்ற முத்திநிலை பெறும். நான் என்னும் தன்மை பிறரால் சுட்டிக்காட்டப் பெறும்போது முன்னிலை ஆகிறது. சிவபரம்பொருளோ நான் என்னும் அகங்காரம் அற்ற ஞான நிறைவான தன்மைக் கண் நீ என்னும் முன்னிலைச் சுட்டற்ற தானேயாய்—சுட்டற்ற பூரண—வியாபக அறிவாய்ப் பொலிகிறது. 'நாரணன்காண்' எனத் தொடங்கும் திருக்காளத்தித்திருத்தாண்டகத்தில் "தன்மைக் கண் தானே காண்" எனச் சிவபூரணத்தைத் துதிக்கிறார் திருநாவுக்கரசர்.

நினைப்பு மறப்பு, அறிவு அறியாமை, பிறப்பு இறப்பு, போக்கு வரவு, இரவு பகல் முதலிய இருமை வகையுள்ளதும் கால தேசத்துக்குள் அடங்கியதுமான சீவபோதச்சுட்டறிவு, மீட்டும் முளைத்துத் தோன்றாதவாறு நினைப்பு மறப்பு, அறிவு அறியாமை, பிறப்பு இறப்பு, இரவு பகல் முதலிய இருமை வகையாம் மாற்றங்கள் அற்றதும், காலதேசங்

க்டந்த சுட்டற்ற பூரண அறிவும் ஆன சிவத்தில், தன் அறிவுக்கு ஆதாரம் சிவமே என அறிந்து சிவத்தையே நாடி இருக்க ஒடுங்கும். சீவபோதமேயான மனம் சிவபோதத்தில் நன்கு ஒடுங்கி மீட்டும் பிறப்பு இறப்பாக முளைக்காதவாறு நிலை பெறும்போது சிவஞானமுத்தியுறும். இந்நிலையிற் சீவ போதச் சுட்டறிவு ஒழிந்து சிவபோத வியாபக அறிவு விளங்கும்.

மறதியைத் தருவது ஆணவ மலம் (சைவ சித்தாந்த உரை நடை பக்கம் 38) மறந்து போயிற்று எனக் கூறு கிறீரே! மறதி எங்கிருந்து வந்தது? சைவசித்தாந்தம் குறிக்கும் மும் மலங்களுள் மூல மலம் என்னும் ஆணவ மாகிய நான் என்ற அகங்காரத்தினின்றும் வந்தது. ஞாபகம் நான் அற்ற அகண்டாகார அறிவினின்றும் ஆன் மாக்களுக்கு வருவது போன்று நான் என்ற அகங்கார மாகிய அறியாமை இருளே மறதியின் மூல ஸ்தானமாகும். "நான் என நிற்கும் ஞானம் ஞானம் அன்று" எனத் தாயு மானசுவாமிகளும், "யான் எனது அற்றிடு போதம்" என்றும், "ஆணவதிமிரம்" என்றும் அருணகிரிநாதப்பெரு மானும் நான் என்பது அறியாமை என்றும், அறிவுக்கு நான் என்னும் அகங்காரமாகிய அறியாமை இல்லை யென்றும், ஆணவம் இருள் என்றும் அருளிச்செய்த திரு வாக்குகளும் இங்கே கருதத்தக்கன. "ஆங்காரமும் அடங் கார் ஒடுங்கார் பரமானந்தத்தே தேங்கார் நினைப்பும் மறப் பும் அறார்" எனக் கந்தர் அலங்காரத்தில் ஆங்காரம் அடங் கப் பெற்றால்தான் நினைப்பும் மறப்பும் அறும் என அருண கிரிநாதர் அறுதியிட்டு உரைத்ததும் நினைவிற் கொள்ளத் தக்கது. நினைப்பும் மறப்பும் அறிவும் அறியாமையுங் கடந்த சுத்த அறிவாகச் சிவம் மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடராக இருப்பினும், ஆன்மாக்களை அநாதியே ஆணவ மலம் பற்றியிருப்பதாலும், ஆன்ம அறிவு எல்லை யுள்ள சிற்றறிவாகையாலும், ஞானம் திருவுருவாக உள்ள சிவத்தினின்று பிரகாசிக்கும் அறிவொளி ஆன்மாக்களின் அறிவைத் தூண்டுகையில் ஆன்மாக்கள் கால தேசக் கட்டுக் குள் அறியாமையாம் ஆணவ மல இருளால் மறைக்கப்பட்டு உள்ளமையால் ஆன்மாக்களுக்கு எழும் நினைப்பும் கால தேசத்துக்குள் அடங்கியதாகவே இருக்கும். பேராறு நீர்

நிறைந்து ஓடினும், அதில் மொண்டுகொள்ளும் பாத்திரத்தின் அளவே நீரும் கொள்ளப்படுவது போன்று ஆன்மாக்களின் கால தேசத்துக்குட்பட்ட சிற்றறிவும், அவ்வறிவளவே வியாபக அறிவின் அறிவொளியினை நினைப்பு மறப்பு என்னும் மாற்றங்களுக்கு உட்பட்டே பெறும். இறைவனைப் "பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே" என்றும், "ஆற்றின்பவெள்ளமே" என்றும் திருவாசகம் சிவபுராணம் அழைக்கிறது அன்றோ!

**திருவடி பரிபூரணம்** (சைவசித்தாந்த உரைநடை பக்கம் 58). நிறைகழல் (தேவாரம் 5991) என்று சிவபெருமான் திருவடியைத் தம் நிறை மொழியால் போற்றியுள்ளார் திருநாவுக்கரசர். இன்ன காலம், இன்னதேசம் என்பதின்றி எங்கும் நிறைகழல் சிவபெருமான் திருவடி ; என்றும் நிறை கழல் சிவபெருமான் திருவடி. காலதேசங்களாற் குறைவில்லா நிறைகழலாக — காலதேசங்கடந்த நிறைகழலாகத் திகழ்வது சிவபெருமான் திருவடி. நிறைகின்ற கழல், நிறைந்த கழல், நிறையும் கழல் என நிறைகழல் என்ற வினைத்தொகையை விரித்துப் பொருள் காணவேண்டும்.

"உரையால் உணரப்படாத" அடி என்று சிவ பெருமான் திருவடிச் சிறப்பைத் தாம் பாடியருளிய திருவடித் திருத்தாண்டகத்தில் திருநாவுக்கரசர் இசைத்துள்ளமையும் இங்கே நினைவு கூரவேண்டியுள்ளது. 'வாக்குக்கு அப்பாலான திருவடி' என்ற அரும்பொருள் தரும் 'வாசகாதீதஅடி' என்னும் சொற்றொடரை அருணகிரிநாதர் தாம்பாடியருளிய திருப்புகழில் சிறக்கச் சேர்த்திருப்பதும் சிந்தித்தற்குஉரியதே. (வாசகாதீத அடி, திருப்புகழ் 1283).

சொல்லாற் சுட்டப்படுவன காலதேசங்களாகிய எல்லைக்குள் அடங்கியனவேயாகும். காலதேசங் கடந்தது சொற் கடந்த ஞானநிறைவாகும். இறைவனின் ஞானத்திருவடி பேசும் உரையால் உணரப்படாதது. இவ்வாறு சொற் கடந்தும், காலமும் தேசமுங் கடந்தும் நிறைந்து விளங்கிப் பொலிவது சிவபெருமானின் சுத்த ஞானமேயான திருவடி. அகங்காரமாம் குறைவு சொல்லாற் சுட்டப்பட்டுக்கால தேச எல்லையுள் அடங்கி இருக்கும். கால தேச எல்லைக்குள்

அடங்கிய நான் என்னும் அகங்காரமாம் அறியாமைக் குறைவினின்றும் விடுபட்டுக் கால தேசம் கடந்ததும், நான் எனும் அகங்காரமாம் அறியாமைக் குறைவற்றதுமான அகண்டாகார ஞான நிறைவுடைய-ஆர-சிவபெருமானின் நிறைகழலை நன்ருக வானவரும் மாமுனிவரும் நின்று ஏத்துகின்றனர். ''நன்ருக வானவர் மாமுனிவர் நாடோறும் நின்ருர ஏத்தும் நிறைகழலோன்'' (திருவாசகம்—திருப்பூவல்லி 13). சிவபெருமானின் காலதேச எல்லையற்ற ஞான நிறைவான திருவடியை '' ஆர்ந்தநின் பாதம் '' என்று திருவாசகம்—திருச்சதகம் 69ஆம் பாடலிலும் பரவுகின்ருர் மணிவாசகர். சொற்கடந்த சிவஞான நிறைவான திருவடியைச் ''சொற்கழிவு பாதமலர்'' எனவும், திருவெம்பாவை —10ஆம் பாடலிற் போற்றியுள்ள மணிவாசகரின் மணிவாசகமும் இங்கே குறிக்கத்தக்கது. '' எங்கணும் திருக்கழலடி'' எனக் கந்த புராணமும், ''ஸர்வத: பாணி பாதம்'' எனப் பகவத்கீதை க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞ விபாகயோகம்—13ஆம் சுலோகமும் இறைவனின் திருவடி நிறைவை இசைத்ததும் உணரவேண்டிய உண்மைப்பொருளாகும்.

நீர் நிறைந்த குளமும் கோடைக்காலத்திற் சூரிய வெப்பத்தால் வற்றி நீர் குறைந்திருக்கும்; மழைக்காலத்திற் பெய்யும் மழையால்நீர் நிரம்பித்ததும்பும். பூரண சந்திரனும் கிருஷ்ண பக்ஷத்தில் தன் கலைகள் தேய்ந்து குறைந்து குறைமதியாகும்; சுக்ல பக்ஷத்தில் தன் கலைகள் வளர்ந்து நிறைமதியாகும். இவை எல்லாம் கால தேசத்தைச் சார்ந்து நீர் நிறைகுளமாகவும், நீர் குறைகுளமாகவும், நிறைமதியாகவும், குறைமதியாகவும் நிறைக்கவும் குறைக்கவும் படுகின்றன. காலதேச எல்லைக்குள் அடங்கியவை நிறைக்கவும் குறைக்கவும்படும். உதாரணமாக நம் மனமும் இன்சொல்லால்நிறைவுற்றும், வன்சொல்லால் குறைவுற்றும் மாறுதலுக்கு உள்ளாகிறதன்றே? ''மாற்றம் மனம்'' ''நிலையில்லா நெஞ்சம்'' என்று மனம் மாறுந்தன்மையை நாவுக்கரசரும், மணிவாசகரும், நவின்றுள்ளனர் அன்றே! சொல்லால் நிறைக்கவும் குறைக்கவும் இயலாததும், சொற்கடந்ததும், சொல்லால் சுட்டப்பெறும் மனம் கடந்ததும் ஆன நிறைவுகுறைவு இன்றி நிறைந்த நிறைவே சிவம். சிவம் வேறன்று; திருவடி வேறன்று. திருவடியே சிவம் ஆகும்.

திருமந்திரம் "திருவடியே சிவமாவது" என்று கூறுகிறது. இறைவன் திருவடி சொற்கடந்த ஞானநிறைவாதலின் மனமும் கடந்து நிறைவாய்ப் போக்கு வரவின்றி நிலையாக உள்ளது. எல்லையில் கழல் ஆதலின் நிறைவற நிறைந்தும், குறைவற நிறைந்தும், ஒழிவற நிறைந்தும் இறைவன் திருவடி உள்ளது, "மூலநிறைவு குறைவின்றி நின்றது" எனத் திருவானைக்காத் திருப்புகழில் முருகன் திருவடியின் வியாபகச் சிறப்பை விளக்குகிறார் அருணகிரிநாதப் பெருமான். "செவ்வேள் விமலமாம் சரணம்" என்று கந்த புராணம் யுத்தகாண்டத்தில் அரும்பொருட் செறிவு அமைய முருகப்பெருமானின் திருவடிச் சீர்மையைச் சூரபன்மன் உரைத்திருப்பதாக அருளிச் செய்துள்ளனர் கச்சியப்பசிவாசார்ய சுவாமிகள்.

ஆணவ மல அழுக்கு என்றுமே வந்து ஏறாத சுத்த ஞான நிறைவாக அங்கு இங்கு எனாதபடி எங்கும், அன்று இன்று எனாதபடி என்றும் வியாபகமாகப் பொலிவது முருகப்பெருமானின் விமல பூரணத்திருவடி. அகங்காரம் என்னும் ஆணவ மலம் கால தேசத்துக்குட்பட்ட அபூரண மாகும். அகண்டாகார ஞானமாகிய அமல—அகங்கார மல மற்ற திருவடிகால தேசங்கடந்த, பூரண நிறைவாகும். நான் என்னும் அகங்காரமாகிய ஆணவ மலத்தைச் சார்ந்தே கன்ம மலமும், மாயை மலமும் தொழிற்படுகின்றன. ஆணவமலம் இல்லையேல் கன்ம, மாயை மலங்களும் இல்லை. இறைவன் திருவடி ஆணவ மலமற்ற பரிபூரண மாகத் திகழ்தலின் கன்ம, மாயை மலங்களும் அத்திருவடியாம் சிவத்தைச்சார்வதில்லை. எவ்விதச்சார்பும் இன்றிப் பரிபூரண ஞானமாக விளங்கும் திருவடி, நிறை வைத்தேடும் ஆன்மாக்களுக்குப் பெருஞ்சார்பாக உள்ளது. இறைவன் திருவடி காலதேசங் கடந்ததாதலின் உரையாற் சுட்டப்படாத சுட்டற்ற பூரணமாகப் பொலிகிறது. திருவீரட்டானத்துச் செல்வன் திருவடியை "அணியனவும் சேயனவும் அல்லா அடி" எனத் தெளிந்துணர்ந்தவர் திருநாவுக்கரசர். நமது அருகில் உள்ளவற்றை அணிமை என்றும், தொலைவில் உள்ளவற்றைச் சேய்மைஎனவும் சுட்டு கிறோம். சிவபெருமான் திருவடி இடங்கால எல்லை கடந்த நிறைவாதலின் அணியனவும் (அருகிலுள்ளனவும்) சேயன

வும் (தொலைவில் உள்ளனவும்) அல்லா அடியாகும். "உரு என்று உணரப்படாத அடி" எனவும் திருவீரட்டானத்து இறைவன் திருவடியை உருகிப் போற்றியுள்ளார் திருநாவுக்கரசர். உரு என்று இறைவன் திருவடி கண்ணால் கண்டு உணரப்பட்டால் அஃது காலதேசத்துக்குள் அடங்கிய குறைவாக இருக்குமே அன்றிக் காலதேசங்கடந்த நிறைவாக இருக்காது. காலதேசத்துக்குள் அடங்கியவை கண்முதற் புலனால் காட்சி முதலியனவற்றுக்கு உட்பட்டு உணரப் படுவனவாம். ஆகவே இறைவன்திருவடி உரு என்று உணரப்படாத ஞான நிறைவாகும்.

நானற்ற ஞான நிறைவான திருவடிச் சார்பினால் உண்டாகும் பெருமிதத்தையும், இறு மாப்பையும் அகண்டாகார நிறைவாகவே கொள்ளவேண்டுமே அன்றி அகங்காரமாகிய குறைவாகக் கொள்ளக்கூடாது.

"இறுமாந்திருப்பன் கொலோ—ஈசன்
பல்கணத் தெண்ணப்பட்டுச்
சிறுமான் ஏந்திதன் சேவடிக் கீழ்ச் சென்று
இறுமாந்திருப்பன் கொலோ"

—திரு அங்கமாலை

என அகண்டாகார பரிபூரண ஞானத் திருவடியைச் சார்ந்து விளைந்த தமது இறுமாப்பைப் பக்தர் உலகுக்குப் பெருமிதத்துடன் பறைசாற்றுகிறார் திருநாவுக்கரசர். "யான் எனதென்றற்ற இடமே திருவடியா" (கந்தர்கலி வெண்பா-34 ஆம்கண்ணி) என்ற குமரகுருபர சுவாமிகளின் திருவாக்கும், திருவடியின் அகங்கார மமகாரம் அற்ற ஞானநிறைவைக்குறிப்பதாகும். அறிவும் அறியாமையுங் கடந்த சுத்த அறிவாம் திருவடியாகிய சிவம் ஆன்மாக்களின் உள்ளந்தோறும் போக்கு வரவற்று நிறைந்து நிற்றலால் ஆன்மாக்களின் அறிவைத் தூண்டிச் சிந்திக்க வைக்கிறது. ஆன்ம அறிவு சுத்த ஞானமாகிய பரிபூரணத் திருவடியாலேயே உணர்த்தப்படுகிறது. ஆன்மாக்களின் அறிவுக்கு அறிவாய் உணர்த்தும் திருவடியை,

"ஆதிஅந்தம் காட்டாது அகண்டிதமாய் நின்றுணர்த்தும்
போதவடிவாம் அடி"

எனத் தாயுமான சுவாமிகளும் எந்நாள் கண்ணி—தெய்வ

வணக்கம் 8ஆம் கண்ணியிற் பாடியருளியமையும் இங்குக் கருதத்தக்கது. வள்ளலார் தம்பிரான் எம்பிரான் செம் பொற்பதத்தை—திருவடியைப் ''பரசிவம் பூரணம்'' எனத் திருவடிப் புகழ்ச்சியில் பாடிப் பணிந்துருகிப் போற்றிய திரு வுளப்பாங்கினையும் இங்கே நினைவு கூர்வோம்.

ஆதலின் ''திருவடி பரிபூரணமாய் இருக்கும். அதற்கு இரண்டு கால் முளைத்திருக்குமோ? இல்லை'' என்று சைவ சித்தாந்த உரை நடை பக்கம் 58இல் கூறப்பட்டுள்ளதைக் காண்க. திருவடிக்கு இரண்டு கால் முளைத்திருப்பின் அஃது பரிபூரணமாக இருக்காது; கண்ணால் உருவெனக் காணப் பட்டுக் கால தேசத்துக்குள் அடங்கிய குறை பொருளாகவே இருக்கும். எனவே திருவடி உரு என்று கண் முதலான ஐம்புலன்களாலும் காட்சி முதலியனவற்றுக்கு உட் படாததும், மனங்கடந்ததுமான பரிபூரண ஞானமாக இலங்குகிறது. திருக்கோயில்களில் இறைவன் திருவுருவைக் காணுகையில் சர்வாதாரமான அவன் திருவடியை வணங்கு கிறோம். அப்போது கண்ணால் கண்டு காட்சிக்கு உள்ளாகித் தரிசனப் பொருளாக, உரு என்று உணரப்பெற்று இலங்கும் அத்திருவடியின் உண்மைப் பொருள் வாக்கு மனங் கடந்த பரிபூரண ஞானமே எனச் சிந்திக்கவேண்டும். ஆதலின் திருவடி தரிசனத்தின் போது, திருவடியின் உட் பொருள்—திருவடி என்பதன் உட்பொருள் போக்குவரவற்ற ஞானநிறைவான பரிபூரணம் என மனமார நினைப்போமாக.

ஆன்மாக்களின் உள்ளந்தோறும் போக்குவரவின்றி சுத்த அறிவேயாகி நிறைந்துள்ளது சிவபரம்பொருள். சிவபரம்பொருள் காலதேசங் கடந்தது; எங்கும், என்றும் நிறைவான அகண்ட பரிபூரணமாகும். ஆதலின் ஆன் மாக்கள் செய்யும் நல்வினை தீவினை ஆகிய இருவினைகளுக்கு ஏற்ப பிறப்பு இறப்புக்களைத் தந்து, அப்பிறப்பு இறப்புக் களுக்கு இடையே அநுபவிக்குமாறு இன்பதுன்பங்களை அவ்வான்மாக்களுக்குத் தருவதும் சுத்த ஞானமேயான சிவபெருமானின் திருவருளேயாகும். திருவருளே சிவபெரு மானின் சீகத்தம் (திருக்கரம்) ஆகும். திருவருளாகிய திருக் கரமே ஆன்மாக்களுக்கு அவைகளின்—இருவினைப் பயன்

களுக்கு ஏற்ப இன்ப துன்ப அநுபவங்களாகிய பொசிப்புக் களை ஊட்டுகிறது. இருவினைப் பயன்களை ஊட்டி ஆன் மாக்களைப் பொசிப்பிக்கச் செய்யும் திருவருளை அருளாகிய சீகத்தம் (பக்கம் 91) என்று பஞ்ச பூத தசகாரியம் தெரிவிக் கிறது. திருவருளாகிய திருக்கரம் நிறைவானது; முடி வற்றது. ஆகவே திருவருளை ''வளர்கின்ற நின் கருணைக்கை'' என்று திருவாசகம் நீத்தல் விண்ணப்பம் 4ஆம் பாடல் குறிப்பிடுகிறது. கந்தர் கலிவெண்பா (35 ஆம் கண்ணி) ''அருளதுவே செங்கை அலரா'' என்று பாடுகிறது.

**நின்மல வியாபகம்**:—(பஞ்ச பூதத்தில் தச காரியத்தின் வகை பக்கம் 92) உயிர்கள் (ஆன்மாக்கள்) மும்மலமாகிய பாசத்தினுல்—கயிற்றினுல் கட்டுண்டவை. ஆணவக் கட்டுக் குள் அகப்பட்டமையால் உயிர்களைக் கன்மம் மாயை என்ற பந்தங் (கட்டு)களும் பிணித்துள்ளன. செம்பிற்களிம்பு போல் உயிர்களை அநாதியே ஆணவ மலம் பற்றியுள்ள காரணத்தால் உயிர்களுக்குக் கன்மம் செய்யவேண்டும் என்னும் விருப்பம் தோன்றுகிறது. ஆணவம் கன்மத்திலே விருப்பம் கொடுத்தது என்று அநாதிப் பொருள் ஆறுக்கு வகை (பக்கம் 17) கூறுகிறது, நான் என்னும் எண்ணமே வினையாற்றவேண்டும் என்னும் விருப்பத்தைத் தருவதால் சைவ சித்தாந்தம் மேற்கண்டவாறு கூறுகிறது. நான் என்னும் ஆணவ மலம் கால தேசத்துக்கு உட்பட்டது. நான் என்னும் ஆணவ மலம் உடைய ஆன்மாக்கள் கால தேசத்துக்குட்பட்ட நல்வினை தீவினை ஆகிய கன்மங்களைச் செய்து, அக்கன்மங்களுக்கு ஏற்ப இறைவன் விதித்தவாறு இன்ப துன்பங்களை அநுபவிக்கும் பொருட்டுச் சுவர்க்க, நரக, பூமிகளுக்கு இடையே போவதும் வருவதுமாகப் போக்கு வரவுக்கு உள்ளாகின்றன. ஆன்மாக்கள் இந்நில வுலகிற் செய்த தமது நல்வினை மிகுதியின் பயனுக இறைவன் கூட்டுவிக்க இந்நிலவுலக வாழ்வை நீத்த பின்னர் சுவர்க்க இன்பத்தை நுகர்கின்றன. இங்ஙனமே இந்நிலவுலகில் அவை செய்த தீவினைமிகுதியின் பயனுக இறைவனுல் கூட்டு விக்கப்பெற்று இந்நிலவுலக வாழ்வை நீத்த பின்னர் நரகத் துன்பத்தை நுகர்கின்றன. ஆன்மாக்கள் இவ்வுலகில் தாம் செய்யும் நல்வினை தீவினை ஆகிய இருவினைகளின் கலப்பினுல் இன்ப துன்பங்களை இறைவன் கூட்டுவிக்க அநுபவிக்கும்

பொருட்டு மறுபடியும் இந்நிலவுலகிற் பிறக்கின்றன; இப் பூமியில் அநுபவிக்கவேண்டிய இன்ப துன்ப அநுபவங்களை அநுபவித்த பின்னர் உடம்பினை நீத்துச் செல்லுகின்றன. இவ்வாறு சுவர்க்க நரக பூமிகளுக்கு இடையே ஆன்மாக்கள் போக்குவரவுக்கு உள்ளாகின்றன. நான் செய்தேன் என்னும் ஆணவ மலத்தைச் சாராது, இந்நில உலகில் ஆன்மாக்கள் இறைவனாகிய பதியையே-போக்கு வரவற்ற அகண்டாகார ஞானமாகிய சிவத்தையே நாடிச் செய்யும் செயல்கள் பிறப்பு இறப்புக்களை ஆன்மாக்களுக்குத் தருவ தில்லை. பிறப்பிறப்பற்ற நிலையே அகண்ட பரிபூரண ஞான முத்தியாகும்.

ஆன்மாக்கள் ஆணவம் முதலிய மும்மல சம்பந்தமாக இருப்பதால் கால தேசங்களுக்கு உட்பட்ட குறைவுடையன வாக உள்ளன. குறைவுடைய உயிர்கள் அன்றோ கன்மங் களைப் புரிந்து போக்கு வரவுக்கு—பிறப்பிறப்புக்கு ஆளா கின்றன! ஆதலின் ஆணவம் முதலிய மும்மலப் பாசத்தாற் கட்டுண்ட உயிர்களுக்கு எங்கும் என்றும் நிறைந்திருக்கும் கால தேசங்களாற் குறைவில்லா நிறைவு இல்லை. நின்மலப் பொருளாம் இறைவனுக்கு—ஆணவம் முதலிய மும்மலம் அற்ற சுத்த சிவபரம்பொருளுக்கு இயற்கையாகவே என்றுமே மலபந்தம் (மும்மலச் சார்பு) இன்மையால் எங்கும் என்றும் நிறைந்திருக்கும் கால தேசங்களாற் குறை விலா நிறைவு உள்ளமை கருதத்தக்கது. ஆதலின் மலம் அவ்யாபகம் (குறைவு) ஆகும். நின்மலம் வியாபகம் (குறை விலா நிறைவு) ஆகும். தமிழ்வேதமாகிய திருவாசகமும், தேவாரமும் ''குறைவிலா நிறைவே'' எனச் சிவபரம் பொருளைப் போற்றுகின்றன. திருப்புகழும் முருகப்பெரு மானை ''விமல வியாபகா'' எனப்போற்றுகிறது.

**சைதன்னிய வாகனமான பிராணவாயு** :—(பஞ்சபூதத் தில் தசகாரியத்தின் வகை 98 ஆம் பக்கம்) நமது மனம் பர பரப்பாக உள்ளபோதும், நாம் சினமுறும்போதும் மூச்சும் பரபரப்பாகவே—விரைவாகவே நம்மிடமிருந்து வெளிப்படுகிறது. ஆகவே மனம் கலங்குகிறோம். மனம் அமைதியுறும்போது மூச்சும் அடங்கி அமைகிறது. ஆதலின் மனத்துக்கும் மூச்சாகிய பிராணவாயுவுக்கும்

நெருங்கிய தொடர்பு உள்ளது. பிராணவாயு மனத்தை அங்கும் இங்கும் அலைக்கிறது எனவும் கூறலாம். யோக நூல்கள் பிராண வாயுவை-மூச்சை அடக்க மனமும் அடங் கும் எனக் கூறும். நற்கந்தத்தையும் துர்க்கந்தத்தையும் சுமந்து சென்று நான்கு திசைகளிலும் அவற்றைப் பரவச் செய்வதால் வாயுவுக்குக் கந்தவாகனன் என்ற பெயர் உண்டு. அறிவும் அறியாமையுங் கடந்த சிவசூரியனின் சைதன்னியப் பிரகாசம் (அறிவொளி) மனமேகத்திற் படிந்து பிரகாசிக்கிறது, சைதன்னியப் பிரகாசம் படிந் திருக்கும் மன மேகத்தைப் பிராணவாயு தாங்கிச் செல்லு கிறது. பிராணவாயுவினால் சிவசைதன்னியப் பிரகாசம் படிந்த மனமேகம் தள்ளுண்டு செலுத்தப்படுகிறது. சூரிய ஒளி படிந்த மேகம் காற்றால் தள்ளுண்டு போக்கு வரவுக்கு ஆட்படும் போது மேகத்திற் படிந்த சூரிய ஒளியும் போக்கு வரவுக்கு உள்ளாவது போல் தோன்றுகிறது. ஆனால் மூல மான சூரிய ஒளிக்குப் போக்கும் வரவும் இல்லை. மேகத்திற் படிந்த சூரிய ஒளியே, காற்றால் மேகம் தள்ளப்பட்டு அலையும் போது தானும் அலைவுறுகிறது. அது போன்று சிவ சைதன்னியப் பிரகாசம் படிந்த மனமேகம் பிராணவாயு வினால் தள்ளப்பட்டுப் போக்குவரவுக்கு உள்ளாகும்போது மன மேகத்திற் படிந்த சிவசைதன்னியமும் போக்கும் வரவும் உற்று அலைகிறது. மனமேகத்திற் படிந்த சிவ சைதன்னியமே அலையும் அறிவு எனப்படும். "அலையும் அறிவை அகத்தே அடக்கும் அவனே அதிசூரன்" என்று தனிப் பாடலிலும் கூறப்பட்டுள்ளது. உண்மையிற் சிவசூரி யனின் சைதன்னியப் பிரகாசம் அறிவு அறியாமையற்று, நினைப்பு மறப்பற்றுப் போக்கு வரவாம் அலைவற்று அங்கு இங்கு எனாதபடி எங்கும், அன்று இன்று எனாதபடி என்றும் காலதேசங் கடந்து பிரகாசிக்கிறது. சிவசைதன்னிய ஒளி படிந்த மனமேகத்தைச் சுமந்து திரிந்தலைவதால் பிராண வாயு சைதன்னியவாகனன் எனப் பெயர் பெறுகிறது.

அறிவுக்கும் அறியாமைக்கும், நினைப்புக்கும் மறப்புக் கும், மகிழ்ச்சிக்கும் துயரத்துக்கும், இவை போன்ற இருமை வகைகளுக்கு ஆதாரமான பிறப்புக்கும் இறப்புக்கும் இடையே மனமேகம் சைதன்னிய வாகனனும் பிராணவாயு வினால் அலைக்கப்பட்டுப் போக்கு வரவுக்கு உள்ளாகிறது.

சைதன்னிய வாகனமான பிராணவாயுவினுல் தள்ளப் படும் நினைவுருவான மனமேகத்தின் எந்தப்பகுதி உதியாது, மறையாது ஒளிரும் சிவசூரியனின் அறிவும் அறியாமையுங் கடந்த அறிவொளியிற் படுகிறதோ,அப்பகுதியின் நினைவுகள் நினைக்கும் திறன்பெறும். அவ்வறிவொளி படாத மன மேகத்தின் மறுபகுதி நினைவுகள் ஆணவ மறைப்பாம் மறப்புக்கு உள்ளாகும். ''எல்லா நினைவுகளுக்கும் மூலமான நினைவு நான் எனும் நினைவே'' என்கிருர் பகவான் ரமணர். ''மனது எனும் யானும்'' என்று தாயுமான சுவாமிகளும் சுகவாரி 11ஆம் பாடலிற் பகர்ந்துள்ளார். மனம், தான் மனமாகப் பரிணமித்த நான் என நினைக்கும் நினைப்பைச் சாராது, அவ்வாணவ நினைவுக்கு நினைப்பாற்றலைத் தரும் நினைப்பு மறப்பற்ற பேரறிவாம் பரஞ்சோதியைச் சாரின், நினைப்பு மறப்பற்ற நிரதிசயானந்த நிலையாகிய பிறப்பிறப் பற்ற பூரண ஞானமுத்தியுறும். ஆணவமலமான நான் எனும் மூல நினைவே மனமாகப் பரிணமித்துள்ளதால் மன மேகத்தை ஆணவ மேகம் எனவும் கூறலாம். சிவசூரியனின் பிரக்ஞான-அறிவும் அறியாமையுங்கடந்த அறிவொளியைச் சுமந்து பிராணவாயுவினுல் தள்ளப்பட்டு அலையும் ஆணவ மேகத்தின் நிழலே அறியாமையாகும். பிரக்ஞானம் என்றும் ஒளிருகிறது. அஞ்ஞானமாகிய ஆணவமேகம் சைதன்னிய வாகனமும் பிராணவாயுவினுல் தள்ளப்பட்டு எங்கெங்கு அலைந்தாலும் அங்கங்கெல்லாம் சிவசூரியனின் அறிவொளியைச் சுமந்து திரிகிறது. ஆணவ மேகமாதலின் அதன் அறிவொளியும் அறியாமை மறைப்புள்ள சிற்றறி வாகவே ஒளிரும். கால தேசத்துக்கு உட்பட்ட ஆணவ மலத்துக்கே அறியாமை நிழல் உண்டு. சிதாகாசச் செழுஞ் சுடராம் சிவசூரியன், அறியாமை நிழலற்ற அறிவுப் பேரொளியாகும். பிரக்ஞான சிவசூரிய ஒளி ஆன்மாக்களின் நினைவு கூரும் ஆற்றலுக்குப் பேராதாரமாக மிளிர்கிறது. ஆணவத்தால் வரும் அறியாமை யாம் மாற்றம் என்றுமே இல்லாத-ஆணவம் அகன்ற அறிவு பிரக்ஞானம் ஆதலின் ஆன்மாக்கள் சிந்திக்கின்றன. இரவின் இருட்டால் மறைக் கப்படாதும் பகல் ஒளியால் விளக்கப்படாதும் மனத்தில் எழும் தோற்றங்களும் சிந்தனைகளும் திகழ்கின்றன. இரவின் இருளில் உலகின் புறப்பொருட்கள் மறைக்கப்பட்டுள்ள னவே? ஆயின் இரவிலும் மனத்தில் எழும் நினைவுகளும்

அந்நினைவுகளின் தொடர்பான தோற்றங்களும் மறைக்கப் படாது விளங்குகின்றனவே! இவ்விளக்கத்தின் ஆதார ஒளியே பிரக்ஞான பரசிவத்தின் அறிவும் அறியாமையுங் கடந்த பூரண அறிவொளியாகும். "இரவு பகல் போன ஞான பரமசிவ யோகதீரம்" என்று சோமநாதன் மடம் திருப்புகழ் கூறுகிறது. தாயுமான சுவாமிகளும் 14 ஆகார புவனம்-சிதம்பர ரகசியப் 20ஆம் பாடலிற் "பந்தம் அறும் மெய்ஞ்ஞானமான மோனப் பண்பொன்றை அருளி அந்தப பண்புக்கேதான் இராப்பகலாம் தோற்றம் இல்லை" எனக் கூறுகிறார். கால இட அளவைகள் கடந்த அலகில் சோதி யாம் ஞான சிவத்தை மணிவாசகர்"சோதியே சுடரே"எனப் போற்றித்துதிப்பார். "தொடர்ந்து இலங்கு சோதி நீ"எனக் கூடலாலவாயிலானைப் பரவுவார் ஞானசம்பந்தர். "அல்லும் பகலும் இல்லாத மெய்ச்சோதியே போற்றி" என மஞ்ஞலைய விளக்கம் மொழிகிறது. "மெய்ஞ்ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே" எனத் திருவாசகம்--சிவபுராணம் பாடு கிறது.

பூமியில் இயைந்து வாழும் நாம் சூரியனைத் தோற்றமும் மறைவும் உள்ள ஒளிப்பொருளாகவே காண்கின்றோம். ஆயினும் விஞ்ஞானம் சூரியனுக்குத் தோற்றமும் மறைவும் இல்லை என நிரூபித்துள்ளது. பூமி சுழலும்போது பூமியின் எப்பகுதி சூரிய ஒளியிற் படுகிறதோ அப்பகுதி பகலாகக் காட்சியளிக்கிறது. சூரிய ஒளி படாத பூமியின் மறுபகுதி இரவாகத் தோன்றுகிறது. இங்ஙனம் பூமியின் சுழற்சியால் பகலும் இரவும் மாறி மாறி வருகின்றன. மனத்தின் எப் பகுதியில் சிவசூரியனின் ஞான ஒளிபடுகிறதோ அந்நினைவுப் பகுதி நினைக்கும் திறன் பெறும். இதுவே நினைப்பாகும். இங்ஙனம் சிவசூரியனின் ஞான ஒளி படாத மனத்தின் பகுதி மறப்பாகும். இவ்வாறு நினைப்பும் மறப்பும் மாறி மாறி ஆன்மாக்களுக்கு வருகின்றன. சிவத்தின் பூரண அறிவொளி நினைப்பு மறப்பற்றது; அறிவு அறியாமையற்றது; போக்கு வரவற்றது; தோற்றம் மறைவற்றது. ' பூமியின் விரைவான சுழற்சி போக்கு வரவற்ற உதயாஸ்தமனம் அற்ற சூரிய னுக்குப் போக்குவரவும், உதயாஸ்தனமமும் இருப்பது போன்ற தோற்றத்தை உண்டாக்கிவிடுகிறதேயன்றிச் சூரிய னுக்குப் போக்கும் இல்லை; வரவும் இல்லை; தோற்றமும்

இல்லை; மறைவும் இல்லை'' என்று விஞ்ஞானம் நிரூபித்துள்ளது. ''போக்கு வரவின்றி, நினைப்பு மறப்பின்றி-தோற்றம் மறைவின்றி எப்போதும் உதயமாக-ஒருபோதும் மறைப்பின்றி ஞானஒளி சிதாகாசச் சிவசூரியனிடம் சுடருகிறது'' என்று மெய்ஞ்ஞானம் உணர்த்துகிறது. பூமியில் பொருந்தி வாழும் மக்களுக்குச் சூரியன் தோற்றமும் மறைவும் உள்ளதாகவே காணப்படுவது போன்று ஆணவம் முதலிய மும்மலங்களில் பொருந்தி அழுந்தியுள்ள ஆன்மாக்கள் சிவசூரியனின் ஞானப்பேரொளியை நினைப்பு மறப்பு, அறிவு அறியாமை என்ற தோற்றமும் மறைவுமாகிய மாற்றங்கள் உள்ளதாகப் பெறுகின்றன. ''ஒருத்தனுர் உலகங்கட்கு ஒரு சுடர்'' என்று சிவசூரியனுகிய தில்லைச் சிற்றம் பலவனைப்பாடுகிறுர் திருநாவுக்கரசர். காலதேச எல்லையுள் கட்டுண்ட உயிர்களே போக்குவரவுக்கு உள்ளாகின்றன. காலதேச எல்லைகள் கடந்து அநாதியே ஆணவம் முதலியமும் மலக்கட்டற்ற அநாதி முத்தனுன சிவபெருமான் போக்கும் வரவும் புணர்வும் இலாப்புண்ணியனுக-நிறை பொருளாக-அகண்ட பரிபூரணனுகத்திகழ்கிறுன். எங்கும், என்றும் நிறைந்திருக்கும் அறிவேயான சிவபரம் பொருளுக்குப் போக்கு ஏது? வரவு ஏது? போக்கு வரவின்றி நிறைந்த பரிபூரண அறிவேயாகச் சிவ பரம்பொருள் விளங்குவதால்தான் ஞாபகம் வந்தது என நாம் நவில்கிறேம். நமது ஞாபகத்துக்குக் காரணமான பேரறிவு நினைப்பு மறப்பின்றித் திகழ்வதாலேயே நமது ஆன்ம போதத்தைத் தூண்டி நினைவு கூர (ஞாபகமுற) வைக்கிறது. நமது புத்திக்கு ஞான ஒளி தரும் ஆதாரமாகிக் காலதேசங் கடந்தொளிரும் ஞான விளக்காம் சிவபெருமானை ''புந்திக்கு விளக்காய புராணன்'' எனப் போற்றுகிறுர் திருநாவுக்கரசர். ''சிவகுணமாவது அனவரதமும் ஒழியா அறிவாய் நிற்கை'' (சைவ சித்தாந்த உரைநடை பக்கம் 56) என்னும் இவ்வாக்கியம் என்றுமே ஆணவ மலம் இல்லாத சுத்த அறிவேயான சிவம், பிறப்பு இறப்பு, போக்குவரவு, நினைப்புமறப்பு, அறிவு அறியாமை, இரவு பகல் முதலிய இருமை வகையாம் மாற்றங்கள் இன்றி நிறைந்து நிலையாக இருக்கும் தன்மையைக் குறிக்கும். சிவஞானப் பேரொளி பிராணவாயுவினுல் அசைந்தலைந்து அணைக்கப்படாது காலதேசங் கடந்து சுடர்கிறது. ''வாதத்துக்கே அவியாதது'' என்று சிவஞானமாகிய அணையாது,

ஏற்ருது எவ்விதச் சார்புமின்றித் தானே ஒளிரும் மாரு ஞானச்சுடர் குறித்துக் குற்ருலத் திருப்புகழில் கூறுகிருர் அருணகிரிநாதர். காற்ருல் தள்ளுண்டு மேகங்கள் அலேயும். பெருவானம் காற்ருல் தள்ளப்பட்டுப் பெயருமோ? பெயராது.

எண்ணிலாப் பிறவிகள் தோறும் ஐம்பொறிகள் வாயிலாக ஆன்மாக்களாகிய நாம் அநுபவிக்கும் புலன் நுகர்ச்சி அநுபவங்கள், விஷய வாசனைகளாக நம் மனத்தின் ஆழத்தில் நுட்பமாகப் பதிந்துள்ளன. இவ்விஷய வாசனைகளே நம்மை நல்வினை, தீவினை ஆகிய இருவினைகளில் ஈடுபடுத்துகின்றன. விஷய வாசனைகள் நுட்பமாகத் திரண்டுள்ள நினைவுப்படலமாம் மனமேகம் பிராணவாயுவினுல் அலேக்கப் பெறும். சிதாகாசம் என்னும் அறிவுப்பெருவெளியாகத் திகழும் சிவபரம்பொருள் அகண்ட பரிபூரணமாய் நிறைந்து நிலேபெற்றிருத்தலால், பிராணவாயுவினுல் அலேக்கப் பெருது புடைபெயர்ச்சியாம் போக்குவரவற்றுப் பொலிகிறது. காற்று பற்றித் தீண்டும் பரிசத்துக்கு நம் உடம்பு இலக்காகிறதேயன்றி உடம்பின் உள்ளும் புறம்பும் நிறைந்த ஆகாசம் இலக்காகிறதோ? இல்லே. இங்ஙனமே பிராணவாயுவினுல் சிதாகாசமாம் சிவம் ஒரு போதும் தீண்டப்பெருது.

ஆனந்தமாய் இருப்பது பதி. அந்த ஆனந்தத்தை அநுபவித்து ஆனந்தமாய் இருப்பான் பசு. (பஞ்ச பூதத்தில் தசகாரியத்தின் வகை பக்கம் 99). ஆன்மாக்களுக்குச் சுக துக்கங்கள் மாறி மாறி வருகின்றன. ஏனெனில் சுக துக்கங்கள் கால தேசங்களுக்கு உட்பட்டவை. கால தேசங் கடந்தது சிவபரம் பொருள். ஆகவே சுக துக்கங்கள் இல்லாத ஆனந்தமேயானது சிவம். காலதேசங் கடந்த குறைவிலா ஆனந்த நிறைவே சச்சிதானந்த சிவம் என்று சைவசித்தாந்தம் பதி இலக்கணம் கூறுகிறது. ''ஆனந்தம் பிரம்மம்'' என்று தைத்திரியோபநிஷதம் பாடுகிறது,

சுக துக்கங்கள் நிலேயற்றவை என்பதை எண்ணிலாப் பிறவிகள் தோறும் அநுபவித்த சுகதுக்க அநுபவங்களின் மூலமாக உணர்ந்து தெளிந்த ஆன்மாக்கள், மாறுதல்

இன்றி நிலையாக உள்ள சச்சிதானந்த சிவத்தையே நாடிக் கால தேசங் கடந்து திகழும் குறைவிலா நிறைவான சச்சிதானந்தத்தை அநுபவித்து ஆனந்தமாய் இருக்கின்றன. வெளியுலகில் நாடும் சுக துக்கங்களின் நிலையாமையை உணர்ந்து கொண்ட உயிர்கள் – ஆன்மாக்கள் - நிரந்தர ஆனந்தமான சிவபரம்பொருளைத் தம்முள் உணர்ந்து அநுபவித்து மேற்குறித்தவாறு ஆனந்தமாய் இருக்கின்றன.

'விருப்புடன் வெறுப்பும் இல்லா வியாபக அறிவேயான' சிவபரம் பொருளைச் சிந்தித்து இம் முன்னுரையை நிறைவு செய்கிறேன்.

**எஸ். சாயிராமன்,**
*உதவியாளர்,*
*மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்திய கலாநிதி*
*டாக்டர் உ. வே. சாமிநாதையர்*
*நூல் நிலையம்.*

——o——

# சைவ சித்தாந்த உரை நடை நூல் தொகுப்பு

*டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் சேகரித்த சுவடிகளில் சில 'சைவசித்தாந்த உரை நடை' நூல்களாகத் திகழ்கின்றன. இவற்றில் பல ஆசிரியன் மாணவனுக்குச் சித்தாந்த தத்துவங்களைச் சிறிது சிறிதாக எடுத்துரைப்பது போல் எழுதப்பட்டுள்ளன. இவ்வாறுள்ள நூல்களில் சில இங்கே பதிப்பிக்கப்படுகின்றன. இத் தொகுப்பில் 9 தலைப்புக்கள் இவ்வாறு இடம்பெறுகின்றன. முதலில் உள்ள "சுத்த சிவப்பிரகாசக் கட்டளை" என்பதைத் தவிர்த்துப் பிற அனைத்தும் முதன் முறையாக இப்பொழுதுதான் அச்சேறுகின்றன. சுத்த சிவபிரகாசக் கட்டளை என்னும் நூல், இந் நூல்கள் காணப்படும் ஒரே சுவடிக் கட்டில் இருந்ததால் அன்று படித்தோர் எந்த நூல்களை ஒருங்கே படித்தனர் என அறிய உதவும் என்பதாலும், அச்சிடப் பெற்றிருப்பினும் கிடைப்பதரிதாகையாலும் இங்கு இணைத்து வெளியிடப் பட்டுள்ளது. இது போன்று இன்னும் பல நூல்கள் அச்சில் வர வேண்டியவை உள்ளன. அன்று தவ ஒழுக்கம் மேற்கொண்டு சிவ யோகத்தில் திளைத்த பெரியோர்கள் பலரால் இவ்வாறு தம் சீடர்களுக்காக இவை எழுதி வைக்கப் பெற்றிருப்பினும் இவற்றை யார் எழுதியவர் என்ற குறிப்புக் கிடைப்பது அரிதாய் உள்ளது. இந்நூல்களை 18, 19ம் நூற்றுண்டுகளில் தோன்றிய சித்தாந்த உரைநடை நூல்களுக்கு எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். இவற்றைப் படிக்கும்போது இன்றைய மாணவர்கட்கு பொருள் பெறுவது மிகவும் கடினமாக இருப்பது காணலாம். ஆயினும் ஒரு நூற்றுண்டுக்கு முன்னர் இவ்வழி மரபினோர்க்கு இவை தெள்ளிதின் உணரும் வகையில் திகழ்ந்திருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை.*

*இவை ஞான மார்க்க நூல்கள்; பத்தி மார்க்க நூல்கள் அல்ல. அறிவின் பால்பட்டு பல ஐயங்களைக் கேட்டு அவற்றிற்கு ஆதாரமான ஏற்கக்கூடிய பதில்களை எடுத்துரைத்து, இறுதியில் பகுத்தறிந்து ஏற்று அவ்வழி நின்று*

வீடு பேறெய்தல் இம்மரபாகும். சித்தாந்த சாத்திரங்களைப் படிக்கும் முன்னர் மாணவர், தருக்க சாத்திரம்-நியாய சாத்திரத்தின் அடிப்படைகளை அறிந்திடல் வேண்டும். அப்பொழுதுதான் அறிவியல்படி ஐயப்பாடுகளை எழுப்ப முடியும். பதிலைக் குறைவின்றி வழுவின்றி பிறழ்தல் இன்றி கொடுக்கமுடியும். ஆதலால் இந்நூல் தருக்க மரபுச் சொற்களை அதிகம் பயன்படுத்தும். அம்மரபு தெரியாதோர் இதற்குப் பொருள் தெளிதல் கடினமே. அத்வைதம், சிவாத்வைதம், விசிஷ்டாத்வைதம், துவைதம் போன்ற சித்தாந்தங்கள் பெருகப்பெருக சைவ சித்தாந்த நூல்களும் அம்மரபுக்கு ஏற்பத் தோன்றியதால் இவை சித்தாந்த மரபு என்றே சொல்லலாம்.

இருப்பினும் ஒரு சில தலைப்புக்கள் மிகவும் எளிமையாகவும், பக்திப்பாடல்களை மேற்கோள்களாகக் குறிப்பவையாகவும் உள்ளதைக் காணலாம், ஞான சாதகப் பனுவல் என்பதை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். இப்பகுதியில் தேவாரம், திருவாசம், திருமந்திரம், சித்தியார், பண்டார சாத்திரம், கந்தரலங்காரம், வரகுணராம பாண்டியர் மனைவி பாட்டு முதலிய பல பாடல்கள் காட்டப்பட்டுள்ளதைக் காணலாம்.

ஆயினும் இந்நூல்கள் பெரும்பாலும் "பண்டார சாத்திரங்கள்" என்று சொல்லப்படும் நூல்களைப் பின்பற்றியவை என்பது தெளிவு. சுத்த சிவப்பிரகாசக் கட்டளை என்னும் நூலின் இறுதியில் "துகளறு போதத்திலும், அம்பலவாண சுவாமி, தட்சிணாமூர்த்தி சுவாமி, சுவாமிநாத சுவாமிகள் செய்த நூல்களிலும் விரித்தறிக" என்று எழுதப்பட்டுள்ளது. இங்குக் கூறப்பட்ட அம்பலவாண சுவாமிகள் 10 நூல்களையும், தட்சிணாமூர்த்தி சுவாமிகள் இரண்டு நூல்களையும், சுவாமிநாத தேசிகர் இயற்றிய நூல் ஒன்றையும் இத்துடன் பேரூர் வேலப்ப தேசிகர் செய்த நூல் ஒன்றுடன் சேர்த்து மொத்தம் பதினான்கு நூல்கள் பண்டார சாத்திரங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இவைகள் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதால் இந்நூல்கள் பண்டார சாத்திரங்களைப்

பின்பற்றியவை எனத் தெரிகிறது. சுத்த சிவப்பிரகாசக் கட்டளையில் பேரூர் வேலப்ப தேசிகர் குறிக்கப்படவில்லை. ஆதலால் இந்நூல் அவருக்கு முன்னதாக எழுதப்பட்டிருக்கக் கூடும்.

சைவ மரபில் காணப்படும் பல சொற்கள், தத்துவங்கள், சுத்தி முதலிய முறைகள் இவற்றில் சுருக்கமாகத் தெளிவுபடுத்தப்படுகின்றன. எடுத்துக்காட்டாகச் சித்தாந்த மரபில் "அநாதிப் பொருள் ஆறு" என்பர். அவை கர்த்தா, ஆன்மா. பாசம், கன்மம், சுத்தமாயை, அசுத்த மாயை என ஆறு. இவை அநாதி. இவற்றின் தன்மை என்ன என்று உரைப்பது இந்நூல் தொகுப்பில் உள்ள இரண்டாவது தலைப்பு. மேலும் இந்நூல்களில் சில சொற்கள் சற்றுத் திரிந்து காணப்படும். எடுத்துக்காட்டு பந்தம் என்ற சொல் பெந்தம் என்றே வரும். புசித்தல் என்பது பொசித்தல் என வரும்.

இந்நூல்கள் பெரும்பாலும் திருவாவடுதுறை ஆதீனத்து மரபு வழி வந்தோராலும் தருமை ஆதீனத்து மரபு வழி வந்தோராலும் ஆக்கப்பெற்றவை எனத்தோன்றுகிறது. 'ஞானசாதகப் பனுவல்' என்னும் நூல்நமச்சிவாய தேசிகரை வணங்கித் திருச்சிற்றம்பல தேசிகரை வணங்கித் தொடங்குகிறது. இது மாதவச் சிவஞான யோகிகளால் எழுதப்பட்டது என்பர். பஞ்ச பூதத்தில் தசகாரியத்தின் வகை என்பது முத்துக்குமார தேசிகர் திருவடியை வணங்கி முடிவடைகிறது. டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் திருவாவடுதுறை ஆதினத்துடன் கொண்டிருந்த நெருங்கியதொடர்பை இங்கு நினைவு கூரின் இச்சுவடிகளின் தன்மை புலனுகும்.

உபநிஷத்துக்களில் 'பிருகுவல்லி' என்ற பகுதி ஒன்று புகழ் மிக்கது. அதில் ஆசான் மாணவனை நீ உண்மையறி 'என்பர்'. அவன் இதுவே உண்மைஎன ஒன்று சொல்வான், அதுவல்ல நீ மீண்டும் சென்று உண்மையை அறி என்பார். மீண்டும் வந்து இது உண்மை என்பான். அவரும் அது வல்ல மீண்டும் சென்று உண்மையை அறி என்பார்.

இவ்வாறு ஒவ்வொன்ருக ஆசான் இதுவல்ல இதுவல்ல எனப் புகட்ட இறுதியில் மாணவன் தெளிவு பெற்று உண்மையில் நிற்பான். அம்மரபைப் பின்பற்றி இத் தொகுப்பில் ஞானம் உணர்த்தும் முறைமை அமைந் துள்ளது காணலாம்.

இந்நூல்களிலிருந்து சில சமுதாயச் செய்திகளும் அறிய இயலும். பாளையக்காரர்கள் நிலை ஓங்கியிருந்த 18ஆம் 19ஆம் நூற்ருண்டில் இந்நூல்கள் தோன்றியிருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது. உதாரணமாக (பக்கம் 50) இரண்டு பாளையக்காரர் ஒன்றுக்கொன்று விரோத மாய் அரண்மனைச் சீமையெல்லாம் கொள்ளையிட்டுத் தீயும் கொளுத்திக் குடி படைக்கு நிரம்ப இடுக்கண் பண்ணிக் கொண்டிருந்தார்கள். இப்படி இருக்கின்ற போது சீமைக்கு நல்ல ராசாவந்து சீமையும் சுபிட்சப்பட்டுப்பாளையக்காரரும் அவரவர் தானங்களிலே ஒடுங்கிக்கொண்டிருந்து போனூர் கள்'' என்றுள்ளது. வரலாற்று நிகழ்ச்சியின் எதிரொலி யாகப்படுகிறது. ''பிறவியிலே படலம் மறைத்த கண்ணை வயித்தியன் வந்து உரித்தவுடனே அந்தக் கண் தானே பதார்த்தைக் காணமாட்டாது. ஆதித்தன் வந்து காட்டு கிறது போல'' என்று (ப.51) உள்ளது அக்காலத்திலேயே கண் வயித்தியம் அறுவை முறையில் நடைபெற்றதெனத் தொனிக்கிறது. சமுத்திரத்தில் தோணியைத் துடுப்பிட்டுத் தள்ளிக்கொண்டு செல்பவன் 'பரவன்' எனப்படுகிருன். (ப. 52) ஐயரவர்கள் நூல்நிலைய வெளியீடாக இப்போது தொகுப்பாகப் பதிப்பிக்கப் பெற்றுள்ள சைவ சித்தாந்த உரைநடை நூல்கள் ஒன்பதின் மூலச்சுவடிகளின் பெயர் களும், அச்சுவடிகளின் தொடர் எண்களும் வருமாறு.

741 சுத்தசிவப்பிரகாசக் கட்டளை
741B அநாதிப்பொருள் ஆறுக்குவகை
741C ஞானசாதகப்பனுவல்
628H சைவசித்தாந்த உரைநடை
594C உண்மை நிட்டை கூடும் உபாயம்

741A சுத்தாவத்தைக்குத் திட்டாந்தம்
624G உன்மனே வகுப்புத் தெரிசனே
623G ஞானம் உணர்த்தும் முறைமை
624E பஞ்சபூதத்தில் தச காரியத்தின் வகை

மேற்குறித்த சைவசித்தாந்த உரை நடை நூல்களுள் சுத்த சிவப்பிரகாசக் கட்டளை நீங்கலாக மற்ற எட்டு நூல்களும் இதுவரை அச்சிடப் பெருதவையாகும் "அநாதிப் பொருள் ஆறுக்குவகை," "ஞானசாதகப் பனுவல்" ஆகிய இரு ஏட்டுச் சுவடி நூல்களையும் ஐயரவர்களே தம்திருக்கரத்தால் பிரதி செய்துள்ளார்கள். இவ்விரு நூல்களுடன் சுத்த சிவப் பிரகாசக் கட்டளையும், சுத்தாவத்தைக்குத் திட்டாந்தமும் 741 என்ற எண் இடப்பட்டுள்ள ஒரு சுவடிக் கட்டிலேயே உள்ளன. சைவ சித்தாந்த உரைநடை, சுத்தாவத்தைக்குத் திட்டாந்தம் ஆகிய இரு ஏட்டுச்சுவடி நூல்களையும் பிரதி செய்தவர் இந்நூல் நிலையத்தில் முன்னுள் பண்டிதராகப் பணியாற்றிய திரு. **சொ. ஞானசம்பந்தம்** ஆவார்.

இந்நூல்நிலையத்தைத் தோற்றுவித்து வளர்ச்சியடைவதற்கு முதற்கர்த்தாவாக இருக்கின்ற திருமதி **ருக்மிணிதேவி** யாருக்கும், இந்நூல் நிலைய வளர்ச்சியில் பெரிதும் ஆர்வம் கொண்டுள்ள ஐயரவர்களின் பேரரும், நூல்நிலையக் கௌரவப்பாதுகாவலருமான திரு. **க. சுப்பிரமணிய ஐயரவர்களுக்கும்** எமது நன்றி.

இந்நூல் தொகுப்பில் உள்ள தலைப்புக்களை இந்நூல் நிலைய ஆராய்ச்சி உதவியாளராகப் பணிபுரியும் வித்துவான் **சு. பாலசாரநாதன்** பதிப்பித்துள்ளார். இவர் அநாதிப் பொருள் ஆறுக்கு வகை முதல் ஞானம் உணர்த்தும் வகை ஈருக உள்ள ஏழுநூல்களின் பிரதிகளை அவற்றின் மூலச் சுவடிகளுடன் ஒப்பு நோக்கித் திருத்தம் செய்துள்ளார். இந்நூல்நிலைய உதவியாளர் திரு. **சாயிராமன்** இதைப் பதிப்பிக்கப் பெரும் உதவியாக இருந்ததோடுமன்றி இந்நூலுக்கு நல்லதொரு முன்னுரையும் கொடுத்துள்ளார். இவ்விளைஞரின் ஆற்றல் பாராட்டி வளர்க்கத்தக்கது.

**இரா. நாகசாமி.**

# சைவ சித்தாந்த உரை நடை

## பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 1 | 15 | முட்டகைகுட் | முட்டைக்குட் |
| 1 | 15 | தொன்று து | தோன்று து |
| 1 | 17 | சுத்தாசுத்தத் | சுத்தாசுத்த |
| 2 | 8 | விசற்கம் | விசர்க்கம் |
| 2 | 18 | கர்பாசயம் | கர்ப்பாசயம் |
| 2 | 21 | விரிவி | விரிவு |
| 2 | 36 | விந்துவின்விரி | விந்துவின் விரிவு |
| 3 | 9 | பிரளயகலர்களுக்குத் | பிரளயாகலர்களுக்குத் |
| 3 | 33 | மாதிரியாகக் | மாதியாகக் |
| 4 | 4 | பராகாதியும் | அராகாதியும் |
| 4 | 28 | பூதவொரைவும் | பூதவொளியும் |
| 7 | 33 | முண்டேன்பது | முண்டென்பது |
| 8 | 5 | முதவியோரும் | முதலியோரும் |
| 9 | 2 | இனிகேவலம் | இனி, கேவலம் |
| 9 | 29 | அசனுதி | வசனுதி |
| 9 | 34 | முப்பத்தினுலு | முப்பத்து நான்கு |
| 10 | 8 | விசற்சித்தும் விசற்சியாமல் | விசர்க்கித்தும் விசர்க்கியாமல் |
| 10 | 25 | பத்துள் | பத்தும் |
| 11 | 23 | மூடமென்று | மூடமென்றும் |
| 11 | 26 | ஆதிசூக்குமவாக்கோடு | ஆதிசூக்குமவாக்கோடுங் |
| 11 | 28 | ஞெருழிலுள் | ஞெருழிலும் |
| 12 | 13 | வித்தை | சுத்த வித்தை |
| 12 | 32 | மூன்றும் ஒன்றும் | மூன்றும் இரண்டும் ஒன்றும் |
| 12 | 35 | சகலாதியு | கலாதியு |
| 13 | 8 | கழிந்து | கழித்து |
| 13 | 30 | நிகழும்வதரம் | நிகழும்அவதரம் |
| 14 | 5 | ஒருமலத்தார் | ஒருமலத்தார் இருமலத்தார் |
| 14 | 20 | சுத்தமாயையின் ஊர்த்துவபாகத்திலே | அசுத்தமாயையின் ஊர்த்துவபாகத்திலே |
| 18 | 17 | துலைத்து | துலைத்தது |
| 20 | 8 | பக்குவமென்று | அபக்குவமென்று |
| 98 | 1 | கேடும் | கெடும் |

சிவமயம்

சுத்த சிவப்பிரகாசக் கட்டளை

திருச்சிற்றம்பலம்.

# சுத்த சிவப் பிரகாசக் கட்டளை

பூதங்களாவன: *பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் 5.* ஞானேந்திரியங்களாவன : *சோத்திரம், தொக்கு, சட்சு, சிங்நுவை, ஆக்கிராணம் 5.* தன்மாத்திரைகளாவன:- *சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் 5.* கன்மேந்திரியங்களாவன—*வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம்-5.* அந்தக்கரணங்களாவன—*மனம், ஆங்காரம், புத்தி, குணம் 4. சித்தம் மனத்தின் அவத்தை விசேடமாகலான் ஒன்ருகவைத்து நாலென்றது. குணமும் அவ்வியத்தமாகிய பிரகிருதியு மொன்ருதலால் ஆன்ம தத்துவம் 24. இதற்கு* ஆன்ம தத்துவமென்றும் போக்கிய காண்டமென்றும், அசுத்த தத்துவம் *என்றும் பெயர்.* வித்தியாத் தத்துவங்களாவன—*காலம், நியதி, கலை,* வித்தை, *அராகம் இவை அஞ்சுங் கூடித் தத்துவ வன்ன ரூபஞகிய புருடனும், அனந்த தேவரால் அசுத்தமாயையிற் கலக்குண்டு முப்பத்தொரு தத்துவத்தையும் மயில் முட்டைகுட் சலம் பிறந்து தொன்ருது பொதுமையில் நிற்கும். அதோபாகமாகிய மாயா தத்துவங் கூட 7. இதற்கு* வித்தியா தத்துவமென்றும் சுத்தாசுத்தத் தத்துவ *மென்றும்* போக காண்டமென்றும் *பெயர்.*

சிவதத்துவங்களாவன—*சுத்தவித்தை, ஈசுரம், சாதாக்கியம், சக்தி, சிவம், 5. இதற்கு* சிவதத்துவமென்றும், சுத்த தத்துவமென்றும் பிரேரகாண்டமென்றும் *பெயர். ஆகதத்துவம் 36.* புறக்கருவிகள்—*கருவிகளாவன— பிருதுவியின் கூறு, மயிர், எலும்பு, தோல், நரம்பு, தசை-5. அப்புவின் கூருவன—ஓடுநீர், உதிரம், சுக்கிலம்,*

மூளை, மச்சை 5. தேயுவின் கூறுவன—ஆகாரம், நித்திரை, பயம், மைதுனம், சோம்பு 5. வாயுவின் கூறுவன—ஆடல், இருத்தல், கிடத்தல், நடத்தல், நிற்றல் 5. ஆகாயத்தின் கூறுவன—காமம், குரோதம், லோபம், மோகம், மதம் 5. ஆக பூத காரியம் 25. தசவாயுக்களாவன—பிராணன், அபானன் வியானன், உதானன், சமானன், நாகன், கூர்மன், கிரிகரன் தேவதத்தன், தனஞ்செயன் 10. வசனாதிகளாவன—வசனம், கெமனம், தானம், விசற்கம், ஆனந்தம் 5. நாடிகளாவன—இடை, பிங்கலை, சுழுமுனை, காந்தாரி, அத்தி, சிங்குவை, அலம்புருடன், சங்கினி, வயிரவன், குதன் 10. வாக்கு நாலு. சுத்த மாயாவிரி புலங்களாவன—சத்தம், பரிசம், ரூபம், ரசம், கெந்தம், 5. முன் சொல்லிய சத்தாதி வேறு. அது தன்மாத்திரையாகிய தத்துவம். இது விடையமாகிய புலன். முக்குணமும், அவ்வியத்தத்திலும் மூன்றுமகாரமும் ஆங்காரத்திலுமடங்கி ஆகம தத்துவத்துளடங்கும் வாக்கு நாலும் விந்துவில் அடங்கும். ஆகப் பத்தும் புறக்கருவியல்ல. ஆசயம் ஐந்தாவன—மூத்திராசயம், மலாசயம், ஆமாசயம், பக்குவாசயம், கர்பாசயம், 5. ஆக இந்த இருபத்தஞ்சும் கூடி பூத காரியம் இருபத்தஞ்சையும் பூததத்துவத்துளடக்கிப் புறநிலைக்கருவி 60 என்றுலுமொன்று ஆக தத்துவந் தொண்ணூற்றாறு. ஆக 121 விரிவி இன்னம் மிகுந்து விரியும். 1.

பரமசிவனுடைய பராசக்தியருளினாலே ஞான சக்தியில் ஒரு கூறு சுத்த மாயையிற் பதிய நாதந் தோன்றும். அந்த ஞானசக்தியிலொரு கூறு கிரியாசக்தியிலொரு கூறு நாததத்துவத்திற் பதியச் சக்திதத்துவந் தோன்றும், அச் சக்திதத்துவமாகிய விந்துவிலே இச்சா சக்தியிலொரு கூறு பதியச் சாதாக்கிய தத்துவந் தோன்றும். அந்தச் சாதாக்கிய தத்துவத்தில் இந்தக் கிரியை யேறி ஞானங் குறைந்து பதிய ஈச்வரதத்துவந் தோன்றும். இந்த மகேசுர தத்துவத்தில் ஒரு கூற்றிலே ஞான சக்தி மிகுந்து கிரியா சக்தி குறைந்து பதியச் சுத்த வித்தை தோன்றும். ஆக இவை ஐந்து தத்துவத்தின் காரணமாகிய சுத்தமாயையிலிருந்து சிவ தத்துவத்துடனே நாலுவாக்கும் ஐம்பத்தோரட்சரமும் எண்பத்தொருபதமும் சத்தகோடி மகா மந்திரங்களும் பத்து நாத முதலியதும் 20 புவனமும் பஞ்ச கலைகளும் தோன்றும். பஞ்சகலை விந்துவின் விரி என்றலு மொன்று.

விந்துவிலே பத்து விந்துவும் தோன்றும். இச்சுத்தமாயையிலிருந்து சுத்த கால முதலிய (31)ம் சரியையினுண்மைச் சரிதாதியுடையோர்க்குச் சாலோக மாதியும் வேதாகம புராண முதலிய பதினெண் வித்தையும் அபரமுத்தர் முதலிய சுத்த தத்துவவாசி கட்குத் தனுகரணாதியும் 28 புவன முதலியதுந் தோன்றும். இன்னும் இவற்றின் விரிவு வெகுவாயுள்ளன சிவாகமங்களுள் காண்க. இந்த அஞ்சு தத்துவத்தின் கீழே அசுத்த மாயையின் ஊர்த்த பாகத்தில் விஞ்ஞானகலர் பிரளயகலர்களுக்குந் தனுகரணபுவன போகாதியுந் தோன்றும். இந்த மாயையின் அதோ பாகத்திலே அநந்ததேவர் சக்திகலக்கக் கலக்குண்டபாகமாகிய ஆநந்தமயகோச வடிவமாகிய மாயா தத்துவந் தோன்றும்; இந்த மாயா தத்துவத்தில் ஒரு கூற்றிலே அநந்ததேவரது கிரியாசக்தியிலொரு கூறு பதியக் காலமும் நியதியும் கலையுந் தோன்றும். இந்தக் கலையிலொரு கூற்றிலே அநந்ததேவரது ஞான சக்தி பதிய வித்தையும் அவ்வியக்த குணமாகிய மூலப் பிரகிருதியுந் தோன்றும். இந்த வித்தையில் ஒரு கூற்றிலே அநந்த தேவரது இச்சா சக்தியிலொரு கூறுபதிய அராக தத்துவந் தோன்றும். அநந்ததேவராதிகளிடத்திலிருந்து பதியு மிச்சையாதிகளெல்லாம் திரோதையிலொரு கூறு. ஸ்ரீகண்டருத்திராதி மூவரிடத்திலிருந்து பதியுஞ் சக்திகளுந் திரோதையிலொரு கூறாகிய இச்சையாதியில் ஸ்தூல தூலம் போல வந்த அவதரமெனக் கொள்க. இந்த தத்துவம் அஞ்சுங் கூடியது, புருட தத்துவமெனப் பொதுமையாநின்ற ஆன்மாவுக்குப்பெயர். விஞ்ஞானமய கோசமும் இவற்றுளடங்கும். இது பொதுப்புருடதத்துவம். பஞ்சக் கிலேசங் கூடினஅவதரம் இந்த ஆன்மாவுக்குச்சிறப்புப்புருடனென்று பெயர். இந்தக்—கஞ்சுக சரீரம் அபரமுத்தி பரியந்தம் நீங்காது கலாதியோடுஞ் சேர்விலனென்றது காரண கேவலம். காரிய கேவலத்திற் கலாதி கஞ்சுகத்துடன் சகல கேவலமாயுறுவன். அவ்விடத்திற் கலாதி தொழிலற்று ஆன்மாவுடன் கிடக்கும், ஒரு கணப் பொழுது துரிய மாதியில் சூக்கும மாதிரியாகக் கலாதி தொழிற்படும். ஒரு கற்பத்தில் மூலப்பிரகிருதி அநந்ததேவர் சக்தியால் தோன்றும் ஒரு கற்பத்தில் ஸ்ரீகண்ட ருத்திரராகிய குணி ருத்திரர் சக்தியில் ஒரு கூறு கலையிற் பதியக் கலையினின்றும் அவ்வியக்த குண வடிவாகிய மூலப்பிரகிருதி தோன்றும். அம்மூலப் பிரகிருதி

யிலே உருத்திரசக்தி பதியப்பதிய அவிச்சையாதியைந்தும் வியக்த வடிவாகிய முக்குணமும் புத்தியுந் தோன்றும். புத்தியிலே உருத்திர தேவநாயனரது இச்சா ஞானக்கிரியை பதியப் புத்தியில் பராகாதியும் புத்தியில் ஞானுதியும் புத்தியில் கிரியை யாதியும் அநேக விதங்களாய் விரிந்து தோன்றும். இப்புத்தியினின்றும் ஆங்காரந் தோன்றும். இந்த ஆங்காரம் ஒன்ருகவிருந்து மூன்றுவிதமாய் ருத்திர தேவநாயனரிச்சையாதியினலே விரியும், - அது தைசத வாங்காரம் வைகரியாங்காரம் பூதாதியாங்காரமென முக்குண ரூபமாய் அவ்வப்பொருளுண்மையறியப் பெயர் பெறும். அந்தத் தைசத வாங்காரத்திலொரு கூற்றிலே சத்துவ குணரூபமாகிய மனமும் ஞானேந்திரியம் ஐந்துந் தோன்றும். மனத்திலொரு கூறே சித்தமென்பது வேறில்லை. இராசத ஆங்காரத்திலொரு கூருகிய வைகரியிலே கன்மேந்திரியம் ஐந்துந் தோன்றும். பூதாதியாங்காரத்திலொரு கூற்றிலே ருத்திர தேவநாயனர் கிரியா சக்தி பதியச் சத்தாதி தன் மாத்திரையைந்துந் தோன்றும். சத்த தன் மாத்திரையில் ஆகாசமும் பரிச தன்மாத்திரையில் வாயுவும் ரூப தன்மாத்திரையில் தேயுவும் இரச தன் மாத்திரையில் அப்புவும் கந்த தன்மாத்திரையில் பிருதுவியுந் தோன்றும். இந்தப் பூதமைந்தினும் புறக் கருவிகளெல்லாம் தோன்றும். அன்னமயம் பிராணமயம் மனேமய மாதி மூன்று உடலும் ஆத்ம தத்துவங்களாகிய கோசவுடல். இந்த வித்தியா தத்துவத்தில் விஞ்ஞானமய கோசமும் ஆனந்த மயகோசமுமாக ஐந்து அவத்தைப்படும். ஐந்திடத்திலுமுண்டான உடலெனவறிக. முன் சொன்ன தாமத குணக் கூற்றிலிருந்து பூதவிருளுஞ் சத்துவ குணக் கூற்றிலிருந்து பூதவொரையும் உண்டாயதெனவறிக. ஒடுங்குங் காலந் தோன்றின முறையிலொடுங்கி 24-ம் உருத்திரனிடத்திலும் ஆறும் அனந்த தேவரிடத்திலும் சுத்ததத்துவம் சக்தியிலுஞ் சக்தி சிவத்திலொடுங்குமென்பது ஆன்ம தத்துவமிருபத்திஞலினும், மும்மூர்த்திகளாகச்சொல்லியது பிரம விஷ்ணுக்களிடத்திலே ருத்திரர் சக்தி பதிந்து அவர் ஏவலாற் படைத்தல் காத்தலாதி அவாந்தரத் தொழிலென்பதறிக. அனந்த தேவர் முதலியோர் செய்யும் முத்தொழிலெல்லாம் ஏகதேச முத்தொழில் நிவர்த்திகலை முதலிய ஐவகையிலிறுதிச் சங்காரமாகிய சருவசங்கார முதலிய சர்வ

காரணனே சங்கற்ப மாத்திரையால் சர்வகிருத்தியமும் செய்வது. மற்றைக் கடவுளர்கள் தாய் தந்தை முதலியோர்கள் போல அவாந்தரகாரணரென்பதறிக. 3.

பிருதுவி உரத்துத் தரித்தல் முதலிய குணந் தொழிலாதியையுடையது. அப்பு குளிர்ந்து பதஞ் செய்தலாதியையுடையது. தேயு சுட்டு ஒன்றுவித்தலாதியையுடையது. வாயு சலித்துத் திரட்டலாதியை யுடையது. ஆகாசம் நிரந்தரமாயிடங் கொடுத்தலாதியையுடையது. பொன்னிற முதலியதும் நாற்கோணமுதலியதும் அட்சரம் அதிதெய்வம் கலைமுதலியதும் சத்தமாதிய குணமுதலியதும் விரித்தறிந்து கொள்க. சோத்திரம் சத்த கோடிகளையறியும். தொக்குபரிச கோடிகளையறியும். சட்சு உருவ கோடிகளையறியும். சிங்நுவை ரசகோடிகளையறியும். ஆக்கிராணம் கெந்தகோடிகளையறியும். வாக்கு வசனிக்கும். பாதங் கெமனம் பண்ணும். பாணியிடுதலேற்றல் செய்யும். பாயு மலசலத்தைப் பிரிக்கும். உபத்தம் ஆனந்தத்தை விடும். சித்தம் சிந்திக்கும். மனம் அதைப்பற்றிச் சங்கற்ப விகற்பஞ்செய்து ஐயப்படும். ஆங்காரமானது மனம் ஐயப்பட்டதையின்னதென்று நிச்சயிக்க வேண்டுமென்றும் ஒருப்பட்டெழுந்திருக்கும். அதன் பின்பு புத்தி நிச்சயிக்கும். இந்தப் புத்தி நிச்சயித்த சத்தாதிபோக்கியம் ஐம்பொறிவழியானே மனத்தின் வழிச் சென்று புத்தியிலே வந்த பிறகு புத்திதத்துவமானது வினைக்கீடாகிய சத்தாதிப்பிரமேயங்கள் முக்குணமாய்ச் சடுதியிலே பரிணமிப்பதைப் புருடதத்துவச் சொரூபியாகிய ஆன்மஞானம் அவ்வப் பிரமேயமயமாய்ச் சுக துக்க மோக வடிவாயறிந்து அழுந்தும். இதுவே ஆன்மாவுக்குச் சுகதுக்கமாகிய போகமெனவறிக. இது சித்தம் மனம் ஆங்காரம் புத்தி குணம் முறையாய்ச் சத்தாதி போக்கியம் வந்து புருடான்மாவுக்குப் போகமாம். இதுவே **தன் வேதனைக் காட்சி**யென்பது. ஆகமம் வல்லாராற் கேட்டறிக. மாயையிற் கலக்குண்ட அதோபாகமாகிய மாயா தத்துவமே காரண சரீரமாய் நின்று மயக்கும். காலஞ் செல்கால முதலியன வாய்த்தூல சூக்கும பேதாதியிலெண்ணிலா வகையாம். நியதி எண்ணிலாத கன்மங்களை ஏறுமாற் குறையாமல் அவரவர் கன்மவரையறைக்குத் தக்க நிச்சயம் பண்ணும். கலை அளவிலாவுயிர்களிடத்திலும் அளவிலாவகையாய் ஆணவத்தைச்

சிறிது நீக்கியுயிர்கள் கிரியாசக்திகளைச் சற்றேயெழுப்பும். வித்தை ஆன்மாக்கள் ஞானசக்தியைக் கொஞ்சமெழுப்பும். அராகம் பெற்றதைச் சிறிதாக்கிப் பெருததிலே யிச்சையை யுண்டாக்கும். புருடன் புத்தியிற் பரிணமித்த சத்தாதி விஷயத்திலழுந்தும். இந்த வித்தியாதத்துவம் ஆறும் பிரளையாகலருக்குத் தனுகரணதியாயிருக்கும். விஞ்ஞானகலருக்கு அசுத்த மாயைக்கு மேலே சகலருக்குப் பிரகிருதி மாயைக்குள்ளே தனுவாதியெனவறிக, சகலராவார் வினைமுதற் கிருமியீருகிய உயிர்கள். பிரளையாகலர் புவனகர்த்தர்கள் முதலிய அணுருத்திரர். விஞ்ஞான கலராவார் மயேச்சுரராதியோர். இனிச் சுத்த வித்தை ஞானம் ஏறிக் கிரியை குறைந்திருக்கும். ஈசுரம் கிரியையேறி ஞானங்குறைந்திருக்கும். சாதாக்கியம் ஞானமும் கிரியையும் ஒத்திருக்கும். சக்தி கிரியையாயிருக்கும் சிவதத்துவம் ஞானமாயிருக்கும். சிவதத்துவம் சிவனுக்கிடம். நாதம் இலயம் நிட்களம் முதலிய பெயர் பெறும். இதிலுள்ளவாகி, வாகீசுவரருக்குமிப் பெயர் பெறும். சக்தி தத்துவம் காருண்யத்துக்கு இடம், விந்து முதலிய நாமமுடையது. சாதாக்கிய தத்துவம் அநுக்கிரகத்துக்கு இடம், போகம் சகளநிட்களம், உத்தியுக்த முதலிய நாமங்களையுடையது, இதிலுள்ள கடவுள் முதலியோர்க்கு மிப்பெயர்களுடையது. முன்னை இரண்டும் அரூப தத்துவம். இது ரூபாரூபதத்துவம், இனி உருவ தத்துவம் ஈசுவரம் திரோபவத்துக்கிடம். தூலதத்துவம் சகளம் அதிகாரம் பிரவிருத்தி முதலிய நாமங்களுமுடையது. சுத்த வித்தை சங்காரத்துக்கிடம். உருத்திரம் தூலாதிகார முதலிய நாமங்களுமுடையது. மாயை முதலிய முப்பத்தொரு தத்துவங்களுக்கும் அதிதேவதை பரியாய நாமங்களும் விரிந்த நூலுட்காண்க. பரவிந்து பரநாதம் அபரநாதம் அபரவிந்து முதலியனவும் புறக்கருவிகள் நிறம் குணம் தொழில் முதலியன எல்லாம் விரிக்கிற் பெருகும். 4.

பிருதுவி தத்துவ மானது—அப்பு தத்துவத்துக்குள் வியாப்பியமாயிருக்கும். இந்தப் பிருதுவி தத்துவத்துக்கு மேலுங்கீழும் பக்கமும் பதிற்று மடங்கு அதிகமாய் வியாபித்திருக்கும், அப்பு தத்துவம். தேயுவுமிப்படி. அப்புவுக்குப் பத்து மடங்கு வியாபகமாக விருக்கும். வாயு ஆகாசம் தன் மாத்திரை சத்தாதி தத்துவங்கள் மனம் ஆதி ஆக ஆன்ம

தத்துவம் வரை யொன்றுக்கொன்று பதின் மடங்கு அதிக மாய் முறையே வியாபித்திருக்கும். புருடன் அராக முதலிய வித்தியா தத்துவங்களு முன் போல நூறு நூறுமடங்கதிகமதிகமாக வியாபித்திருக்கும். அப்பாற் சுத்த வித்தையானது கால தத்துவத்துக்கு மேலும் கீழும் நடு வும் பக்கங்களும் வியாபித்து ஆயிர மடங்குஅதிகம் வியாபக மாயிருக்கும். அதற்குமேல் ஈசுர தத்துவ முதலிய மூன்றும் பதினுயிரமும் நூறுயிரமும் பத்து நூறுயிரமுமாய் வியாபித் திருக்கும். சக்தி தத்துவத்தை நோக்கிச் சிவ தத்துவம் அளவிறந்த கோடி மடங்கதிகமாய் வியாபித்திருக்கும். அதற்கு மேல் கிரியா சக்தி யிப்படி அளவிறந்த 36 தத்துவம் முதலிய ஆறுஅத்துவாக்களெண்ணில்லாதஎல்லாவற்றையும் அளவிறந்த கோடி வியாபகமாய் எங்கெங்கு மொன்றுயும் வேருயும் முடனுயும் வியாபித்திருக்கும். இந்தக் கிரியா சக்தியுஞ் சிவனுடைய ஞானசக்தியில் அளவிறந்த கூற்றி லொரு பங்கு இந்த ஞான சக்தியுமிச்சா சக்தியில்அளவிறந்த கூற்றிலொரு பங்கு இந்தக் கிரியை ஞானங்களுக்குள்ளாக எண்குணமாகிய சாட்குண்ணிய விரிவுகள் அளவிறந்தன. இவைகளும் திரோதையாகிய ஆதி சக்தியில் அளவிறந்த கூற் றிலொரு பங்கு. ஆதி சக்திக்கு மேலுங் கீழும் நடுவு பக்கமும் அனந்தங் கோடி எண்ணிறந்த பங்கதிகமாய்ச் சர்வ வியாபக மாய்ப் பராசக்தி யருள். இந்த அருள் அளவிறந்து செறிந்து பேரறிவானந்த அதீதமயமாய் நிற்பது. நேயமாகிய குணி சிவமென்பது. இது கயிலாய பரம்பரையில்அனுபவமுடைய தேசிகரை வழிபடு முறையில் வழிபட்டுச் சிவ போதமாகிய வுண்மை ஆகமங்களைக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து பார்த்தல் கிருகித்தல் தழுவுதல் ஆவேசித்தல் அது வாதல் முதலியன அனுபவத்தாலறிக. இது சருவ சங்க பரித்தி யாகம் பண்ணுதவர்களுக்குச் சித்தியாதலரிது. இந்த மெய் கண்ட நூற் பொருளை அந்தக் குருபரம்பரையில் அனுபவ தேசிகர் திருவருள் பெருது தானுகை எழுத்துப் பார்த்த பொய்க் குரு பரம்பரையிற் கேட்டாலும் பார்த்தாலும் பெரிய பிராயச்சித்த முண்டேன்பது சிவதருமோத்தரம் முதலிய சிவாகமத்தாலறிக. 5.

இந்தத் தத்துவ முப்பத்தாறிற் பிரேரகக் கருவி 5. வித்தியாதத்துவமும் அகக்கருவி. அந்தக் கரணம் அகப்புறக்

கருவி; இந்திரியம் பத்தும் புறக்கருவி; தன்மாத்திரையாகிய சத்தாதியும் பூதம் அஞ்சும் ஆகப் பத்தும், புறப்புறக் கருவி புறப்புறக் கருவியைப் பொருளாகக் கொண்டது. உலகாயதன் முதல் புத்தர் ஈறுகிய சமயம். புறக்கருவியைப் பொருளாகக் கொண்டது. சயினன் முதவியோரும் புத்தரிலொரு சாராருமாம். அகப்புறக் கருவியைப் பொருளாகக் கொண்டோர் தார்க்கிகன் முதல் சாங்கியர் ஈறுனவர் அறுவரும். அகக்கருவியைப் பொருளாகக்கொண்டோர் வேதாந்தத்தினிற்குங் கபால முதல் சக்திமத முதலிய அறுவரும் ஆகக் காலதத்துவவரை தத்துவங்களின் முத்தி பெறுவர். இப்பதினெட்டுச் சமயங்களும் பொருளல்லவற்றைப் பொருளென்று கொண்ட பொய்தரு சமயமென்றறிக. காலாதீதமாகிய பிரேரக தத்துவத்தினிற்கும் மெய்தரு சமையம் ஆறு, அது சிவாகமத்துள் வந்த எட்டுச் சைவரும் எனவறிக. அப்பால் ஆறத்துவாதீதத்தில் வந்த சுத்த சைவரும் சூக்கும இலய சிவத்தைப் பொருளாகக் கொண்டார். இவர்களுக்கும் எட்டாத சித்தாந்திகள் அருளினுங் குணியினு நிற்கு முண்மையாளரெனவறிக. 6.

சுத்த தத்துவத்துக்குள்ளே சுத்தாவத்தை கொண்டோரெண்மருஞ் சிறிது சுத்த தத்துவங்களுக்குள்ளேயுஞ் சிறிது சிவதத்துவாதீதத்தும் பேசிக் கொண்டவன் சுத்த சைவன். சித்தாந்த சைவர் முப்பத்தாறும் விட்டு அப்பால் ஆத்ம வியாபக தெரிசனமாதி முதற் சாக்கிராதி கொண்டவர்களாகையால் சித்தாந்த சைவத்துக்குச் சுத்த சைவரீறுனவர்களெல்லாம் அங்கம் உபாங்கம் பிரத்தியாங்கங்களாதியாய்ப் புறம் புறப் புறமாகிய நாத்திக பொய்தரு சமயங்களென்று அகற்றுக. 7.

இந்த எட்டுச் சைவரும் நாலுவகையா யடங்குவர். இந்திரியத்தால் வழிபடும் தாதமார்க்கரும் இந்திரியத்தாலும் மனத்தாலும் வழிபடும் புத்திரமார்க்கரும் மனமாதிப் பிராஸாத கலைப்பாச ஞானங்களால் வழிபடுஞ் சகமார்க்கரும் தற்போதத்தால் வழிபடும் பொது ஞானமார்க்கரும் என 4. இவர்களுக் கெல்லாமெட்டாத அத்துவாதீத சன்மார்க்கங்களும் அறிந்து வியாபித்துச் சருவ வியாபகவறிவால் வழிபடுஞ் சிவ ஞானிகளே முதன்மை, மற்றையோரெல்லாம் வழிப்பட்டவர்கள். சித்தாந்த சைவத்துக்கு மேலே

நிலையில்லை. இதுவே முடிந்த பரமுத்தி நிலையென்றறிக. இனி **கேவலம் சகலம் சுத்த**மென மூன்று அவத்தையுண்டு. அவற்றுள் கேவலமாவது கருவி ஒன்றுங்கூடாது மல மாத்திரமாய் நின்ற அவதரம். சகலமாவது எல்லாக் கருவிகளோடுங் கூடிநின்று வினைப்பயனை அனுபவிக்கும்அவதரம். சுத்தமாகுவது கருவிகளும் வினையும் பற்றற வாசனையை நீங்குமவதரம். இந்த மூன்றில் சகலஅவத்தை ஒன்றிலே மூன்றவத்தை யுண்டு. அது சகலத்திற் கேவலம், சகலத்திற் சகலம், சகலத்திற் சுத்தம் என மூன்று வகைப் படும். இவற்றுளுணர்த்து முறைமைத் தானமாகிய இலாடத் தானத்தினின்று நீங்கி மூலாதாரத்திற் செல்லும் போது மூலாதாரத்தினின்று நீங்கி இலாடத் தானத்திற் செல்லும். இலாடம் கண்டம் இலயம் நாபி மூலமென்று ஐந்திடங்களினு நிகழும். ஐந்தவதரம் சகலத்திற் கேவலம். இதய முதல் துவாதசாந்த பரியந்தம், பிரத்தியாகார முதல் யோகமார்க்கமாய்ப் படுமைந்தவதரம் சகலத்திற் சுத்தம். இவற்றுட் கருவி முப்பத்தாறும் புறக் கருவி அறுபதும் ஆகத் தொண்ணூற்ருறு தத்துவங்களோடுங் கூடி நின்று பிரேரக அவத்தையில்கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறிந்து வரும் ஆன்மா. அங்ஙனந் தொழிற்படுந் தத்துவங்களுள் சோத்திராதி வாக்காதியாகிய பத்து இந்திரியங்களும் விடையங்களை விடையிக்கும்போது அவற்றிற்குத்துணையாய் உடனின்று ஊக்கத்தினை விளைவிப்பனவாகிய பூதமைந்து தன்மாத்திரை ஐந்தென்னும் பத்து தத்துவங்களும் தத்தந் தொழில்கள் அனைத்தும் சத்திமடங்கி வினைக் கீடாகத் தொழிற் படா தொழியும். பூதமொழியவே பூத காரியமாகிய புறக்கருவி அறுபதில் ஆங்காரத்தாற் செலுத்தப் படும். பிராணுதி நாகாதி வாயுப் பத்தும் புத்தியானிச்சயிக் கப்படும் சத்தாதி அசனுதி விஷயம் பத்தும் அவ்விரண்டு தத்துவமுள்ளளவு நிற்குமாதலின் அவை யொழிந் தொழிந்த நாற்பது புறக்கருவியும் அப்பூதங்களோடு நீங்கும். இவ் வைம்பது கருவியும் நீங்கிய வழி யேனையிந்திரியம பத்தும் அந்தக்கரணங்கள் நான்கும் வாயுப் பத்தும் விடையம் பத்தும் ஆகிய முப்பத்திறுலு கருவியும் அவற்ருேடுங் கூடிச் சீவிக்கும் புருடதத்துவமும் புருடதத்துவத்திற்கு ஏதுவாகிய மனேவியும் கஞ்சுகமும் போலுடனுய் நிற்கு மூலப் பிரகிருதியும் கலாதி பஞ்சகஞ்சுகமும் கலாதி பஞ்சகஞ்சுகத்

த்தைப் பிரேரிக்கும் சுத்த தத்துவ பஞ்சக மென்னு முப்பத்தி ரண்டுமாக நாற்பத்தாறு கருவியும் தத்தந் தொழில் செய்து கொண்டு நிற்பினுந் தன் மாத்திரையும் பூதமும் பூத காரியங்களும் நீங்கினமையால் வலி குறைந்து இந்திரியங்களின் தொழிற்பாடு மெத்தென நிகழுமாதலின் அதனானே கண்டுங் காணாமற் கேட்டுங் கேளாமற் சுவைத்துஞ் சுவையாமல் மோந்தும் மோவாமற் பரிசித்தும் பரிசியாமற் கெமனித்துங் கெமனியாமல் வசனித்தும் வசனியாமல் விசற்சித்தும் விசற்சியாமல் ஆநந்திந்தும் ஆநந்தியாமலிப்படி பத்து இந்திரியங்களுடைய தொழிலும் தளர்ச்சியாய் நிகழுமவதரம் சகலத்திற் கேவல சாக்கிரம். இனி இந்திரியங்களுஞ் சத்தி மடங்கித்தொழிற்படாமல் இலாடத்தானத்தின்நின்றொழிந்த வழி ஏனையந்தக் கரணங்கள்நான்கும் விடையம் பத்தும் வாயு பத்தும் ஆகிய இருபத்தினாலுமிவற்றோடுங் கூடிச் சீவிக்கும் புருடனும் புருடதத்துவச் சொரூபத்துக்கு ஏதுவான மூலப் ப்ரகிருதி கலாதி பஞ்சகமும் அவற்றைச் செலுத்துங்கருவியாகிய சுத்த தத்துவ பஞ்சகமும் என்னு முப்பத்தாறு கருவியும் கண்டத்தானத்தினின்றுந் தொழிற் படுங்கால் அவ்விடத்து நனவே போலக் கனவுக்கேதுவாகிய சூக்கும தேகத்தோடுங்கூடி நின்று வேறொரு பிரகாரமாய் வினைக்கீடாகிய போகங்களை விடயிக்குமவதரம். சகலத்திற் கேவல சொப்பனம். இனி யந்தக் கரணங்களிற் புத்தி ஆங்காரம் மன மூன்றுந் தொழிற் படாது சத்தி மடங்கி யொழியும் ஒழிந்த வழிப் புத்திதத்துவமொழியவே யதனானிச்சயிக்கப் படும் சத்தாதி விடையங்கள் பத்துள் ஆங்காரத்தாற் செலுத்தப் படும் வாயு பத்தும் பிராணவாயு வொழிந்த ஒன்பதும் அவற்றோடு நீங்கும் இங்ஙன மிருபத்திரண்டு கருவியும் கண்டத் தானத்தினின் றொழிந்தவழி யங்ஙனம் ஆங்காரந் தனது சத்தி முழுவது மடங்கினும் பிராணவாயு வொன்று மாத்திரமியக்குமற்ப சத்தியையுடையதாயுடன் செல்லுமாகலின் அதனானியக்கப் படுவதாகிய அந்தப் பிராணவாயு ஒன்றும் மனத்தினவத்தை விசேஷமாகிய சித்த மொன்றும் இவற்றோடு கூடிச் சீவிக்கும் புருடன் ஒன்றும் அதற்கேதுவான மூலப்பகுதி கலாதிபஞ்சகமும் அவற்றைச் செலுத்தும் சுத்ததத்துவ பஞ்சகமென்னும் பதினொன்றும் ஆகிய பதினாலு கருவியு மிதயத்தினின்று தொழிற் படுங்கால் புத்தி தத்துவ மில்லாமையாலின்னதென நிச்சயிக்க வாராத

தாய்க் காக்கை யிருந்த கொம்பசைவது போல நினைவு மாத்திரமாய் நிகழுமவதரம் சகலத்தில் கேவல சுழுத்தி. இனிச் சித்தமுந் தனது சத்தி மடங்கித் தொழிற் படாமல் நின்றொழிய ஏனைப் பதின்மூன்று கருவியும் நாபி யினின்றும் தொழிற் படுங்கால் சித்த மில்லாமையால் நினைவுமின்றிப் பிராணவாயு நிகழ்ச்சிக் கேற்ப உண்ணுதல் மாத்திரம் பொதுமையில் நிகழுமவதரம், சகலத்திற் கேவலதுரியம். இனியாங்காரத்திற் பிராணவாயுவை இயக்குதற்குளதாகிய அற்பசத்தி மடங்குதலில் பிராணவாயு தொழிற் படாது. நாபித்தானத்தினின் றொழிந்த வழிப் புருடதத்துவமும் அதற்கேதுவான மூலப் பகுதி கலாதி பஞ்சகமுமிவற்றைச் செலுத்துவனவாகிய சுத்த தத்துவ பஞ்சகமுமென்னும் பன்னிரண்டு கருவியு மூலாதாரத்தினின்றுந் தொழிற்படும். அங்ஙனம் பிராணவாயுவுமில்லாமையால் தொழில் விசேடமொன்றும் இன்றிச் சுத்த தத்துவங்களாற் சூக்குமமாய்ச் செலுத்தப்படும் பஞ்சகஞ் சுகமுடையனாகிய புருடன் மூலாதாரமாகிய அந்தப்புரத்தின் மூலப் பிரகிருதியாகிய மனையாளைத் தழுவி அப்போது விளையும் பஞ்சக்கிலேசத்துளொன்றாகிய அவிச்சை மாத்திரத்தை விஷயிக்கு மென்பது விழித்த பின்பு சுகமாகத் தூங்கினேனென்று அநுமித்தறியப்படும்அவதரம், இப்படி சீவித்து மூடமாய் நிற்குமவதரம் சகலத்திற் கேவலாதீதம். அவிச்சையாவது தானல்லாத வுடம்பைத் தானெனக் கருதுமவதரம். அது மூடமென்று உரைக்கப்படும். இவ்விடத்திலே அவிச்சை மாத்திரத்தை விடயித்தற்கேற்பச் செலுத்துங் கருவி ஐந்தினுளேனை நான்கு கருவியுங் குறைந்து செலுத்த அதிசூக்குமவாக்கோடு கூடிய சிவதத்துவ மொன்று மிக்குச் செலுத்துமெனவு மதற் கேற்பக் கலாதிகளின் றொழிலுள் அதிசூக்குமமாய் நிகழுமெனவுங் கொள்க. இப்படிக் கீழ் நோக்கிய அஞ்சவத்தையை முறையே அடைந்த புருடன் வினைக்கீடாக மேற் செல்லும் பொருட்டுச் சூக்கும வாக்கோடுங் கூடிய சத்தி தத்துவங்களின் றொழிற்பாடு மிக்கு விளங்கும் போது பஞ்சக்கிலேசத்துள் அவிச்சை காரணமாக யானெனதென்ற அகம்பிரமித்தலாகிய ஆங்காரமுடையனாய் நாபித்தானத்துப் பிராணவாயுவொடுங் கூடி அவ்விடத்து முன்போல உன்னுதலையுடையனுவன். இனி பைசந்தி வாக்கோடுங்கூடிய சாதாக்கிய தத்துவமிக்குச் செலுத்த அதனாலே கலைவித்தை

அராகங்களால் முன்பு போல சூக்குமமாய் விளங்கிய இச்சா ஞானக்கிரியைகள் மிக்க விளங்குவதனுனே முக்குணவயத்தனுய் மூலப் பகுதியிலுள்ள அவிச்சையாங் காரங்களினுண்டாகிய அவாவுதலையுமுடையனுயிதையத் தானத்திலெய்தி முன்புள்ள சித்தத்தோடுங்கூடி முன்பு போல நினைவு மாத்திரமுடையனுவன். இனி மத்திமை வாக் கோடுங் கூடிய ஈசுவரதத்துவ மிக்குக் செலுத்து மூலப் பகுதியினுள்ள அவிச்சை முதலிய மூன்றும் அவற்ருல் நிகழும் விருப்பும் அதன்கண் மறுதலைக் கண்ணிகழும் வெறுப்பும் என்னும் பஞ்சக் கிலேசமுடையனுய்க் கண்டத் தானத்தின் எய்தியவ்விடத்தின் முன்னின்ற இருபத் திரண்டு கருவிகளோடுங் கூடி முன்பு போலக் கனவு காண்பன். இனி வைகரி வாக்கோடு கூடிய வித்தை மிக்குச் செலுத்தும் வழியவற்ருேடுங் கூடி இலாடத்தானத்தி னெய்தி அவவிடத்து முன்னின்ற பத்து இந்திரியங்களோடு கூடி மயங்கிப் பின்பெல்லாக் கருவிகளோடுங் கூடிப் பிரேர காவவத்தைச் சாக்கிரத்தையடைவன். இங்ஙனஞ் சகலத் திற் கேவலசாக்கிராதியைந்துங் காண்க. இதில் இலாடத் தின்ன்றுங் கீழ்நோக்கிச் செல்லும் போது கண்டத்தானத் திற் கனுக் காண்டலுண்டென்பதற்குச் சுருதி ஞானுமிர்தத் தினும் மூலாதாரத்தினின்று மேனேக்கிச் செல்லும் போது கனுக் காண்டலுண்டென்பதற்குச் சுருதி போற்றிப் பஃருெடையிலுங்காண்க. இங்ஙனம் இலாடஸ்தான முதலிய ஐந்திலுமுறையே ஸ்தூலாநுபவமும் சூக்குமாநுபவமும் நினைவு மாத்திரமும் உண்ணுதல் மாத்திரமு மூடமாதல் மாத்திரமுமாகிய வைந்து பேதமாய்ப்புருடன் சீவித்த பின் னனவுங் கனவும் உறக்கமும் பேருறக்கமும் உயிர்ப்படங்கலு மெனச் சகலத்திற் கேவலம் ஐவகைப்பட்டது. இந்த அவத்தைகளுள் நிற்குங் கருவிகளின் கலாதிகளாறும் சுத்த தத்துவம் அஞ்சும் ஆகிய பதினெரு கருவிகளுங் கூட்டி யெண்ணுமல் நீக்கிமுறையே முப்பத்தஞ்சும் இருபத்தஞ்சும் மூன்றும் ஒன்றும் எனத்தொகை கூறியது. இவைகளிற் புருடதத்துவத்தையுடனெண்ணவே முறையே புருடதத்து வத்திற் கேதுவாய் புருடதத்துவமுள்ள மட்டும் உடனின்று தொழிற்படும் சகலாதியுமிவற்றைச் செலுத்துஞ் சுத்த தத்துவ மந்தத்தத்துவங்களினுண்டென்பது தானே பெறப் படுதலானும் ஒருக்கால் நின்றும் ஒருக்கால் நீங்கியும் அவத்

றைக்கு ஏதுவாய் நிகழுங் கருவிகள் மாத்திரமே யெடுத்தோத வேண்டுமன்றியவ்வாறவத்தைக் கேதுவாகாது, புருடதத்துவ சொரூபத்துக்கு ஏதுவான கருவிகளை ஈண்டெடுத் தோதவேண்டாமையானும் அஃதறிந்து கொள்ளுதற்கேற்பப் புடைநூலாசிரியர் **நீங்காக் கலாதிகளென** அடை கொடுத்தோதினாராதலானு மவைகளை யுடனெண்ணுதல் பற்றியவத்தைகட் காவதோர் பயனின்மையாலென்க. **நிலாவு சகலத்தினின்று பூதாதி கலாதிசிவாதி கழிந்து** எனச் சதமணிக்கோவையிற் கூறப்படும் வினவு மதற்கு உத்தரமுமிவையேயாமென்பது அனுபவமுடைய தேசிகராற் கேட்டுணர்க. இலாடத்தானத்தினின்றும் நீங்கி மூலாதாரத்தில் செல்லும்போதும் மூலாதாரத்தினின்று நீங்கி இலாடத்தானத்திற் செல்லும்போதுமந்த அந்த இடமுமங்கேயங்கே நிகழு மறிவு வேறுபாடும் வேற்றுமையில்லாமையானன்றே சாத்திரங்களெல்லா மிவ்விருவகையோடொன்றே பற்றிக் கூறி யெழுவதூஉமென்க. இந்தக் கீழாலவத்தையாற் சுத்த தத்துவமுங்கலாதியு மூலாதாரத்திலுண்டென்பதற்கு சுருதி **அசிந்திய விசுவ சாதாக்கிய** மூலாகமத்துட் கூறியது காண்க. இனி சகலத்திற் சகலமாவது **மருவிய பொறியிலொன்று மாபூதமைந்தி லொன்றுங் கருவிகளுங்கு நீங்காக் கலாதிகளைந்துங் கூடியொரு புலனுகர் விக்க,** நுகரும் ஆன்மாவிற்கு அப்படி நுகரும்போதும் அவ்வவ் விஷயங்களில் நிகழுமறிவு கணந்தோறும் நீங்கி நீங்கி நிகழுவதன்றி யிடையீடின்றி நிகழமாட்டாமையினப்படி நிகழ்தற்கேற்ப சுத்தத் தத்துவங்களாகிய பிரேரகாவத்தைக் கருவியைந்து சாக்கிரத்திற் சொப்பனத்தில் 4. சுழுத்தி 3. துரியம் 2. துரியாதீதத்திற் சிவ தத்துவம் 1. இனி சகலத்திற் சுத்தமைந்தாவன, இருதய முதல் துவாதசாந்த மீறாகிய தானங்களிற் புறக்கரணம்உட்கரணங்களைப்பற்றியும் பற்றுதும் பிரத்தியாகார முதல் துவாதசாந்த மீறாகி ஐவகைப்பட்டு நிகழும்வதரம் சகலத்திற் சுத்தமாகிய யோகாவத்தை யென்பதாம். இனி சுத்தமும் சுத்தத்திற் கேவலமும் சுத்தத்திற் சகலமும் சுத்தத்திற் சுத்தமுமென மூவகைப்பட்டு ஐயைந்து பதினைந்து வகையாய் விரியும். அவை **துகளறு போதத்திலும் அம்பலவாணஸ்வாமி தட்சிணாமூர்த்தி சுவாமி சுவாமிநாத சுவாமிகள்** செய்த நூல்களினும் விரித்தறிக. ஆக மாதி ஞான யோக மாதியினும் விரித்தறிக.

**சுத்த சிவப்பிரகாசக் கட்டளை முற்றிற்று.**

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்

# அநாதிப் பொருள் ஆறுக்கு வகை

கர்த்தா, ஆன்மா, பாசம், கன்மம், சுத்த மாயை, அசுத்த மாயை ஆக 6. அநாதிக்குப் பொருள் ஒரு காலத்து ஒருவராலே உண்டாக்கப்படாமல் தானே இயல்பாயுள்ளது. ஆறு பொருளிலே ஆன்மா ஒரு பொருளாக இருப்பதை மூன்று வகையாகச் சொல்லுவானேன்? ஒரு மலத்தார், மும்மலத்தார், ஆக மூன்று வகையும் அவர்கள் பந்தப்பட்ட முறைமை பற்றிச் சொன்னது. ஒரு சாதிப் பொருள் மூன்று வகையாகப் பேதப்படுமோ? படும். அதெப்படி? ரூபவிஷயத்தைப் பொருந்தி அறிகிற சட்சுரிந்திரியமாகிய கண்ணானது ஒரு பொருள். அது பல விதமாய் தொழிற் படுவது போல. பல தொழிற்படுவதெது? இருளிலே தொழில் கெட்டு ஒளியிலே பொருந்தித் தொழிற்படுகிறது மானிடர் கண் (1). ஒளியிலே தொழில் கெட்டு இருளிலே பொருந்தித் தொழில்படுவது கூகை கண் (2). ஒளியினும் இருளினுந் தொழிற் கெடாமல் இரண்டையும் பொருந்தியறிவது பூனைக்கண் (3). இன்னும் பலவிதமுண்டு. இப்படி, பாசபந்த முறைமையிலே விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்று பெயர் வந்தது.

ஒரு மலத்தார்க்கும் இரு மலத்தார்க்கும் பாசமோசனமெப்படி? சுத்த மாயையின் கீழ், சுத்த மாயையினூர்த்துவ பாகத்திலே தநு கரண புவன போகமுண்டு. அதைக் கூட்டுவிக்கிற கருத்தாக்கள் யாரென்னில், பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், மகேசுரன். இவர்கள் மாயாசக்தி சம்பந்தப்பட்டவர்கள். சதாசிவ மூர்த்தியே, அவர்களுக்குப் பஞ்சகிருத்தியமும் பண்ணும். மாயையுங் கன்மமும், பந்த

மில்லாதவர்களுக்குச் சுத்தமாயையிலே தநுகரண புவனமு மேது? பயிரளவில் இறையும் உபாதியளவில் மருந்தும் போலக் கருத்தா கூட்டுவிக்கும். ஆனால் கருத்தாவிற்கு விகாரமுண்டென்னில் இல்லை. அதெப்படி? பயிரளவில் இறை கொண்டார் சாவுக்கும் உபாதியளவில் மருந்து கொடுத்த வைத்தியனுக்கும் விகாரமும் பந்தமுமில்லாத வாறு போலக் கருத்தாவும் இரக்கத்தினாலே கொடுத்ததன்றி விகாரமில்லை. சகலரைப் போல அவர்களுக்குந் தனுவாதி பொருந்துகையால் பேதமில்லையே? பேதமுண்டு. அஃதெப்படி? சகலர் தனுவாதியைப் பொருந்தி அதுவாக, அழுந்துவார்கள். அவ்விருவரும் அழுந்தார்கள். அதெப்படி? ஒரு ராசாவானவன் சிறிது பேரிடத்திலே குற்றங்கண்டு, அதற்காகத் தண்டிக்க வேண்டித் தலைபுழுத்த நாயை அவர்கள் கழுத்திலே கட்டினான். அதைச் சிறிது பேர் தான் செய்த குற்றத்தையும், இதனுடைய தோடத்தையும் அறி யாமல், நாயைத் தனக்கு அலங்காரமாகிய ஆபரணம் என்றும், அது தனக்குச் சுதந்திரமென்றும் சந்தோஷத்தை யடைந்து வாயழுந்தினது போல, சகலர் பிரகிருதி மாயா தனுவாதியை இன்பமாக அழுந்துவார்கள். அவ்விருவரும் சுத்த மாயா தனுவாதியை அந்தத் தலை புழுத்த நாயைப் போலக் கண்டு, மகாதுன்பத்தையடைந்து அதிலே அழுந்துவார்கள். ஆகையினாலே பேதமுண்டு.

சகலருக்குப் பாச மோசன மெப்படி? கருத்தா பஞ்ச கிருத்தியம் பண்ணி மோசனப் படுத்தும். அநாதியே பஞ்ச கிருத்தியம் நடக்கவும் உயிர் அநாதி கேவலத்திற் கிடப் பானேன்? மல பாகப் படாமலே கிடக்கும். பின்பு தானே பாகப்படுமோ? படும். அஃதெப்படி? கண் இருட்டில் அழுந்தியிருக்கச் சிறிது போது கழித்தலால் அக்கண் ணொளியூடே அழுந்தி நின்றதேயுவானது, இருட்டைச் சிறிது பாகப் படுத்தி தெரியுஞ் சக்தியுண்டாவது போல, மலத்துக்கும் தன்கால எல்லைகளின் மீளுஞ் சத்தியுண்டு. கருத்தாவுங் கண்ணுக்குள் ஒளி போல, உயிருக்குயிரா கவிருந்து, சிறிது பாகப்படுத்திப் பின்பு தனுவாதி கொடுக்கும். அப்படிச் சகலரெல்லாருக்கும் ஒருபடியாகக் கொடாமல் அநாதி கேவலத்திற்சிறிது கிடக்கவும் எண்பத்து நாலு லட்சம் பேதமாகப் பிறக்கவும், பிறந்ததிற் சிறிது

மோட்சம அடையவும், சிறிது மோட்ச உபாயம் சிந்திக்கவும், சிறிது பெத்தனுயிருக்கவும் காரியமேது? கருத்தா ஒவ்வொன்ருகப் படைத்த முறைமையிலே முற்பிற்பாடென்ருலக் கருத்தா ஏகதேசமாகவும் வேணும். வாரபட்சமாகவும், வேணும். மலம் மறைத்த பாகமென்ருல் அப்போது, அது ஏகதேசமும் வாரபட்சமாக வேணும். இவ்விரண்டு முறையுமல்ல. பின்னையெப்படி? ஆன்மாவுக்கு உத்தரமும், பக்குவமும் தனித்தனியுண்டு. அஃதெப்படி?

ஒரு உழவன் ஒரு வயலை எரு விட்டுழுது தெளி பண்ணியதிலே, பலவித்தையுமொன்ருய்க் கலந்து, விதைத்துப் பயிராக்கித் தண்ணீரடைத்துக் களையும் பறித்து வேலியும் கட்டிக் காத்தலும் ஒரு நெல்லுப் பயிர் அறுபது நாள் முதல் ஆறு மாதம் வரையும் பலவிதமாகத் தனித்தனி தன் சாதியே பலவிதமாக விளையும். பனை, நாற்பது நாள் சென்று முளைக்கும். கீரை நாற்பது நாளையில் பலன் முடிந்து ஒடுங்கிப் போம். இஃதுவெல்லாம் உழவனுடைய வாரபட்சமுமல்ல. தன்னியல்பு. அப்படிப் போலச் சகலர் ஒருபடியன்று. உயிர்தோறுந் தனித்தனி தரமுண்டு.

ஆன்மா அநந்தமாயிருந்தும் அதுவெல்லாம் வியாபகப் படுவது எப்படி?

ஓர் அறை வீட்டிலே ஆயிரம் விளக்கு வைத்தாலும் அதனுடைய பிரகாசமெல்லாந் தனித்தனி நெய்யளவு, திரியளவு பிரகாசித்தும் எல்லா ஒளியும் ஒன்ருய் வியாபித்திருந்து ஒடுங்குகிறபோதுந் தனித்தனியே ஒடுங்குவது போலவென்றறிக.

ஆன்மாவுக்கு மூன்று வகையாக, மும்மலத்தார், இருமலத்தார், ஒருமலத்தார் என்று பெயரிருக்கிறதினுலே, சகலருக்கு மூன்று மலமும் அநாதிபந்தமாயிருக்க, மாயையுங் கன்மமுந் தானே பொருந்தாதென்றும், ஆன்மாவுக்கு உள்ள விருப்பமுமல்லவென்றுங் கருத்தாக் கொடுத்த விருப்பமுமல்ல என்றும், குருடு, கோலிலே இச்சை கொடுத்தது போலும், பிணி மருந்திலே இச்சை கொடுத்ததுபோலும், பசிஅமுதிலே இச்சை கொடுத்தது போலும். ஆணவங் மலங்கன்மத்தில் இச்சை உண்டாக்கியதென்றும், அது

கருத்தா அறிந்து, வினை பொசிக்கும்பொருட்டு மாயையைக் கூட்டினதென்றும், ஆகமங்களிலே சொல்லுவது எது? இஃதுவன்றியும் பாசத்துக்கும் உவமானம் விரிக்குமிடத்து, வண்ணான் அழுக்குத் தீரும் பொருட்டு, உவருஞ்சாணியுங் கூட்டினது போல, கருத்தா ஆணவந் தீரும்பொருட்டு, மாயையுங் கன்மமுங் கூட்டினதென்றும் சித்தாந்தமிருப்ப தாலும், அநாதி கேவலத்திலே, ஆணவ, மலமட்டும் ஆன்மாவின் அறிவை மறைத்ததன்றி, மாயை, கன்மம் அநாதிகேவலத்திலே காரியப்படாததாலுஞ் சகலருக்கு மும்மலம் நெல்லினுக்கு முளை தவிடு உமி போலென்றும், நெல்லின் முளை தவிடு உமி போல் அநாதியாகவென்றும் நெல்லுக்கு உமியும் என்பதில், மல கன்மம் அன்றுளவா மென்றும், முதனூல், வழிநூல், சார்புநூல் மூன்றினும் சொன்னதற்கு விரோதமாயிற்று. அதுவன்றியும் விஞ்ஞான கலருக்குச் சுத்த பாகத்திலே, மாயையில் தனுவாதி கருத்தா கூட்டினதுபோலச் சகலருக்குப் பிரகிருதியில் தனுவாதி கூட்டினதன்றி, அநாதிபந்தமுமில்லையோ? அவ்வான்மாவைப் பக்குவ மூவகை என்று சொல்லுவதுக்கு விரோதமாயிற்று. அதுவன்றியும் கருத்தாக் கூட்டினதாயின் எல்லாருக்கும், ஒரு மாயையிற் கொடாமற் சுத்த மாயையிற் சிறிதும், பிரகிருதியிற் சிறிதும் கொடுத்ததால், கருத்தாவுக்குப் பட்சப்பிரதிபட்சம் வருவதால், சித்தாந்த விரோதமாயிற்று. பின்னை எப்படி?

சகலருக்கு மும்மலமும் அநாதி பந்தமாகவிருக்கவும் ஆணவம், கன்மத்திலே விருப்பம் கொடுத்ததென்றும், அதுவறிந்து, கருத்தா, மாயையுங் கன்மமுங் கூட்டின தென்றும் சொன்னதேதென்னில்? பதார்த்தங்களைக் காணுங் குணமுடைய கண் இருளிலே அழுந்தின், ஏனை யொன்றையுங் காணது. அப்போது பதார்த்தங்களைக் காணவேண்டுமென்று விருப்பம் உண்டாய், அதை இருட்டுக் கொடுத்த விருப்பம் என்று சொன்னது. அப்படிச் சொல்லு வானேன்? இருட்டு மறையாத காலம் பதார்த்தங்களைக் கொண்டே இருக்குமல்லாது காணவேண்டுமென்று விரும்பமாட்டாது. இருட்டிலே மறைபட்டதினலே விருப் பம் வந்ததை இருட்டுக் கொடுத்த விருப்பம் என்றது. அதை ஒருவனறிந்து, விளக்கைக் கூட்டி முடித்தால்

அதைப் பொருந்திக்கொண்டு, பதார்த்தங்களைக் காணு மாகையால் அக்கண் போல உயிர்; இருள்போல மலம்; பதார்த்தம் போலக் கன்மம். விளக்குப்போல மாயை. விளக்கைக் கொடுத்தவனைப் போல கருத்தா. கண்ணுக்கு இயல்பாய்ப் பதார்த்தங்களைக் காணுங் குணமும், விளக் கொளியைப் பற்றுங் குணமும் இருளிலே மறைபடுங் குணமும் இருப்பது போல, உயிருக்கு மும்மலம் அநாதி பந்தம். இருளானது தன்னை அடைந்த கண்ணுக்குப் பதார்த்தங்களைக் காணுங் குணமும், விளக்கொளியைப் பற்றுங்குணமும் இருளிலே மறைபடுங் குணமும் இருப்பது போல, உயிருக்கு மும்மலமும் அநாதிபந்தம். இருளானது தன்னை அடைந்த கண்ணுக்குப் பதார்த்தங்களைக் காண வேண்டும் விருப்பத்தைக் கொடுத்ததுபோல, ஆணவ மலம், கன்மத்திலே விருப்பம் கொடுத்தது. அதையறிந்து, ஒருவன் விளக்கைக் கொடுத்துப் பதார்த்தங்களைக் காட்டி, அந்த விருப்பந் தீர்த்ததுபோலக் கருத்தா மாயையைக் கூட்டி, விரும்பின கன்மத்தைப் பொசிப்பித்துத் துலைத்து, இருட்டும் விளக்கும், பதார்த்தமும் செடமானது போல, மலம் மூன்றும் செடம் என்று அறிக. வண்ணான் அழுக்குத் தீரும் பொருட்டு உவரும் சாணியும் கூட்டினது போல, கருத்தா மலம் தீரும் பொருட்டு, மாயையுங் கன்மமும் கூட்டினதென்று சித்தாந்தம் சொன்னதேதென்னில், வண்ணான் அழுக்குள்ள அளவும் உவருஞ் சாணியுங் கூட்டியதினாலே யழுக்கை யொழித்து, அவை ஒழிந்தால், உவருஞ் சாணி யுங் கூட்டான் அதுபோலக் கருத்தாவும் மலமுள்ளளவும், மாயையுங் கன்மமுங் கூட்டியதினாலே மலத்தை யொழித்து மலந்தீர்ந்த பிறகு, மாயையுங் கன்மமும் கூட்டார். அது பற்றிச் சொன்னதென்றறிக. அநாதி கேவலத்திலே ஆணவம் மட்டும் அறிவை மறைத்ததன்றி, மாயையுங் கன்மமும் காரியப் படாததேதென்னில் கண்ணுக்குப் பதார்த்தங்களைக் காணுங் குணமும். விளக்கொளியைப் பற்றுங் குணமும் இருளில் அடங்கியிருந்தது போலென்றறிக. ஆன்மா அதில் அழுந்தாநது எப்படியென்னில், ஒருவனுக்குக் கண்நோவும், ஜலதோஷமும், தலையிடியுமாக மூன்று உபாதியும் வந்து பொருந்தினாலும் அவனுக்குக் கண்ணுபாதியினாலே சங்கடமும் அதில் அழுந்துவதுமன்றி, மற்ற இரண்டுபாதியும் அவ்வளவு சேட்டியாது, முழுவதுங் கண்ணுபாதியிலே

யழுந்துவான். வயித்தியன் கை பார்த்தால் அவனுக்கு மூன்றுபாதி யிருப்பதையும், உபாதி மிகுதி பற்றி இதிலே அழுந்துவதுமன்றி இந்த மூன்றுபாதியுந் தீர்வதற்கான மருந்தைக் கண்ணிலே, அஞ்சனமாகப் போட்டு, மூன்று உபாதியுமொன்றாகத் தீர்ப்பான் அது போல, ஆன்மா, மாயையுங் கன்மமும் அனாதிபந்தமானாலும் அழுந்துவது, அறிவினாலே யழுந்தவேணும். அந்த அறிவிலே ஆணவமல மிருந்து, மறைத்தால் அந்த மிகுதிபற்றி அழுந்தியது என்று அறிக. இந்த முறைமைகளினாலே மூன்று நூலினும் மும்மலம், அனாதிபந்தம் என்றதற்கு விரோதமில்லை என அறிக. 2,

கருத்தா விஞ்ஞானகலருக்குச் சுத்த மாயையிலும், சகலருக்குப் பிரகிருதியிலும் தனுவாதிகூட்டியதேதென்னில், ஒரு வைத்தியன் ஒரு விடயங்களிலும் பற்றாமல், ஒன்றும் பொசியாமல் இருக்கிற பேருக்கு ஒரு கண்ணுபாதி வந்தால், அதற்கேற்ற மருந்தை ஒரு பூவிலே சேர்த்துப் பூவை அவர் கையில் கொடுத்து, முகந்து பார்க்கச் சொல்லியதனாலே அந்த உபாதியைத் தீர்ப்பான், ஒரு பேதைக்கு கண்ணிற் காமாலையுபாதி வந்தால் அவன் விரும்பிப் பொசிக்கிற மண்ணினும், சாம்பலினும் மருந்தைச் சேர்த்து, அவன் விருப்பத்தின்படி, கொடுத்து, அந்த உபாதியைத் தீர்ப்பான். இந்த முறைமை பற்றியதென அறிக. 2. இருபேருக்கும் கண்ணிலே உபாதி வந்தாலும், அவரவர் தரம் புறம்பானதால் உயிரொரு சாதியானாலுந் தரமுண்டென்பதென அறிக. இப்படிக்கு இருபேருக்கும் கண்ணிலே உபாதி வந்தவிடத்து ஒருவருக்குப் பூவிலும், ஒருவருக்கு மண்ணிலும், சாம்பலினும் மருந்து கொடுத்த வயித்தியனுக்கு பாரபட்சமில்லாதது போலக் கருத்தாவுக்கும் பாரபட்சமில்லையாகையாற் சித்தாந்த விரோதமில்லையென்றறிக. (2).

ஆறு பொருளுக்கும் வகை முடிந்தது ஆறு பொருளும் ஒன்றாயிருந்தும் ஆன்மா பதியுடனே பொருந்தாமல், பாசத்துடனே பொருந்தியது கருத்தா கூட்டினதோ? அவர் காருணிய சொரூபியாகையால் கூட்டார். பாசம் வந்து பொருந்தினதாகவேணும். அது செடம் ஆகையால், பொருந்தாது இயற்கையாகவேணும். ஆனாலொருநாளும் நீங்காது. பின்னை எப்படி ?

ஆன்மாவே பொருந்தினுன் முன் பொருந்தினவன் திரும்ப நீங்கினதேது? கருத்தா அதை அசத்து என்று அறிவிக்க அறிந்து நீங்கினுன் இப்போது அறிவித்தவர் முன்னே அறிவியாது இருந்தது ஏது? அப்போது அபக்குவத்தினுலே அறிவித்தாலும் அறியும் தகுதியில்லாததாகையால், கூடவே கண்ணிலே தேயுவொளியிருந்து, இருளைச் சிறிது பாகப் படுத்தினது போல அபக்குவம் சிறிது நீங்கின வேளையறிவிக்கும். பதி பசு பாசம் மூன்றல்லாமல் பக்குவமென்று ஒன்றுண்டோ? உண்டு. அதனுடைய சொரூப சுபாவமென்ன? குழந்தைக்குச் சரீரத்தையும் உயிரையுமன்றிக் குழந்தைப் பருவமொன்றிருந்து அறிவை மயக்குகிறது போல அபக்குவம் ஒன்றுண்டு. இது அனுதியிலே உள்ளதோ? ஆதியில் உண்டானதோ? ஆதி ஆனுல் உயிர் சிறிது காலம் சுத்தனுகவிருந்து பின்பு பாசத்தைப் பொருந்த வேணும். சுத்தன் ஆனுல் அசுத்தத்திலே பொருந்தான், அனுதியே மல சம்பந்தியாகையால் அபக்குவம் அனுதியே யுள்ளது.

1. ஆன்மா வியாபி என்றிருக்கவும், அவத்தைகளிலும் பூமியந்தர சுவர்க்க நரகங்களிலும் போக்கு வரவு பட வேண்டியதென்ன? ஆன்மாவுக்குப் போக்குமில்லை வரத்தும் இல்லை. மாயா கருவியைப் பொருந்தினுலல்லது பெத்தான்மாவுக் கறிவில்லை. கருமத்துக் கீடாய்க் கருத்தா எந்தப் புவனத்திலே, எந்தக் கருவியைக் கூட்டினுலுமந்த இடத்திலே பொருந்தியறியும். அப்படி அறிந்த இடத்திரிவை ஆன்மா போனுன் வந்தானென்று சொல்லுவது. அப்படி வியாபியாகவிருந்து அறிவித்த இடமெல்லாம் அறிகிறதெப்படி? ஒரு படிகமலை; அது நின்ற இடமட்டும் நிறைவாயிருந்து எந்த இடத்திலே எந்த வண்ணத்தைக் கொடுத்தாலும், பற்றிக்கொள்வது போலும் ஒரு அக்கினிமலை நின்ற இடம் மட்டும் நிறைவாயிருந்து எந்த இடத்திலே பஞ்சைக் கொடுத்தாலும் பற்றிக்கொள்ளுவது போலும் ஆன்மா வியாபித்திருந்து அறிவித்த இடத்திலே அறியும். ஆன்மா அறிந்த இடத்துக்கு அவத்தையிலும் நரக சுவர்க்கத்தினும் போனுன் வந்தான் என்று சொல்லுவதன்றி அதற்குப் போக்கு வரவில்லை. 2. ஆன்மா அனுதிப்பொருளாக இருக்கவும், பிறந்தான் இறந்தான் என்று சொல்லுவதேது?

ஆன்மாவுக்குப் பிறப்புமில்லை இறப்புமில்லை. கருத்தா கருவியைக் கூட்டின இடத்திலே அறிவுண்டானதே, பிறப்பு. கருவியைப் பிரிந்த வேளை அறிவற்றதே இறப்பு.

2. ஆன்மா தன்னை வினையை, தலைவனை அறிய வேண்டு மென்று நூல்களிலே சொல்லும் வினையையும் தலைவனை யும் தானறிகிற அறிவுண்டாகில் பாசபந்தியாகான். அவை நிற்க: தன்னைத் தானறிகிறதெப்படி? தன்னைத்தான் அறிந் தால் கண்ணைக் கண் காணுமே, அப்படியன்று, "தன்னை யுந்தானே காணுந்தானதுவாகி நின்றே" என்றிருப்பதால் தன்னைத் தானேயறியான். தானருளைப் பொருந்தி நின்றறி வான். அதெப்படி? திருவருளானது தன்னை அடைந்த உயிரைத் தான் கிரகித்து வியாபித்துக் கொண்டு பின்பு அவர்களுக்குந் தெரிசனப் படுத்துவிக்கும். அஃதெப்படிப் போல? கண்ணுடியானது தன்னைச் சார்ந்தவர்களுடைய முக லட்சணத்தைத் தான் கிரகித்துக் கொண்டு அந்த முகத்தைக் கண்ணுடியாக்கிக் கொள்ளவும் செய்யாமல், தன்னுடைய சொரூபத்தை அவர்களுக்கு விளக்கிக் காட்டு கிறது போல. தன்னையுந் தலைவனையு மறிவதெப்படி? கருத்தாமாயா கருவியைக் கூட்டினவிடத்துத் திரிவு காட்சி யாகப் பிரபஞ்சத்தை எல்லாம் எதுவாக அறிந்து வந்த காலமெல்லாம் சனன மரணம் ஒழியாது. சடசித்துக்க ளெல்லாங் கருத்தா நிறைந்திருக்கிற செய்தியும் அவனசை யாமல் அணுஅசையாது என்பதும் சடசித்துக்களெல்லாந் தாமேயிருந்ததின் அதன் குணத்தை விளக்குவிக்கிறார் என் றும் அறிந்து தனக்கொரு ஹிதஅஹிதங்கள் சடசித்துக்கள் முன்னிலையாக வருமிடத்து அவையெல்லாம் சடமதிற் பொருந்திய உயிர்களும் கருத்தாவையின்றித் தொழிற் படாது. கருத்தாவே செய்தாரென்று அம்பு போன்ற முன்னிலையை நாடாமல் எய்தவன்போன்ற கருத்தாவை நாடி நிற்கவே தலைவனை அறியும். அ∴தெப்படி? கண்ணுனது இருளிலே அழுந்திக் கிடக்கையிலே ஆதித்தப்பிரகாசம் வந்த விடத்து அதிலே பொருந்திப் பதார்த்தங்களை அறியும் போது, ஆதித்தப் பிரகாசத்தினுடைய சகாயத்தை அறியாது தானே அறிந்தோம் என்றிருக்கும். பின்பு ஒருவர் ஆதித்தனையும், பிரகாசத்தையும் அறிவித்தால் அப்பிரகா சத்தின் வழியாக ஆதித்தனைக் காணும். அதைக் கண்டு,

அந்த வழித்தாய் அதுவாய் நிற்கவே, முன்கண்ட பதார்த் தங்களெல்லாம், தன்முன்னே இருந்தாலும் அதுவொன்றும் தெரியாது. பின்பு, அந்த ஆதித்தனுகவே போகுமல்லாது வேறொன்றையுமறியாது. அப்போது தனக்குள்ள சுதந் தரம் ஆதித்தப் பிரகாசத்தின் வழியே ஆதித்தனைக் கண்டி ருப்பதேயன்றி தானேகாணும் செய்தி சற்றுமில்லையென்று தெரியும். அப்படிப்போல ஆன்மாவும் ஆசார்யர் உணர்த்த அறிந்து திருவருள் வழித்தாக எந்தப் பொருளையும் சிவ மென்றதின் உண்மையைக் காணவே மற்றப் பிரபஞ்ச பதார்த்தம் ஒன்றையும் காணுது, தனக்குக் காணும் செய்தி இல்லை என்று தேறிக் கருத்தாவையே நோக்கி நிற்கும். அதுவே தன்னையுந் தலைவனையும் அறிவது. அப்படி அறிகிற ஆன்மாக்களைப் பிரபஞ்சவாஸனை பொருந்தாது. அஃதெப்படி? ஒரு படிகம் இருளிலே ஒரு வன்னத்தையும் பற்றுது. ஆதித்தப் பிரகாசம் வந்ததால் அந்தப் பிரகாசத்தி ருலே பஞ்சவன்னங்களையும் பொருந்தும். அது நீங்கி உச்சிப்படிகமா யாதித்தனும் தானும் நேர்பட்ட இடத்துத் தனக்குச் சுதந்தரம் ஆதித்தப் பிரகாசமேயன்றி மற் ருென்றுமில்லை என்று ஒரு வன்னத்தையும் பொருந்தாது. முன் பொருந்தின பல வன்னங்களும், சுற்றினுமிருந்தாலும் அதிலே பற்றுது. அப்படிப்போல என்றறிக. 2. சகல ருக்கு மும்மலம் அனுதிபந்தமாகையால் ஆணவத்தை ஆன் மாவே அறிந்து பொருந்தினதன்றிக் கருத்தா கூட்டினது மல்ல. அந்த மலம் சடமாகையால் அது வந்து பொருந் தினதுமல்லவென்று சித்தாந்தம் சொல்லுகையால் அந்த முறைமையிலே ஆணவத்தை அறிந்து பொருந்தினவன் தானே மாயையையும், கன்மத்தையும் அறிந்தெடுத்துக் கொள்ளுவான். அதற்குச் சித்தாந்தம் பேசுமிடத்து மாயையுங் கன்மமும் சடமென்றும், ஆன்மா அறிவற்றவன் என்றும் கருத்தா கூட்டின வேளை, கூட்டிப் பிரித்த வேளை பிரியுமென்றும் சொல்லுவதேது? ஆன்மா அறிவித்தால் அறியும் சிற்றறிவுடையவன். அந்த அறிவில் ஆணவ மல மிருந்து மறைப்பதினுலே கருத்தா அவன் விருப்பம் அறிந்து கூட்டி இளைப்பாற்றுதல் நிமித்தம் பிரிப்பதென அறிக. மாயை, கன்மம் இரண்டையும் கருத்தா கூட்டினவேளை அன்றி, அவர் கூட்டாதவேளை, அவ்விரண்டினும் பொருந்தி அழுந்தானுகில் மும்மல முடையவனென்பதேது? அப்படி

யன்று. அஞ்ஞான பந்தத்தான் அஞ்ஞானி கேவல முதல் மும் மலத்தினும் அழுந்துவதுமுண்டு. கருத்தா அந்த அழுத்த மறிந்து அதை நீக்குவிக்கும் பொருட்டுப் பிரேரகம் பண்ணின இடத்தில் அதைப் பொருந்தி பொசித்துத் துலே வதைப் பற்றி இப்படிச் சொன்னது. ஆனால், கருத்தா மாயா கருவியைக் கூட்டாத வேளை ஆன்மா இன்ப துன்ப மிரண்டும் பொருந்துவதுண்டோ? உண்டு. அஃதெப்படி? ஒரு கருவியும் பொருந்தாமல் கேவலப்பட்டவன் வாக்காதி கலையாதியைக் கருத்தா கூட்டினவேளை நித்திரை விழித்த இடத்து அந்த நித்திரையிலுண்டான சுகத்தைப் பின்னொரு வரிடத்தில் அவன் பேசும்போது, அவனல்ல, ஆனந்தமாய் நித்திரை பண்ணினேன் என்று சொல்லுகிறானே. நித்திரை யிலே அந்த இன்பத்தை அறிந்ததன்றி விழித்தவிடத்தறிந்த தல்லவே. கருவி கூடாத இந்தக் கேவலத்திந்த இன்பத்தை யறிந்தவன் அஞ்ஞானிகேவலத்துமின்பத்தில் அழுந்துவது உண்டு. ஆன்மாவுக்குச் சுகதுக்கத்தில் அழுந்தும் குணம் மட்டுமின்றி இன்னதிது வென்று முன்பின் தெரியாது. கருத்தா அறிந்து பஞ்சகிருத்தியம் பண்ணுவார். பதி, பசு, பாச மூன்றும் அஞ்ஞானியே கூடியிருக்கவும் உயிர், பதியைப் பொருந்தாமல் பாசத்தைப் பொருந்தினது, அபக்கு வத்தினாலேயென்றால் அந்த அபக்குவம் உயிருக்குள்ள இயற்கைக் குணமானால் ஒரு நாளும் நீங்காது. செயற்கைக் குணமானால் இந்த அபக்குவம் என்றும் ஒரு பொருள் அஞ்ஞானிப் பொருள். ஏகன், அநேகன், இருள், கருமம், மாயை யிரண்டாக இவை ஆறுமென்று சொன்னதல்லால் இந்தப் பொருளைக் கூட்டியேழு பொருளாகச் சொல்லவில்லை. ஆனால் அபக்குவம் என்பது எந்தப் பொருளினுடைய குணம்? உயிருக்கொரு காலத்துத் தோன்றி யொடுங்குங் குணம் என்னில் அறிவித்தால் அறிவது உயிரென்று லட்சணம் சொல்லவேண்டியதில்லை. அபக்குவத்தில் அறிவித்தாலும், அறியாதாகையால் உயிர்க் குணமன்று. பாசத்தினுடைய குணமாகில் அந்த அபக்குவத்தினாலே பாசத்தைப் பொருந் தினான் என்றிருப்பதால் பாசத்தைப் பொருந்து முன்னே யுள்ள குணமாகச் சொல்லுவதால் பாசத்தின் குணமுமன்று. கருத்தாவுக்கு இந்தக் குணமே இராது. பின்னையந்த அபக்குவமாவது ஆருடைய குணம்? பஞ்ச வன்னங்களையும் உருத்தெரியாமல் மயில் முட்டையடக்கியிருப்பது போல்

மூன்று மலத்தையும் பகுப்புத் தோன்றுமல் தனக்குள் அடக்கி நிற்பதால் மும்மலங்கட்கெல்லாம் காரணமாவதால் மூல மலமென்றும் பெயரையுடைத்தாய் இருப்பது ஓர் பொருளே. அபக்குவம் அதன் சொரூபம். ஏதென்னில் அவாவே சொரூபம். இதற்கு உதாரணம்.

*அவாஎன்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும்*
*தவாஅப் பிறப்பீனும் வித்து.*

என்பதனுல் அறிக. அது பரிணமிக்கிற முறையே தென்னில் உயிரோடு அனுதிசையோகமாகக் குழந்தைப் பருவம் அறிவை மயக்கி, ஆடுகிற பாம்பையும் அமேத்தியத் தையும் எரிகிற விளக்கையும், தனது நிழலையும் பிடித்தீர்ப் பதற்கே அவாவாய் அதனுற் பிரயோசனத்தைக் குறியா தெழுந்த ஆசையே சொரூபமாகவிருப்பது போல, ஆன் மாவுக்குச் சுகதுக்கங்களிற் பகுப்பில்லாமல் எழுந்த அவாவே அபக்குவம் என்னப்படும். அந்த அவாவானது பிற்பாடு பாகப்பட்டுப் புகழ் அவா என்றும், பொருள் அவா என்றும் இரண்டு தானத்தில் நின்று தனது அதிகாரச் சத்திகளைச் செலுத்தும். இதற்கு அகப்பற்று, புறப்பற் றென்றும், உயிர்ச்சார்பு, பொருட்சார்பு என்றும் இன்னம் பலபெயர் பெறுவதாயிருக்கும். மூன்றுகுற்றம், மூன்று குணம், மூன்றுமலம், மூன்றவத்தை என்று நின்று செய்யும் இருவினை என்பதுமிது.

புகழ்அவா ஆனது உயிர்ச்சார்பாக நின்று, ஆன்மாவை 'யான்' என்னும் செருக்கிலே செலுத்தும். பொருள் அவாவானது பொருட் சார்பாக நின்று, எனதென்னும் செருக்கிலே செலுத்தும், இந்த யான், எனதென்னும் செருக்கிற்கு ஆணவ மலம் என்று பெயர். இதற்குப் பிர மாணம்.

*''யான்எனதென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்கு*
*உயர்ந்த உலகம் புகும்''*

என்பதறிக. இந்த யான் எனது என்னும் செருக்கு தேக போக விருப்பங்களைக் கொடுக்கும். இதற்கு மாயை, கன் மங்களென்று பெயர். இதற்கெல்லாம் பிரமாணம் ஏதென்னில்

மூல மலமொன்று தானங்க ளிரண்டு
மூல மலத்தால் ஆணவ பந்த
காலத்தில் ஒன்றல்ல கன்மத்தில் ஒன்றல்ல
ஞாலத்தில் ஞானிக ளோ திடு வாரே.

என்பதனுல் அறிக. ஆன்மா அபக்குவத்தால் ஆணவத்தைப் பிடித்தானென்றும் அது கன்மத்திலே விருப்பம் கொடுத்தது என்றும் அது கருத்தா அறிந்து மாயையை தனுவாதியாய்க் கூட்டினுரென்றும் சித்தாந்த உண்மை கூறியதும் இது பற்றி என அறிக. அபக்கு வத்துக்கே மூலமலமென்பது பெயராகில், மூலமலத்தாற் சாரலும், மாயை கருமத்தளவில் தரும், உரு இறைவன் என்றதில் ஆணவத்தையும் மூலமலமென்பதேதென்னில் ஆணவ காமிய மாயை என்னும் மூன்றினுமிது முன்னைய பக்குவத்தினின்றும், பரிணமித்த முறைபற்றி, இதுவும் மூலமலமென்றே பெயர் பெறும்.

திருச்சிற்றம்பலம்

# ஞான சாதகப் பனுவல்

*சீர்திகழ் செல்வத் திருவா வடுதுறை*
*பேர்பெற மன்னிய வின்பபூ ரணனை*
*சேதன நமச்சி வாயதே சிகனை*
*யேதினம் பரசுது மினிதுறற் பொருட்டே*
*முன்னவர் மொழியத் தன்னையே யுதவி*
*இன்னவா றுருசொற் சொன்ன வாசகனை*
*பரமசற் குருவாய் வருதிருச் சிற்றம்*
*பலவ தேசிகனைப் பரசுதுந் தினமே.*

*சரியை கிரியா யோகம் முற்றுதலினுலே யாக்கை யினையைந்து தலைநாகமென வஞ்சி நீக்க நினைந்த வொருவற்கு மோட்ச வுபாயஞ் சித்திக்குமாறு சற்சம்பிரதாய பரம்பரை யிற் சற்குரு சந்நிதானப் பட்டுச் சட்சுவாதிய வுத்ராந்த மாகிய தீட்சை முறையே கிடைக்கப் பெற்றுக் கேட்டல், சிந்தித்தல், தெளிதல் வரை கைகூடி நிட்டையைத் தலைப் படும் பாக பக்குவ முடையோரே கண்கூடாயறியற்பால தாயேனையோற் குவலைத் தெங்காய் மாத்திரையாய்த் தோன்றியழியப் படுவதாயீண்டு வரும் சற்காரியமாவது*

*தேவாரம்:—*

*"மருளவா மனத்தனுகி மயங்கினேன் மதியிலாதேன்*
*இருளவா அறுக்கும் எந்தை இணையடி நீழல்என்னும்*
*அருளவாப் பெறுதலின்றி அஞ்சினுனலம் வந்தேற்குப்*
*பொருளவாத் தந்தவாறே போதுபோய்ப் புலர்ந்த*
*தன்றே".*

*மருளவா, இருளவா, பொருளவா வென்னும் மூன்றினை யும் அறுப்பதருளவாவென்று அதனுண்மையும் திருவாசகத்தில்,*

*"அவா வெள்ளக் கள்வனேனை" யென்றும், "புகழ்ச் சியைக் கடந்த போகமே" என்றும், ஊசலாட்டுமிவ்வுடலுயி ரான இருவினை யறுத்து' என்றும் வேண்டேன் புகழ், வேண் டேன் செல்வம் என்றும், பெத்த முத்திகளினனுபவங் கூறியவாறும் (நயினுரில்) குறளில்—*

ஆராஇயற்கை அவா நீப்பினக் நிலேயே
பேரா இயற்கை தரும்

என்றும், மெய்யுணர்தலுக்கப்பால் அவாவறுத்தலென்னும் அதிகாரம் பர முத்தருண்மை விளங்க, நாலுவகை யவாவு மறுமாறு கூறு முண்மையும், அநுபவமுடைய தேசிகரா லுள்ளவாறுணர்ந்து பாசம் நீக்கத்துணிந்தார் அனுட்டிக்கப் படுவது, ஞானசாதகமேயாம். அச்சாதகமின்றிப் பாசம் நீங் காது. அது நீங்கியன்றிச் சுட்டறிவொழியாது. அது ஒழிந் தன்றி வியாபக அறிவு விளங்காது. அது விளங்கியன்றித் திருவடி நீழல் சேர்ந்து கருவுறு துயரம் களைதல் கூடாது. ஆதலால் ஞானசாதகமே அவசியம் வேண்டப்படும். அச் சாதகம் குருவருளானன்றி ஆகம ஞானத்தாற் பெறப் படாது. இவைக்கு உதாரணம்—

சிவஞான சித்தியார்:—

"இருவினைச் செயல்க.ளொப்பில் ஈசன்தன் சக்திதோயக்
குருவருள் பெற்று ஞான யோகத்தைக் குறுகிமுன்னைத்
திரிமல மறுத்துப் பண்டைச் சிற்றறிவொழிந்து ஞானம்
பெருகி நாயகன் தன்பாதம் பெறுவது சுத்தமாமே"

இவ்வாறு குருவருள் பெற்று ஞானபோகத்தைக் குறுகி ஞோர்க்கு வேண்ட.ப்படுவது, சோகம் பாவிக்குமத்தாற் சிவமுமாவரென்றும் சோகமெனப் பாவிக்கத் தோன்று வன் வேறின்றியென்றும் சோகநிலை தானறியார் சுதானந்தந் தானறியாரென்றும் வருமாறற்றூர் சாக்கிரத்தே யதீதத் தைப் புரிந்து பரமே பார்த்திருத்தற்கு அவசியம் வேண்டப் படுவது சோகம் பாவனையேயாம்.

பாவனை குருவருளாலன்றிக் கூடாது. அவ்வாறு கூடினு மிருவகைப் பற்றும் அற்ருலன்றிப் பலியாது. இவைக்குப் பிரமாணம்

தேகஞ் சிறைச்சாலை என்று திகைப்பார்க்குச்
சோகநிலை சொல்லென்று சொல்லினன்-பாகம்
பிரியாளைக் கொண்டு பிரபஞ்ச நடாத்து
மரியானெனை யாண்டவன்று.

இவ்வாறு சற்குருவா லுணர்த்தப்பெற்று அந்நிலை

யினுறைத்து நிற்றலையே ஞானயோகத்தைக் குறுகி யென்றார் வழி நூலாசிரியர்.

அவ்வாறு ஞானயோகத்தைக் குறுகித் திரிமல மறுக்கத் துணிந்தோர்க்கு ஒரோவழி வாதனை வசத்தாற் சுட்டறிவு பற்றிப் பிரபஞ்சங் காட்சிப்பட வருமாகில், அக்காட்சி விரோதத்தாலிச் சாதகத்திற் சலிப்பினால் ஐயம் விளையும். அது விளையாமல் பரிகரித்து ஞான நிலையிலுறைத்து நிற்றற்குச் சாக்கிரத்தே யதீதத்தைப் புரிந்து பரமே பார்த்திருந்த பராவசிவராயுள்ளவர்கள் சுவாநுபவ நிகழ்ச்சியானிகழ்ந்த திருவாக்குகள், உதாரணம் வருமாறு:—பரம் பொருளை உண்மைஞான சாதகத்தால் அன்றி ஆகமஞான சாதகத்தால் உணரப்படாதோவெனில், தேவாரம் பாசுரம்.

ஏதுக்களா லுமெடுத்த மொழியா லுமிக்குச்
சோதிக்க வேண்டா சுடர் விட்டுள னெங்கள் சோதி
மாதுக்க நீங்கலுறுவீர் மனம் பற்றி வாழ்மின்
சாதுக்கள் மிக்கீ ரிறையே வந்து சார்மின்களே.

அது யாண்டுளவோவெனில் திருக்குறுந்தொகை.

அண்டமாரிருளூடு கடந்தும்பர்
உண்டு போலுமோரொண்சுடர் அச்சுடர்
கண்டிங் காரறி வாரறிவாரெலாம்
வெண்டிங்கட் கண்ணி வேதிய னென்பரே.

ஆண்டுச் சேறற்குத் துவாரமேதென்னில் திருத்தாண்டகம்.

ஊனுடுத்தி ஒன்பது வாயில் வைத்து
ஒள்ளெலும்பு தூணுக வுரோம மேய்ந்து
தானெடுத்த கூரை தவிரப் போவார்
தயக்கம் பல படைத்தார் தாமரையினார்
கானெடுத்து மாமயில்களாலுஞ் சோலைக்
கழிப்பாலை மேய கபாலப்பனார்
வானிடத்தை யூடறுத்து வல்லைச் செல்லும்
வழிவைத்தார்க் கவ்வழியே போதுநாமே.

ஆண்டுச் சென்றார் செய்யுங் கருமமேதென்னில்,

உயிராவணமிருந் துற்று நோக்கி
யுள்ளக் கிழியினுரு வெழுதி

யுயிராவணஞ் செய்திட்டுன் கைத்தந்தா
லுணரப் படுவாரோ டொட்டி வாழ்தி
அயிராவணமேறு தானே றேறி
யமரர் நாடாளாதே ஆரூராண்ட
அயிராவணமே யென்னம் மானே யுன்
அருட் கண்ணால் நோக்காதா ரல்லாதாரே.

திருக்குறுந்தொகை:—

அம்மானை யமுதிலமுதே யென்று
தம்மானைத் தத்துவத் தடியார் தொழுஞ்
செம்மான நிறம் போல்வதோர் சிந்தையுள்
எம்மானைக் கண்டு கொண்ட தென்னுள்ளமே.

தன்னிற் றன்னை யறியுந் தலைமகன்
தன்னிற் றன்னை யறியுந் தலைப்படுந்
தன்னிற் றன்னை யறிவில னாயிடில்
தன்னிற் றன்னையுஞ் சார்தற் கரியனே.

திருவாசகம்:—

அவமாய தேவரவ கதியி லழுந்தாமே
பவமாயங் காத்தென்னை யாண்டுகொண்ட பரஞ்சோதி
நவமாய செஞ்சுடர் நல்குதலு நாமொழிந்து
சிவமானவா பாடித் தெள்ளேணங் கொட்டாமோ.

நீக்கி முன்னெனைத் தன்னொடு நிலாவகைக்
குரம்பையிற் புகப்பெய்து
நோக்கி நுண்ணிய நொடியன சொற்செய்து
நுகமின்றி விளாக்கைத்துத்
தூக்கி முன்செய்த பொய்யறத் துகளறுத்
தெழுதரு சுடர்ச்சோதி
ஆக்கி யாண்டுதன் னடியரிற் கூட்டிய
அதிசயங் கண்டாமே

கலந்து நின்னடியா ரோடன்று வாளா களித்திருந்தேன்
புலர்ந்துபோன காலங்கள் புகுந்துநின்ற திடர்பின்னாள்
உலர்ந்து போனேன்உடையானே யுலவா வின்பச்
சுடர்காண்பான்
அலந்து போனே னருள்செய்யா யார்வங் கூர
வடியேற்கே.

பார்பத மண்டமனைத்துமாய் முளைத்துப்
படர்ந்ததோர் படரொளிப் பரப்பே
"சோதியாய்த் தோன்று முருவமே"
"சோதியே சுடரே சூழொளி விளக்கே".

திருவாசகம்:—

ஊசலாட்டு மிவ்வுட லுயிரா யிவ்
விரு வினையறுத் தென்னை
ஓசையா லுணர்வார்க்குணர் வரியவ
னுணர்வு தந்தொளியாக்கி
பாச மானவை பற்றறுத் துயர்ந்ததன்
பரம்பெருங் கருணையா
லாசை தீர்த்தடி யாரடிக் கூட்டிய
வற்புதமறியேனே.

திருவிசைப்பா:—

இடர்கெடுத் தென்னை யாண்டுகொண் டென்னுள்
இருட்பிழம் பறவெறிந் தெழுந்த
சுடர்மணி விளக்கி னுள்ளொளி விளங்குந்
தூயநற் சோதியுட் சோதி
யடல்விடைப் பாகா வம்பலக் கூத்தா
அயனொடு மாலறி யாமைப்
படரொளி பரப்பிப் பரந்துநின் றுயைத்
தொண்டனேன் பணியுமா பணியே.

முழுவதுநீ யாயினுமிம் மொய்குழலாண் மெய்முழுதும்
பழுதெனவே நினைந்தோராள் பயில்வதுநின் றொரு
நாமம்
அழுவதுநின் றிறநினைந்தே யதுவன்றே பெறும்பேறு
செழுமலர்சூழ் பொழிற்கோடைத் திரைலோக்கிய
சுந்தரனே.

நெஞ்சிடர் அகல வகம்புகுந் தொடுங்கு
நிலைமையோ டிருள்கிழித் தெழுந்த
வெஞ்சுடர் சுடர்வ போன்றொளி துளும்பும்
விரிசடை யடிகடங் கோயில்
அஞ்சுடர்ப்புரிசை யாழிசூழ் வட்டத்
தகம்படி மணிநிரை பரந்த

செஞ்சுடர் அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம்பலமே.

மங்குல்சூழ் போதின் ஒழிவற நிறைந்து
வஞ்சகர் நெஞ்சகத் தொளிப்பார்
அங்கழற் சுடரா மவற்கிள வேன
லலர்கதி ரனையவாழியரோ
பொங்கெழில் திருநீ றளிபொசி வனப்பிற்
புனல்துளும் பவிர்சடை மொழுப்பர்
எங்களுக் கினியர் இஞ்சிசூழ் தஞ்சை
இராச ராசேச் சரத்திவற்கே

பெரியபுராணம்:—

நாணனுமன்பு முன்புநளிர்வரை ஏறத்தாமும்
பேணுதத் துவங்க ளென்னும் பெருகுசோ பானமேறி
யாணையாஞ் சிவத்தைச் சார அணைபவர் போல வையர்
நீணிலை மலையையேறி நேர்படச் செல்லும் போதில்

ஐந்துமா றடக்கி யுள்ளா ரரும்பெருஞ் சோதியாலு
மெந்தையார் திருக்காளத்தி மலையினிலி ரவொன்றில்லை.

திருமந்திரம்:—

பண்ணு வொளியது பராண்டத் தப்புறம்
என்னுயகனு ரிசைந்தங் கிருந்திட
முன்னு வொளியா யுரைசெய்யா மந்திரம்
சொன்னூர் கழலினை சூடிநின்றேனே.

இருந்தார் சிவன்செயல் யாவையு நோக்கி
யிருந்தார் சிவமாகி யெங்கும் தாமாகி
இருந்தார் முற்காலத் தியல்பைக் குறித்து
இருந்தா ரறிவு வந்தெய்திய சோம்பே.

சோம்பரிருப்பது சுத்த வெளியிலே
சோம்பரிருப்பது சுத்தவொளியிலே
சோம்பருணர்வு சுருதி முடிந்திடஞ்
சோம்பர் கண்டார் சுகத்தின் பக்கட்டுக்கமே

நானென்றுந் தானென்று மிரண்டென் றிருந்தேன்
நானென்று ஞான முதல்வனு நாடி நான்
நானென்றுந் தானென்று நானுமறிந்தபின்
நீயன்றி நானே நினைவொழிந்தேனே

தேவிகாலோத்திரம்:—

வானம் போல வடிவிலதா யெங்கு
மானதாகத் தியானஞ் செய்யாவிடிற்
கானங் தன்னிலுலண்டெனக் கட்டுப்பட்
டீனமான பிறப்பிறப் பெய்துமே

திருவுந்தியார்:—

அண்டமுதலாய வனைத்தையு முட்கொண்டு
கொண்டத்தைக் கொள்ளாதே யுந்தீபற
குறைவற்று நின்றதென் றுந்தீபற.

திருக்களிற்றுப்படியார்:—

தன்னைப் பெறுவதன்மேற் பேறில்லை யென்றுந்தான்
தன்னைத்தான் பெற்றவன்றான் யாரென்னில்-தன்னாலே
யெல்லாந்தன் னுட்கொண்டு கொண்டதனைக் கொள்ளாதே
எல்லாமாய் நிற்கு மிவன்.
எத்தனையோ தத்துவங்களெவ்வவ கோட்பாடுடைய
தத்தனையுஞ் சென்றங்களவாதே—சித்தமெனுந்
தூதுதனைப் போகவிடிற் றாக்கற்ற சோதிதனிற்
பாதிதனைக் கும்பிடலாம் பார்

சிவஞானசித்தியார்:—

இந்நிலை தானில்லையேல் எல்லாம் ஈச
னிடத்தினிலும் ஈசனெல்லா விடத்தினிலு நின்ற
வன்னிலையை யறிந்து அந்தக் கரணங்களடக்கி
யறிவதொரு குறி குருவினருளினால் அறிந்து
மன்னு சிவன்றனை யடைந்து நின்றவன்றனாலே
மருவு பசு கரணங்கள் சிவகரணமாகத்
துன்னியசாக்கிரமதனில் துரியாதீதந்
தோன்ற முயல் சிவாநுபவஞ் சுவாநுபூதிகமாம்

சிவப்பிரகாசம்:—

விளம்பிய வகையினிட்டை மேவிடலரிதேன் முன்ன
மளந்தறி வளித்த வற்றினளவு மற்றவற்றினாலே
யுளங்கொளுந் தனையுமுள்ள படியுமுற்றுணர்ந்து செவ்வே
தளர்ந்திடாதுவப்ப மற்றத் தன்மையதாகுந் தானே

திருவருட்பயன்:—

"ஓங்குணர்வி னுள்ளடங்கி யுள்ளத்திலின் பொடுங்கத்
தூங்குவர் மற்றேதுண்டு சொல்"

நெஞ்சு விடு தூது:—

"விந்து நாதங் கடந்து சுத்த வெறுவெளியில்
அந்தமிலாப் பாழடங்கத் தேக்கியே-முந்திவரும்
அவ்வறிவுக் கப்பாலுஞ் சென்றகண்ட முள்ளடக்கிச்
செவ்வறிவேயாகித் திகைப்பொழிந்தங்—கெவ்வறிவுந்
தானுய வீடருளித் தன்னிற் பிரிவிலா
ஊனுகி யெவ்வுயிர்க்கு முட்புகுந்து—மேனியிலா
அஞ்சவத்தையுங் கடந்தங் காயபெரும் பேரொளியே
தஞ்சமெனச் சென்று" என்றும், "குன்ரு
விளக்காய் நிறைந்த விண்சுடரான் விண்மேற்
றுளக்காமனின்ற பெருஞ்சோதி" என்றும்
"வெறுவெளியாய்ப் பாழாய் வெறும்பாழுக்கப்பால்
உறு பொருளாய் நின்ற வொருவன்" என்றும்

இருபா இருபஃது:—

"குரக்கு மனத்துக் கொடியேன் பரக்கும்
பரப்பைக் குவித்து நிறுத்திப் பிடித்திட்
டிருள்வெளியாக்கு மருளினை யறுத்து
வந்து புகுதலுஞ் சென்று நீங்கலும்
இன்றி யொன்ருய் நின்றவந் நிலையில்
ஒன்ரு காம லிரண்டா காமல்
ஒன்று மிரண்டு மின்ரு காமல்
தன்னது பெருமை தாக்காணுயினு
மென்னது பெருமை யெல்லாமெய்தித்
தன்னை யெனக்குத் தருவதை யன்றியு
மென்னையுமெனக்குத் தந்து தன்னது
பேராநந்தப் பெருங்கடலதனுள்
ஆரா வின்பமளித்துத்திரா
உள்ளும் புறம்பும் ஒழிவின்றி நின்ற
வள்ளன்மை காட்டி மலரடி யருளிய
மன்னன்"

பண்டார சாத்திரம்:—

தசகாரியம்,

''சோதியாய் நில்லா யேற்றுங் நெறிபோகாதறிதியே.''

சிற்றம்பல நாலடியார்:—

''எல்லா மிறந்த வறிவாகி நின்றிடு மிச்சைத் தொழில்
புல்லாமற் புல்கிடும் பூரணவின்பமப் பூரணமே
நில்லா நிலைமை சுகாதீத வுண்மைநிகழுமப்பால்
செல்லார் பொழிற்செண்பைச் சிற்றம் பலவர்
திருவுருவே''

''அன்றிலே வின்ப வகண்ட பரிபூரணத்தில்
ஒன்றிலே யென்னை யொளித்தவரார்—சென்றுமதித்
தேவாகுங் காழிநகர்ச் சிற்றம்பல நாடி
காவாமற் காத்தருள்வோன் காண்''.

''சுருக்கம் விரித்தலறச் சோதி நிறைவிற்
பெருக்க விழித்தாலலது பேரின்பங் கூடுமோ''.

''இங்நாணிரையத் திருந்த துயர்தீர
உன்னு லொளியி லொழிப்பதினியெக்காலம்.''

''தூக்கற்ற சோதியினுள்ளே சொல்லற நின்றுசுகித்தே
நீக்கற்றிருப்பதெந்நாளே நித்தத்திருப்பதெந்நாளே''.

'' அண்டங் கடந்த அருளுருவைப் பாருங்கோள்
தொண்டர் புடைசூழ்ந்த சோதிதனைப் பாருங்கோள்''

சிவானுபோக விளக்கம்:—

''மோனந்தாதீத முடிவிலே பூரணமாய்
ஆனந்தா தீதவொளி யாய்நிறைந்து—தானந்த
கற்பனையின்றின்றிக் கரைந்ததுவாய் நிற்பதுவே
தற்சொரூபா னந்தனடி தான்''

சும்மாவிருக்குஞ் சுகாதீத ரல்லவோ
அம்மான் றிருவடிக் கீழாகுவார்—அம்மா கேள்
முப்பாழும் பாழாய் முடியடியிலாப்பாழிற்
கற்பூர தீபமெனக் காண்

இன்னுமிவ்வாறு சுருதிகளனந்தமுள்ளன.

ஈண்டு விரிக்கிற் பெருகும்.

இச்சுருதிகட் கெல்லாமநுபவமுடைய தேசிகரை யடைந்து தாற்பரியம் உணர்ந்தாற்கு ஞானநிலையிலுறைந்து நிற்றற்கும் சிவாநுபோகப் பெருஞ்செல்வ முற்றும் தனதாய்க் கொண்டனுபவித்தற்கும் இடையூறின்றி யெளிதில் கைகூடும். இவ்வாறன்றி இச்சுருதிகட்குத் தற்போதத்தால் பயனுணர்ந்து கோடற்கும் அவ்வாறே ஞானசாதகத்தைப் புரிதற்கும் முயற்சிப்பார்க்கு நிட்பிரயோசனமின்றிப் பயன் பெறவரிதாம்.

திருக்களிற்றுப்படியார்:—

"சாத்திரத்தை யோதினர்க்குச் சற்குருவின் றன்வசன
மாத்திரத்தை வாய்க்குநலம் வந்துறுமோ—ஆர்த்தகடற்
றண்ணீர் குடித்தவற்குத் தாகந் தணிந்திடுமோ
தெண்ணீர்மை யாயிதனைச் செப்பு"

கந்தர் அலங்காரம்:—

ஒளியை விளைந்த உயர் ஞான பூதரத்துச்சியின்மேல்
அளிய விளைந்த தோராானந்தத் தேனை யநாதியிலே
வெளியை விளைந்த வெறும்பாழை வெட்ட வெறுந் தனியைத்
தெளிய விளம்பியவா முகமாறுடைத் தேசிகனே.

கந்தர் அலங்காரம்:—

போக்கும்வரவும் இரவும் பகலும் புறம்புமுள்ளும்
வாக்கும் வடிவு முடிவுமில்லா தொன்று வந்துவந்து
தாக்கு மனோலயந்தானே தருமெனைத் தன்வசத்தே
ஆக்கு மறுமுகவா சொல்லொணாதிந்த ஆனந்தமே.

வரகுணராமபாண்டியன் மனைவி:—

ஆக்கையெனும் புழுக்குரம்பை அணைந்தணையாப் பொருளை
யகோசரமாம் பரவெளிக்குமப் பாலாமறிவை
நீக்கமற மயிர் நுனைக்கு மிடையுருதெங்கு
நிறைந்து நின்ற பேரொளியை நினைவிலெழுஞ் சுடரைப்
பாக்கியங்கள் பழுத்தனந்தந் தவக்குறைகண் முடித்த
பழவடியார்க் கருள்புரியும் பசுந்துணர்க் கற்பகத்தை

வாக்கு மனவிகற்பத்தினளவு படாவொன்மைம்
மாசற்ற வெறு வெளியை மனவெளியில் அடைப்பாம்

''சிறியவர் மணற்சோறுண்டு தேக்கிடல் போற்
றோர்ந்து நூற்றெளிந்த மாத்திரத்தின்
அறிதரிற் சிவமும் விடயமாமெனநீத்
தகத்திரு ளறுது வைத்தந்தோ
உறுமகம் பிரமமென வுரைத்திறுமாங்
குறைதலோ ஞானமஞ்ஞானங்
துறவினையுறுது மாயுமோ வாயாற்
சுடரெனினிருடுமிந்திடுமோ".

"சற்குரு வருளாலைய முந்திரிபுந்
தானற மறைமுடி வுணர்ந்த
பிற் குருபரன் றுண்முற் சரண்புகுந்த
பெரியவரினமரீ இருந்தொண்
சொற்களினரிய பொருடெரிந்த வணங்
தொலைத் தொரு சிறிது நாட்பின்னர்
கற்குதலாதி யனைத்து நீத்தென்றும்
ஞான சாதகத் தினுட் கழிப்பான்".

பகர்தரு தொழில்களனைத்துமோர் சிறிது
பண்ண வேண்டுவ பணிவிடுத்துப்
புகலுரையடக்கித் தனியிடத் திருந்து
போற்றி செய்தருட் குருபதம்பின்
மிக முயன்றி தையம் வருத்த மெய்தாமன்
மெலிந்து கை விடுதல் செய்யாமல்
அகமுகமாக்கி மனத்தை நாடொறுமோர்
ஐம்புலனெறி த்தசைவறுப்பான்.

முற்றும்.

திருச்சிற்றம்பலம்.

தேசிகன் திருவடி வாழ்க

காரிய கேவலமாவது நித்தியம் கருவிகணீங்கி நித்திரை கொள்ளுதல். காரண சகலமாவது அனுதி கேவலத்திலே யழுந்திக் கிடந்த ஆன்மா மாயா கருவிகளினுலே கேவலம் நீங்கிச் சுகதுக்கங்களையறிதல். காரிய சகலமாவது நித்தியம் கேவலப்பட்ட ஆன்மா மாயா கருவிகளினுலே மறைப்பு நீங்கிச் சத்தாதி விடயங்களை அறிதல்.

நிர்வாண தீட்சை இரண்டு விதமாயிருக்கும். அஃதெப்படி யென்னில் அசத்திய நிர்வாண மென்றும் சத்திய நிர்வாணமென்றுமாம். அவற்றுள் அசத்திய நிர்வாணமாவது சீடனுக் கறிவித்தால் அறியுந் தன்மை யிலாத படியினுலே ஆறத்துவாவையும் அறிவியாமல் தீட்சையிலே அவற்றை நீக்குதல். சத்திய நிர்வாணமாவது அறிவித்தால் அறியும் தன்மையுடைய சீடனுக்கு ஆறத்து வாவையும் அறிவித்து அவற்றை நீக்குதல். சிவனுடைய வியாபகத்திலே சிவசத்தி வியாப்பியம். சிவசத்தியிலே ஆன் மாவும் மலமும் வியாப்பியம். ஆன்மாவிலே ஆன்ம சிற்சத்தி வியாப்பியம். மலத்திலே மலச்சத்தி வியாப்பியம். ஆன்ம போதத்திலே மாயை வியாப்பியம். மாயா காரியத் திலே கர்மம் வியாப்பியம். கர்மத்திலே கர்ம காரியம் வியாப்பியம். ஆன்மாவுக்குப் புசிப்பாவது சிவானந்தத்தை யனுபவித்தல். சிவனுக்குப் புசிப்பாவது ஞானவான் களுடைய பிராரப்தம்.

சிற்றுரையும் பேருரையுஞ் சிவஞான போதமெனுந்
தெய்வ நூற்குக்
கற்றவர்கள் களிகூரக் கருணையினுற் செய்தளித்தான்
கலைகடேர்ந்து
முற்றுணர்வு முதலியவற்ருற் சிவனே யென்றறிஞர்
மொழிந்து போற்ற
நற்றுறைசைப் பதிமருவுஞ் சிவஞானயோகியெனு
நாமத்தோனே

திருச்சிற்றம்பலம்

# சைவ சித்தாந்த உரைநடை

மறதியைத் தருவது ஆணவ மலம். இந்த ஆணவ மலம் இருவினை ஒப்பு வந்ததிதிவர் சத்திநிபாதம் வந்து ஞானு சாரியனருட் பார்வை உண்டானுல் நீங்கும். நீங்கினுல் பகலிருட்டுப் போல அழியாமல் நிற்கும். ஆகையால் பஞ் சாக்கரத்தில் ஆணவ மலத்துக்கு மகாரம் வைத்தது. மறதியென்பதற்குத் தலை எழுத்து மாத்திரம் வைத்தது. சுத்த மாயா காரியமாகிற சொல்லும் சுத்த தத்துவம் ஐந்தும் அசுத்த மாயா காரியமாகிய முப்பத்தொரு தத்துவ மாகிய அரூபப் பொருளும் தண்ணீரின் சன்னிதானத்தில் உண்டாகிய நுரை தண்ணீரில் ஒடுங்காது போல இரண்டு மாயையின் சன்னிதானத்தின் அறுபது தத்துவமாகிய பிண்டமும் இருநூற்றிருபத்துநாலு புவனமும் தூலசத்தப் பரிசரூப ரச (சப்த, ஸ்பரிச, ரூப, ரச, கந்தம்) கெந்தமாய்த் தோன்றி மீண்டு காரணத்தில் ஒடுங்காமல் சங்காரப்படுகிற தூலப் பொருளுமாய் இப்படிப் பிரபஞ்சமென்று உண்டா கிய இரண்டு மாயா காரியமும் நீங்கிய காலத்துத் திருவருள் மேலீட்டால் பகல் விளக்குப் போல அழியாமல் நிற்கும். சீவன்முத்தி பரமுத்தியில் பலவடிவு காட்டாமல் குண குணி யாகிய காரண மாயையில் சத்தி வடிவாய் நிற்கும் அந்தத் தொழிலும் மாயையாம் என்ருல் அந்தத் தொழிலின்ன தொழில் இன்ன புண்ணியம், இன்ன தொழில் இன்ன பாவம் என்று இடுகுறிப்பேர் சங்கற்பித்தது போல நிருமலர் சங்கற்ப மாயிருக்கும். இந்தச் சங்கற்பம் சிவதருமோத்திர மான நூலாய் இருக்கும். இந்தக் கன்மமலம் நீங்கிடும் காலம் முன்னும் முதலில்லைப் பின்னு மழிவில்லை. மாயா காரிய முண்டாதற்குச் சங்கற்ப காரணமாய் நின்றழிந்து போம். பெத்தான்மாக்களுக்குச் சங்கற்பமல மாய் அறியாமையால் வந்தேறுகையால் அழியாமல் நிற்கும் திரோத மலமானது மறைப்பித்துப் புசிக்கின்ற தாயிருக்கு மறப்பித்து ...... தலாயது பஞ்ச விடையம் பின்னும் பின்னுமிதமாய்த் தோன்றுதல் அப்படியிதமாய்த் தோன்றப் பண்ணுவது பாவபுண்ணியம் புசிப்பித்துத் துலைத்தற் பொருட்டு. இந்த மலஞ்செடமோ சித்தோ வென்னில் சித்தாயிருக்கும். அதுவுஞ் சிவசத்தியாகிய சத்தியாயிருக்கும். அதுவும் மலமா யிருப்பது ஏதுஎன்னின் இருவினை ஒப்பு வருமளவுக்கும்

பரிகாரி சிரங்குக்குச் சத்திர மிடுகிற கோபம் போலவும், பிராமணனுயைத் துறையிலேயிருந்தால் ஆயக்காரனென்பது போல மலமானது, இது நீங்கும் காலம் பரிகாரி சிரங்கு குணமானல் சத்திரக்கத்தியின் தொழில் விட்டு குலாவி யிருத்தல் போல மறப்பை விட்டுத் திருவருளாய் நிற்றல் பெத்தான்மாக்களை மறைப்பித்து நிற்கையால் அழியாமல் நிற்குமிந்த நாலு மலத்தாலும் ஆன்மாவுக்கு நானென்று தோற்றுவிக்கையால் பஞ்சாக்கரத்தில் நகாரமென்று முத லெழுத்து வைக்கப்பட்டது. ஆன்மாவாவது அறிவித்தா லறிகிற அறிவாயிருக்கும். அதுதானும் தோன்றுமல் பெத்த காலத்தில் சரீரமாயிருக்கும். இருவினை ஒப்பு வந்தால் ஞானசாரியனை அடைந்து திரிபதார்த்தங்களை விசாரித்துச் சாதகம் பண்ணிச் சிவமாயிருப்பது. சிவமா யிருக்கும்போது ஒன்றுயிருக்குமோ இரண்டாயிருக் குமோ வென்னில் நாக்கு இந்திரியமும் ரசமும், வாயுவும் ஆகாயமும், கண்ணொளியும் சூரியனொளியும் இந்த மூன்று திட்டாந்தமும் போல இரண்டற நிற்பது ஆகையால் நித்திய மாய் இருக்கும். எவருக்குச் சிவத்தையும் சத்தியையும் கீழுள்ள பஞ்ச மலங்களையும் ஆராய்ந்து வினவுகிற முத லாகையால் பஞ்சாக்கரத்தில் 'யா' வென்கிற வினவெழுத் தாய் முதல் எழுத்தாய் வைக்கப்பட்டது. அருளாவது நிருமலருடைய குணமாயிருக்கும் குணம். எப்படி யென்னில் சூரியனுக் கொளிபோலிருப்பது. இந்த அருளிந்த உயிருக்கு நாம் கிருபை வைத்தோம் என்றிரங்கிக் கீழுள்ள பஞ்சமலங் களில் போகாமல் வாவென்று அழைத்துத் தன்னுள் அடக் கிச் சிவமாகிய இன்பத்தில் சேர்க்கையால் பஞ்சாக்கரத்தில் வாவென்கிற முதலெழுத்து வைக்கப்பட்டது. இந்த அரு ளுக்குக் குணியாகிய சிவமானது ஒளிக்கு முதலாகிய சூரியன் போலப் பேரின்பமாயிருப்பது. இந்தப் பேரின்பத்துக்கு இலக்கணம் எப்படியிருக்குமென்னில்

திருக்களிற்றுப்படியார்:—

> "ஒன்றுங் குறியே குறியாத லால் அதனுக்
> கொன்றுங் குறியொன் றிலாமையினல்—ஒன்றே
> டுவமிக்க லாவதுவுந் தானில்லை யொவ்வாத
> தவமிக்கா ரே இதற்குச் சான்று"

என்றபடியே நாதாக்கள் கண்ட காட்சியே இலக்கணமிது

முப்பாழுக்கப்பாற்பட்ட பேரின்ப சொரூபமான படியினுலே சகலத்துக்கும் சிவம் முதன்மையானதனுலே அந்தச் சிவம் கீழுள்ள நாலெழுத்துப் பொருளையுந் தனக்குள்ளே அடக்கிக் கொண்டு நிற்கிறபடியினுலே பஞ்சாக்கரத்தில் சிகாரம் முதலெழுத்தாக வைக்கப்பட்டது. இந்த எட்டு முதலுள் திரோதமும் அருளும் சிவத்தினடங்கிச் சிவமொரு முதலாக வைக்கப்பட்டதால் ஆறும் அனுதி யென்றறியவும். இதற்குப் பாந்த மெப்படி யென்ருல் ஆன்மாவுக்கு அனுதி ஆணவ மலமாகிய மறதிமலந் தீர்ப்பதற்கு அனுதிசுத்த மாயையின் காரியமாகிய சொல்லும் அனுதி அசுத்த மாயை யின் காரியமாகிய பொருளுமிந்த இரண்டாகிய சொல்லினும் பொருளினுமிவனை இருத்தியபடியால் ஆகாமியம் ஏறிப் பாவ புண்ணியமுண்டாயிற்று. அந்தப் பாவ புண்ணியம் தீர்ப்பதற்குத் திரோத மலமுண்டாயிற்று. அந்தத் திரோ தம் அருளாயிற்று. அந்த அருள் உயிரைப் பேரின்பமாக்கி இரண்டறப் பண்ணிற்று என்று அறியவும்.

2

தசகாரியத்திலே சாலோக சாமீப சாரூபமென்பதில்லை. அந்தத் தசகாரியத்தைப் பதி பசுபாச இலட்சணம் என்றறிய வும். சாலோக சாமீப சாரூபமாவது விபூதி உருத்திராட்சம் சகளச் சிவனுகக் கொண்டால் அந்தச் சகளச் சிவனிருக்கும் பட்டணத்திலே இவனை வைப்பது. சாமீபமாவது சிவலிங் கத்தைச் சகளச் சிவனுக உறுதியாய்க் கொண்டால் அவனை அந்தச் சகளச் சிவனிடத்தண்டையின் வைத்துக்கொள் வது. சாரூபமாவது இடை பிங்கலையால் செல்லும் பிராண வாயுவைச் சுழி முனையில் சலிப்பற நிறுத்தி ஆருதாரத்தில் இருக்கும் மூர்த்திகளைத் தரிசனம் பண்ணி, அதற்கு மேலாகிய சந்திரமண்டலமாகிய பிரமரந்திரத்தில் சோதி ஒளியைத் தரிசனம் பண்ணினுல் அந்தச் சகளச் சிவன் தம்முடைய சொரூபத்தைக் கொடுத்துச் சர்வ சங்கார காலமட்டும் தம் அண்டையிலே வைப்பது.

அழகிய சிற்றம்பல சுவாமி திருவடி வாழ்க.

---

சரீர முதன்மையோ? ஆன்மா முதன்மையோ? வென் னின் ஒருவன் தரித்திரத்தில் ஒருவனை யாசிக்க அவனெரு

கோட்டை நெல் கொடுத்தான். அந்த ஒரு கோட்டை நெல்லையும் ஒருமித்து எடுத்துப்போக வேண்டுமென்று ஆன்மா நினைக்கும். ஓர் கலம் நெல்லே சுமக்கும் தன்னுடைய சரீரம் அஞ்சு மரக்கால் நெல்லே சுமக்கும் ஆன்மா நினைத்த படி ஒருமித்து எடுத்துக்கொண்டு போகமாட்டாது. சரீரம் சுமக்கிறது அஞ்சு மரக்கால் நெல் மாத்திரம் சுமந்து கொண்டு போகிறபடியினுலே சரீரமே முதன்மையானது போல பெத்தத்திலே சிவன் முதல்வனே ஆன்மா முதல் வனே? ஆன்மாவைத் திரோபிக்கிற தெப்படியென்னில் திரு வருளைக்கொண்டு ஆன்மாவினுடைய அறிவு தொழில்களை மலச்செயல்களால் மறைப்பித்து அவரவர் கன்மங்களை நிறுத் தலே திரோபவித்தலாம் சுருதி, குருவாக்கு, சுவாநுபவம் மூன்றில் சுருதியிலே பொய்யாகவும் மெய்யாகவும் செல்லு கையால் கூடாது... ..க்கு கிரியைத் தொழிலினின்ற சிடனை சரியைத் தொழிலினிறுத்தப்படாதாகையால் இதுவும் கூடாதாகையால் சிவாநுபவமே முதன்மை. சுருதியும் குரு வாக்கும் சிவானுபவத்துக்குக் கருவியாகிய சகாயமென்று அறிக. உயிர்க்கு வியாதி மலம்; மருந்து, தீட்சை; பத்தியம் அதற்கேற்ற அனுட்டிப்பேயாம். பரிகாரி ஞானசாரியனும். ஆன்மாஆணவ மலமா..... ...லேயிருந்து எண்பத்துநான்கு நூருயிரம் யோனி பேதங்களாகிய மார்க்கத்திலே புறப் பட்டுப் புண்ணிய பாவங்களினுலுண்டான சுகதுக்கமாகிய கட்டமுதைச் புசித்துச் சிவஞானமாகிய ஊரிலே இளைப் பாறிச் சிவானுபவமாகிய பொசிப்புப் புசித்துக் கொண்டு சுகமாயிருப்பன். அது எப்படியெனில் ஒரூரிலேயிருந்து வழிப்புறப்பட்டுஅங்கங்கே தங்கியிருந்து காசிக்குப் போய்க் கங்கையிலே தீர்த்தமாடி சுகமே இருந்தது போலேயாம். சர்வ ஆன்மாவுக்கும் மோட்சத்திலே சிவாநுபவம் ஒருபடித் தல்லாமல் பலபேதமாயிருக்கும். அது எப்படியென்னில் சமுத்திரத்துக்குளளே நாழி, உழக்கு, மரக்கால், தோண்டி, பானை, தாழி, தனித்தனியே நிறைந்தது. அந்த நிறைவுகள் அதற்கதற்குப் பேதமாய் நின்றது போலவென்றறிக.

ஒருவன் பயிரிட்டு ஆயிரம் கோட்டை நெல்லுக் கண்ட பின்பு களஞ்சியத்தில் அஞ்ஞூறு கோட்டை கட்டி, முந்நூறு கோட்டை சோறு உண்கிறததுக்குக் கட்டி இரு நூறு கோட்டை வயலிலே விதையாக விதைத்தும் இருக்

கையிலே களஞ்சியக்கிடை தீய்ப்பட்டுப் போயிற்று. உண்ண வைத்த நெல் உண்டு, சிலவழிந்து போயிற்று. விதைத்தது தீஞ்சு போயிற்று. இது போல ஆன்மாவுக்குப் பக்குவம் வந்த காலத்துச் சஞ்சித கன்மமெல்லாம் ஞானு சாரியன் திருநோக்கத்தால் வெந்து பிராரத்துவ மெடுத்த சரீரத்துக்குப் புசித்துத் துலைந்தது. ஆகாமியமானது சிவ ஞானத்தாலே மேலைக்கு வாராமல் நீங்கிப் போயிற்று. இப்படி இம்மூன்றும் நீங்கின முறைமை அறிக. உட் பொருள், உள்ளில் பொருள், இல்பொருள், மெய்ப் பொருள் 5. அழி பொருள் 4. பொய்ப்பொருள் பல. பாச ஞானம் ஆணவ மல நீங்குமட்டும். பசுஞானம் நின்மல துரிய மட்டும், பதிஞானம் நின்மலதுரிய மட்டும்.

---

அறிவுபதி. அறிவித்தால் அறிவதான்மா. அறிவித்தாலு மறியாது ஆணவமலமாயறிவும் அறியாமையுமாம், கரு மந்தனு நின்றபடி ஆன்மா ஆணவ மலமாய் நின்றபோது, அறிவற்று மலமாய்ச் சிவத்தை அறிவித்தாலு மறியான் ஆன்மாவைச் சிவமா வரித்தபோது சிவமல்ல தொன்றையு மறியான். ஆன்மாவை மலமாவரித்தபோது, அறிவித்தாலு மறியானென்பதற்கு உதாரணம். "அறிவிக்கவன்றி" என்றும், ஒன்றதாய் அனேகசத்தி என்றும் அன்னிய மானவை யுணர்த்தி முயன்றும் பன்மொழிகளென்று ணரும், பெத்தமே அறிவாய்த் தன்னை, வினையைத் தலைவனை யறிவித்தாலுமறிவு செல்லாமையைப் பண்ணிக் கொண்டு நிற்கும். மலச்செயல் மலம் நீங்கிச் சுத்தமானவிடத்து அறிவித்தாலறிந்து வருகிறதற்குக் காரணம் மாயை, மாமாயை என்றும், சிவமாய் நிற்பதற்குக் காரணம் அது வென்னும் ஒன்றென்றும், பரஞானத்தால் பரத்தை என்றும் இந்த......சிவத்தை யொழுங்கிலே யாசாரியர் திருவாக்குக் கேள்வியாலே யறியவும், இது வரும்படிக்கு பாயம், சாலோகத்துக்கு உபாயம், தாதமார்க்கமென்றும், சாமீபத்துக்குபாயம் புத்திரமார்க்க மென்றும் சாரூபத்துக் குபாயம் சகமார்க்க மென்றும், சாயுச்சியத்துக்குபாயம் சன் மார்க்கமென்றும், ஞான நூலதனை யென்றுமிந்த வொழுங் கிலே யுண்மை கூடாதிருந்தால் அசத்தாயுள்ள வன்ன மென்றும், நிர்க்குணனுயென்றும், இன்னிலை தானில்லை

யென்றும் விளம்பிய வகை என்றும், இது கூடாதிருந்தால் விதிப்படி பஞ்சாக்கரத்தை உச்சரிக்க வென்றுமன்றோ சொல்லி இருக்கிறது. அது அல்லாமல் கண்ணை மூடிக் கொண்டு கரணங்களையடக்கியிருக்கச் சிவம்தானே கூடி நிற்கு மென்பாரை மறுத்துக் கூறியது, "பாவகமேற்றான் சத்தாம், கரணங்கள் கெட விருக்கை" என்றும் "ஒடுங்கிடா கரணந்தானே" என்றும் எண்டிசை விளங்கவென்னும் அகவல் முற்றுமறிய பாடாணவாதி கேவலம் போலே காண் டலும் கேட்டலுமில்லாமலிருக்கிற தேயென்னில் காணு பாவமரணங் கருமாம் சென்றிவன்றானென்றினென்றும் இப்படி ஆகமங்களிலே மறுத்துச் சொல்லியிருக்கிற படியினாலே அதற்குச் சுருதியில்லையே சுவாநுபவமில்லையே குருவாக்கில்லை. கேட்டால், சிந்தித்தல், தெளிதலோடே கூடியிருக்கிறதுமல்லவே. ஆகையினாலே, நிட்டை என்ப தெல்லாம் சுருதி குருவாக்குச் சுவாநுபவத்துடனே கூடி, இருக்கிறதே நிட்டை என்றறிக.

---

## 2.

**பஞ்சாட்சரச் சிந்தனை யென்றொரு சிந்தனை:** "சிவாயநம" என்றிருப்பது, இதற்குப் பொருள். சிகாரம்சிவம், வகாரம் அருள், யகாரம் ஆன்மா, நகாரம் திரோதை, மகாரம் மலம், இந்த ஐந்து பொருளும் அநாதியாய் நித்தியமாய், வியாபக மாய், அருவமாய் அகண்டிதமாய் ஒன்றாய் ஒரு கொத்தா யிருக்கும். யகாரமாகிய ஆன்மா நகாரமாகிய திரோதை யாலே பொய்யை மெய்யென்றும் மெய்யைப் பொய்யென் றும் மாறுபாடாகக் கருதிச் செனன மரணங்களிலே சுழலா நிற்கும். இப்படி இருக்கிற போது, சிவபுண்ணிய மிகுதி யினாலே அருளும் சிவமும் மேலிட்டு அப்போது மகாரமாகிய மலம் சிகாரமாகிய சிவத்திலே ஒடுங்கிப்போம். நகாரமாகிய திரோதை வகாரமாகிய அருளிலே ஒடுங்கிப் போம். யகார மாகிய ஆன்மாவும் வகாரமாகிய அருளும் ஒன்றாய்ப்போம். இதற்குத்திட்டாந்தம் எப்படியென்னின் சூரியகிரணம், கண் விளக்கு, இருள். இராக்காலத்துக் கண் இருளுடன் சேர்ந்த வுடனே விளக்கினுடைய ஒளியினாலே பதார்த்தங்களைத் திரிவாய்க் கண்டு கொண்டிருக்கும். விடிந்தபோது, இருள்

ஒளியிலே அழுந்திப் போம். விளக்குச் சத்தி கெட்டுப்போம். கண்ணும் ஒளியும் ஒன்றாய்ப் போம். சூரியனைப் போல கர்த்தா; கிரணத்தைப் போல அருள்; கண்ணைப் போல, ஆன்மா; விளக்கைப்போல திரோதை; இருளைப்போல மலம்; இராக் காலத்தைப் போல அபக்குவம்.

முற்றும்.

**பெந்த சிந்தனை யென்றொரு சிந்தனை:** பெந்த சிந்தனை யாவது என்ன? தேகம் அநித்தியம், அசேதனம் உருவம். உயிர் நித்தியம், சேதனம் அருவம். நித்தியத்துக்கு அநித்தியம் பகை. அநித்தியத்துக்கு நித்தியம் பகை. சேதனத்துக்கு அசேதனம் பகை. அசேதனத்துக்கு சேதனம்பகை. இப்படி யொன்றுக்கொன்று பகையாயிருக்கப் பகையை உறவென்று கொள்ளுவானேன்? உயிர், தன்னையுமறியாது, பகையையுமறியாது; உயிருக்கொரு நோயுண்டு. அது என்ன நோயென்னில் ஆணவ மலம். அது எப்போதே உள்ளது? எண்ணிலா ஆன்மாவுள்ள போதே வுள்ளது. அந்த நோயை கருத்தா இரக்கத்தினாலே யறிந்து கன்மமாகிய மருந்தைப் பொசிப்பிக்கிறதுக்கு மாயா தனுவைப் பாத்திரமாகக் கூட்டிற்று. ஆகையினாலே பகையை உறவென்று கொண்டிருந்தது. ஆனால் ஆன்மாவும் கர்த்தாவும் ஒன்றாயிருக்க ஆன்மா ஆணவமலத்தைச் சேருமோ? சேரும். அதெப்படியென்னில் ஆதித்தப்பிரகாசத்திலே கலந்தகண் இருளுடனே சேருமோ? சேராது. அப்படிப் போலக் கர்த்தாவும் ஆன்மாவும் ஒன்றாயிருக்க, ஆன்மா ஆணவமலத்தைச் சேருவானேன்? ஆன்மா ஆணவ அபக்குவமானதால் ஆணவமலத் தழுக்கோடே யழுக்காயிருந்தது. அபக்குவம் ஆணவ மலமென்னவாயிருக்கும். இராக்காலமும் இருளும் போலே இருக்கும். இராக்காலத்தில் கண், இருளுடனே சேர்ந்தது போல அபக்குவ காலத்து ஆன்மா ஆணவ மலத்துடனே சேரும், ஆன்மாவுக்கு அபக்குவ காலம் விட்டுப் பக்குவ காலம் வருகிற தன்மை எப்படியென்னில், அரும்பாக இருந்து அலருகிறது போல என்றறிக. ஆன்மாவுக்கு ஆணவமலம் இயற்கையோ? செயற்கையோ? இயற்கையானால் பாலென்கிற குணிக்குக் குணம் வெள்ளை, கரி என்கிற குணிக்குக் குணம் கறுப்பு, குணத்தை விட்டுக் குணி நீங்காது. குணியழியக் குணமழியும். ஆன்மாவுக்கு

ஆணவ மலம் இயற்கையென்றால் குணம்குணி வத்துவாக வேணுமே? ஆகையினாலே இயற்கையன்று. செயற்கையானால் வெள்ளைப்புடவையிலே அழுக்கேறுகிறது போல வெளுக்க வெளுக்க அழுக்கேறுகிறது (ம்) மீண்டும் வருகிறதாயிருக்குமே? ஆனதினாலே செயற்கையுமன்று. இனிச் சித்தாந்த மெப்படியென்னில் நெல்லுக்கு உமியும், செம்புக்குக் களிம்பும் பொ . , . . தி நீக்கத்தினாலே அனாதி செயற்கை யென்னமாயிருக்கும் சகசமாயிருக்கும். சகசத்துக்குப் பொருளென்ன? சகசமென்றது கூடச்சமென்று தித்தது கூட வுதித்தது; நீங்குமோ? நீங்கும். செம்பும் களிம்பும்கூட உதித்தது. செம்பையற வைத்தால் களிம்பு நீங்குகிறது போல ஆன்மா அபக்குவகாலம் விட்டுப் பக்குவ காலம் ஆணவமலம் நீங்கி மோட்சத்தை அடையும்.

**கலத்தல் :** கலத்தலாவதென்ன? ஆன்மாவுடனே கர்த்தா இன்று கலந்ததோ அன்று கலந்ததோ? அன்றே கலந்தது. இதற்குத் திட்டாந்தம் எப்படியென்னில் மர மிளமையீரம் அக்கினியீரம் மிகுதியோ? அக்கினி மிகுதியோ? ஈரம்மிகுதியானால் அகபட்டக் கம்பை முறித்துக் கடைந்தவுடனே அக்கினியுண்டாம் இப்படி மரத்தைப் போலே ஆன்மா. இளமையைப்போலே அபக்குவம். ஈரத்தைப்போலே ஆணவ மலம். அக்கினியைப் போலே **திருவருள். திருவருளானது** ஆன்மாவுடனே மலமிகுதியிலே யன்றே கலந்து நாளிலே மலபரிபாகப் படுத்தித் திருவருள் மேலிடும். அதெப்படி? இப்படி யென்றறிக.

**அனாதிமுத்தத் தன்மை :** அனாதிமுத்தத் தன்மையாவதென்ன? ஆன்மாவும் கர்த்தாவும் ஒன்றாயிருக்க ஆன்மா பஞ்சவிடயங்களைப் பற்றுவானேன்? ஆன்மா ஆணவமல நோயினாலே பஞ்சவிடயங்களைப் பற்றும். அந்த ஆணவமலம் கர்த்தாவைப் பற்றாதோ? பற்றாது. ஆனால் ஆன்மா ஆணவமல நோயினாலே பஞ்சவிடயங்களைப் பற்றுவதற்கும் அந்த ஆணவம் கர்த்தாவைப் பற்றாததுக்கும் சித்தாந்த மெப்படியென்னில் ஆதித்தன்சந்நிதியிலே படிகத்தை வைத்தால் அப்படிகத்தினுடைய நிழலினாலே படிகம் பஞ்ச வர்ணத்தையும் பற்றும். படிகத்தினுடைய நிழலின்றிப் படிகம் பஞ்சவர்ணத்தையும் பற்றாது படிகத்தினுடைய நிழலும்

ஆதித்தனைப் பற்ருது. அப்படிப் போல படிகத்தைப் போல ஆன்மா; படிகத்தின் நிழலைப்போல ஆணவமலம்; ஆதித்தன் சந்நிதானத்தைப் போல கர்த்தா. கர்த்தாவினுடைய சந்நிதானத்திலே ஆன்மா, ஆணவமல நோயினுலே பஞ்சவிடயங்களைப் பற்றும் அந்த ஆணவமலம் கர்த்தாவைப் பற்ருது. அது இப்படிப் போலென்றறிக.

**முப்பொருள் தன்மை:**—முப்பொருள் தன்மை யாவதென்ன? ஆன்மா வசப்படும் தன்மை திருவருள் வசப்படாத் தன்மை, ஆணவமலம் வசப்படுத்தும் தன்மை. ஆன்மா பெத்தக் காலத்திலே ஆணவ மலத்தின் இடமாக வசப்படும். முத்திக்காலத்திலே திருவருளிடமாக வசப்படும். ஆணவ மலம் ஆன்மாவைத் தன்வசப்படுத்தும். திருவருள் ஆணவ மலத்துக்கு வசப்படாது. இதற்குச் சிந்தாந்த மெப்படியென்னில்,

**கண் ஒளி இருள்:**-இராக்காலத்துக் கண் இருளோடே சேரும். பகல் காலத்துக் கண் ஒளியுடனே சேரும். இருள் கண்ணைத் தன்வசப்படுத்தும். ஒளி இருளுக்கு வசப் படாது. அது இப்படிப் போலென்றறிக.

**நின்மல தரிசனம்:** நின்மல தரிசனமாவதென்ன? கலவாக் காட்சி கண்ணுக் கின்மை அருள் விரவலின்றி உயிர்க் கறிவில்லை என்றது. அது எப்படிப் போல? ஒளியிலே கலவாத கண்ணுக்குக் காட்சியில்லாதது போல, அருள் விரவாத ஆன்மாவுக்கு அறிவில்லை. ஒளியிலே கலந்த கண்ணுக்குக் காட்சி உண்டானது போல அருள் விரவின ஆன்மாவுக்கு அறிவுண்டு. அது எப்படி? இப்படிப்போலவென்றறிக.

**மலச்செய லென்ருெரு சிந்தனை:** மலச் செயலாவதென்ன? ஆன்மாவை அகத்திறனுக்குச் செயலுண்டோ இல்லையே? உண்டு. அதெப்படிப் போல? கள்ளுண்டவனை மயக்குகிறதுபோலவும், சாராயமுண்டவனை மயக்குகிறது போலவும், விடந்தீண்டினவனை மயக்குகிறது போலவும் என்றறிக.

**கன்மத் தன்மை யென்ருெரு சிந்தனை:** கன்மத் தன்மை யாவதென்ன? கன்மத்தை ஆன்மா விரும்பித் தொகுத்தாக கொடுத்ததோ ஆனுல் ஆன்மா விரும்பிற்று. அதெப்படிப்

போலஎ? குழந்தை, பசி, பால், சங்கு, தாய். குழந்தைக்குப் பசியுண்டானவுடனே குழந்தையானது பாலிலே விரும்பி அழும். அந்த விருப்பத்தைத் தாயானவளறிந்து இரக்கத்தினாலே சங்கிலே பாலைக் கறந்து கொடுத்துப் பசியைத் தீர்ப்பாள். இப்படிப்போலே குழந்தை போன்ற ஆன்மாவுடனே கூடிப் பசி போன்ற ஆணவ மல நோயினாலே ஆன்மா கன்மத்தை விரும்பிற்று. தாய்போன்ற கர்த்தா அறிந்திரங்கிச் சங்கு போன்ற தேகத்தைக் கொடுத்துக் கன்மத்தைப் பொசிப்பிக்கும். அது எப்படி? இப்படிப் போலென்றறிக.

**மாயைச் சிந்தனை யென்றொரு சிந்தனை** : மாயைச் சிந்தனை யாவதென்ன? மாயா தேகத்தை ஆன்மா விரும்பித் தொகத்தாக கொடுத்ததோ ஆனால் ஆன்மா விரும்பிற்று. அதெப்படிப்போலஎ? குருடன் குருடு கோல் இடங் கோல் கொடுப்பான் குருட்டையுடைய...... குருடன் குருடனுக்கு என்னத்தின் பேரிலே விருப்பம்? கோலின் பேரிலே விருப்பம். அந்த விருப்பத்தை அவனுக்குத் உரித்துடையவன் அறிந்திரங்கிக்கோலைக் கொடுத்துக் குருடனுக்கு இச்சையுண்டான இடங்களெல்லாம் கூட்டிக்கொண்டு போவான். அப்படிப் போலக் குருடனைப்போல ஆன்மா. குருட்டைப்போல ஆணவமலம். கோலைப்போலத்தேகம். இடத்தைப்போல நரகம், சொர்க்கம். கோல் கொடுப்பானைப்போலத் திருவருள். மலத்தையுடையவன் மலன். மலத்துக்கு என்னத்தின் பேரிலே விருப்பம்? தேகத்தின் பேரிலே விருப்பம். அந்த விருப்பத்தைத் திருவருளறிந்து தேகத்தைக் கொடுத்து நரக சொர்க்கங்களிலே கூட்டிக்கொண்டு போய் இன்ப துன்பங்களைப் பொசிப்பிக்கும். அதெப்படி? இப்படிப் போலென்றறிக.

**கன்ம மனாதி யென்றொரு சிந்தனை** : கன்மம் அனாதியாவதென்ன? கன்மம் அனாதியாயிருக்கிற கன்மம் ஒன்றிலேயிருந்து அளவிறந்த கன்மம் உண்டாமோ? உண்டாம். இதற்குச் சித்தாந்தமெப்படி என்னில், ஒரு ஆலம் விதையிலேயிருந்து ஆலமரமுண்டாய் அளவிறந்த கொம்புகளும் காய்களும் கனிகளும் உண்டாகிறது போல என்றறிக.

**கன்ம முந்துதல் மாயை முந்துதல் என்றொரு சிந்தனை** : கன்மம் முந்துதல் மாயை முந்துதல் என்ற வினாவுக்கு விடை பனை முந்தினதோ பனங்கொட்டை முந்தினதோ? பனங்

கொட்டை முந்தினது. பனையில்லாமல் பனங்கொட்டை யுண்டாகுமா? பனையுண்டானதன்றே பனங்கொட்டையு முண்டு; பனங்கொட்டை யுண்டானதன்றே பனையும் உண்டு. அப்படிப் போலக் கன்மம் உண்டானதன்றே மாயையுமுண்டு. மாயை உண்டானபோதே கன்மமுமுண்டு. அதெப்படி? இப்படியென்றறிக.

**யோனிபேத மென்றொரு சிந்தனை :** யோனி பேதமாவ தென்ன? எல்லா உயிர்க்கும் ஆணவ மலத்துடனே சேர்ந்த வுடனே அந்த உயிர்களுக்கு எல்லாம் கர்த்தா ஒரு தனு வாய்க் கொடாமல் பலதனுவாய்க் கொடுப்பானேன்? ஆன்மா விரும்பினபடியே கொடுக்குமானுல் எல்லா உயிர் களும் ஒரு நோயுடனே சேரப் பல விருப்பமுண்டாமோ? உண்டாம். அதெப்படிப்போல வென்னில் ஒரு ஊரில் பத்து பேருக்குச் சுரம் வந்தால் அந்தச் சுரக்காரருக்கெல்லாம் வெவ்வேறே விருப்பமுண்டாகிறது. இது போலென்றறிக.

**அவத்தைத் தன்மை யென்றொரு சிந்தனை :** அவத்தைத் தன்மை யாவதென்ன? ஆன்மா கேவல அவத்தையிலே கருவி கரணங்களில்லாமல் துன்பமயமாய் அழுந்திக் கிடக் கும். அப்படி கிடக்கிற காலத்திலே தழற்பொ....இருளைச் சிறிது நீக்கிறுற் போலக் கலையென்கிற தத்துவத்திலுலே ஆணவமலத்தைச் சிறிதுநீக்கிச் சகலத்திலே கொண்டுவந்து விடும்போது, சகலமாய்த் தேகத்தைப் பற்றிப் பொய்யை மெய்யென்றும் மெய்யைப் பொய்யென்றும் மாறுபாடாகக் கருதிச் சனனமரணங்களிலே சுழன்று நிற்கும். அப்படி நிற்கிறபோது, சிவபுண்ணிய மேலீட்டிலுலே ஆன்மா சுத்தாவத்தைக்கு வந்து பொய்யைப் பொய்யென்றும், மெய்யை மெய்யென்றும் சுபாவத்தைக் கருதி நிற்கும். இதற்குச் சிந்தாந்த மெப்படியென்னில், கேவலமாகிய விருளி லுலே கலந்த கண் ஒன்றும் தெரியாதே கிடக்கும். விளக்கு வந்தவுடனே பதார்த்தங்களைத் திருகலாகக்காணும். விளக் கும் இருளும் நீக்கி ஆதித்தப் பிரகாசத்திலே கண் மாசறு காட்சியாகக் காணும். அதெப்படி? இப்படியென்றறிக.

**கலாதியிலே திருவருள் விரவலென்றொரு சிந்தனை :** கலாதி யில் திருவருள் விரவலாவதென்ன? திருவருளானது கலாதி என்கிற தத்துவத்திலே விரவி, ஆன்மாவுக்குச் சிறுகச்சிறுக

அறிவைக் கொடுக்கும். நிரம்ப அறிவைக் கொடுத்தலா காதோ? ஆகாது. இதற்குச் சித்தாந்தமெப்படியென்னில், ஒருவன் கண்ணுக்கு ஒளி மிகுந்தவுடனே வெள்ளெழுத்து வேண்டாம் அப்போது கண்ணுடியை வைத்தால் ஒளியானது கண்ணுடியிலே செறிந்து, சிறுகச் சிறுக ஒளியை விடும். அப்போது, கண் காணும். அப்படிப் போலக் கண்ணைப் போல ஆன்மா; ஒளியைப் போல திருவருள். கண்ணுடியைப்போலே கலாதி. எழுத்தைப்போலே திரிபதார்த்த உண்மை. அதெப்படி? இப்படிப் போலென்றறிக.

**கேவல சகலமென்றெரு சிந்தனை :** கேவல சகலமாவதென்னை? பெத்தனுக்குக் கேவலமும் உண்டு. சகலமும் உண்டு. பெத்தன் கேவலத்தில் கிடக்கிறபோது பாலும் சாதமும் பொசிக்கிறது இன்பமாயிற்று. ஆனால் கேவலமும் சகலமும் ஒன்றென்று சொல்லப்படுமோ? சொல்லலாம். இதற்குச் சித்தாந்தமெப்படியென்னில் குருடனுக்கு நித்திரை பண்ணுகிறபோது இருள் மயமாயிருக்கிறது. விழித்து நடக்கிறபோது முட்டு முழங்கால் பெருகிற்றது போல என்றறிக. அதெப்படி?

**இப்படியென்றறிக:** கன்மத் தன்மைக்குப் பின் பெத்தாளுக்கு மூன்று வினையென்றெரு சிந்தனை. பெத்தாள் முத்தாள் வினையாவதென்ன? பெத்தனுக்கும் ஆகாமியம் சஞ்சிதம் பிராரப்தமாயிருக்கும். முத்தாளுக்கும் இப்படியே இருக்கும். பெத்தனுக்கும் ஆகாமியத்திலே யேறுகிற வினை சஞ்சிதத்திலே கட்டுப்பட்டுப் பிராரப்தம் பொசிக்கிற போது, யான் எனதென்னும் செருக்கினலே, கர்த்தாவினுடைய உதவியை மறந்து, முன்னிலைப் பட்டு, பொசிக்கிறதனலே திரும்பவும் ஆகாமியமேறும். முத்தாளுக்கும் ஆகாமியத்திலே யேறுகிற வினை சஞ்சிதத்திலே கட்டுப்பட்டுப் பிராரப்தம் பொசிக்கிறபோது யான் எனதென்னும் செருக்கிற்று அக்கர்த்தாவினுடைய உதவியினலே திரும்ப ஆகாமியமேருது. இதற்குச் சித்தாந்தமெப்படி யென்னில், பயிரிடுகிறது போலும் ஆகாமியம். பயிர்ப்பலன் கட்டிவிக்கிறது போலும் சஞ்சிதம். கட்டிவைத்ததிலே சிறுகச் சிறுகப் பொசிக்கிறது போலப் பிராரப்தம் பொசிப்பு. அதெப்படி? இப்படிப்போலவென்றறிக,

**சிவஞானத்தாற் சிவத்தை அறிதலென்ஞெரு சிந்தனை :** *அதெப்படியாஞல் ஆன்மா திருவருளிஞலே சிவத்தை அறியும். இதற்குச் சித்தாந்த மெப்படி யென்னில் ஆதித்தப் பிரகாசத்திஞலே கண் ஆதித்தனைக் காண்கிறது போலென்றறிக.*

**மலபரி பாகமென்ஞெரு சிந்தனை :** *மலபரி பாகமென்ன? தேகாதிப் பிரபஞ்ச மெல்லாமே பொய்யென்று கண்டு ஞாஞசாரியார் சன்னிதானத்திலே பொய் ஞானத்தை விருப்புற்றுக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து நிட்டையைப் பொருந்தியிருக்கிறதென்றறிக.*

**கன்மபரி பாக மென்ஞெரு சிந்தனை :** *அதுவென்ன? கன்ம பரிபாகம் பிறந்த ஆன்மாக்கள் எப்படியிருக்குமாஞல்— உலகத்திலும் விருப்புற்று ஞானத்திலும் விருப்புற்றுக் கிரியைத் தொழில் வழுவாமல் செய்து முடித்துக் கொண்டிருப்ப தென்றறிக.*

**இருவினை யொப்பென்ஞெரு சிந்தனை :** *அதுவென்ன ? ஆன்மா, பசு புண்ணியத்தையும், பசுத் துரோகத்தையும், புத்திபூர்வமாகவும் செய்யும். சிவத் துரோகத்தையும் புத்திபூர்வத்திலும், புத்தியிலும் செய்யும். இப்படி ஒன்றுக் கொன்று கூடியும் குறைந்தும் செய்தால் இருவினையும் சமன்பிறக்கிற கால மெப்போது என்ருல் இதற்குள்ள சிவபுண்ணியத்தையும், புத்திபூர்வமாகவும் செய்யும். அந்தப் புண்ணிய மேலிட்டவுடனே யிருவினையும் சமஞெத்துத் தள்ளிவிடும். இதற்குச் சித்தாந்தம் எப்படி யென்னில் ஒரு ஊரிலே இரண்டு பாளையக்காரர் ஒன்றுக் கொன்று விரோதமாய் அரண்மனைச் சீமையெல்லாம் கொள்ளையிட்டுத் தீயும் கொளுத்திக் குடிபடைக்கு நிரம்ப இடுக்கண் பண்ணிக் கொண்டிருந்தார்கள். இப்படி இருக்கிறபோது, சீமைக்கு நல்ல ராசா வந்து சீமையும் சுபிட்சப்பட்டுப் பாளையக்காரரும் அவரவர் தானங்களிலே ஒடுக்கிக் கொண்டிருந்து போஞர்கள். இப்படிப் போல பாளையக்காரரைப் போலப் பசுபுண்ணியம், பசுத்துரோகம், சிவத்துரோகம். குடிபடையைப் போல, சிவபுண்ணிய ஆன்மாக்கள். இராசாவைப் போலச் சிவபுண்ணியம். இப்படி என்றறிக.*

**சத்திநிபாதம் என்றொரு சிந்தனை : அது என்ன ?** *சத்திநிபாதம் பிறந்த ஆன்மாக்களுக்குத் திருவருள் விளங்கித் தோன்றும், சத்திநிபாதம் தோன்றாத ஆன்மாக்களுக்குத் திருவருள் தோன்றாமல் மறைந்திருக் கிறது போல என்றறிக.*

**ஆசாரியரெழுந் தருளுகிறார் என்றொரு சிந்தனை அது என்ன ?** *ஆசாரியர் சீடனுக்கு மலபரி பாகம் ஆனதன் பிறகு எழுந்தருளுமோ? மலபரிபாகமாவதற்கு முன்னே எழுந்தருளுமோ ? மலபரி பாகமாவதற்கு முன்னே யெழுந்தருளும். மலபரி பாகம் ஆவதற்கு முன்னமே எழுந்தருளினால் எல்லா உயிர்களையும் ரட்சிக்க வேண்டுமே? ஆனால் மலபரிபாகமானதன் பிறகு எழுந்தருளும். மலபரி பாகமானபிறகு எழுந்தருளினால் சீடனுக்கு மலபரிபாக மானவுடனே மோட்சமாயிற்றே? பிறகு ஆசாரிய ரெழுந் தருள வேண்டாமே? மலபரிபாகமானாலும் அவன் தானே திரிபதார்த்த உண்மையை அறியமாட்டான். ஆனதனாலே ஆசாரியர் எழுந்தருளித் திரிபதார்த்த உண்மையை அறி வித்துப் பாத தாமரை சேர்ப்பதற்குச் சித்தாந்தம் எப்படி யென்னில், ஆதித்தப் பிரகாசம் எல்லார் கண்ணுக்கும் காட்டுகிறது . . . . பிறவியிலே படலம் மறைத்த கண்ணை வயித்தியன் வந்து உரித்தவுடனே அந்தக்கண் தானே பதார்த்தத்தைக் காணமாட்டாது. ஆதித்தன் வந்து காட்டுகிறது போல ஞானாசாரியர் வந்து அறிவிக்கிற தென்றறிக.*

**ஐந்து பொருளும் வியாபகம் என்றொரு சிந்தனை : அது** *என்ன ? கர்த்தா, ஆன்மா, ஆணவம், கன்மம், மாயை ஆக ஐந்து பொருளும் வியாபகம் என்றறிக.*

**திருவருளறிவித்தலென்றொரு சிந்தனை :** *அது என்ன ? திருவருள் எல்லா உயிர்களுக்கும் உயிர்க்குயிராய் இருந்து அறிவிக்கும் இதற்குச் சித்தாந்தமெப்படியென்னில் ஆதித்தப் பிரகாசம் எல்லார் கண்ணுக்கும் காட்டுகிறது போல என்றறிக.*

**ஆணவ மலம் மறைத்தல் என்றொரு சிந்தனை :** *அது என்ன ? தன்னிடத்திலே சேர்ந்த ஆன்மாக்களை ஆணவ*

மலம் மறைக்கிறது எப்படி யென்ருல் இருளானது உலகமெல்லாம் தோன்றி மறைக்கிறது போல என்றறிக.

**திருவருளிடங் கொடுத்தல் என்ரெரு சிந்தனை :** அது என்ன ? திருவருள் எல்லா உயிர்களுக்கும் இடம் கொடுத்து ரட்சிக்கும். இதற்குச் சித்தாந்தம் எப்படி யென்னில் ஆதித்தப் பிரகாசம் எல்லார் கண்களுக்கும் இடம் கொடுக்கிறது போல என்றறிக.

**உயிர்க்கு நெருக்கு உருமை என்ரெரு சிந்தனை :** அது என்ன ? எல்லா உயிரும் வியாபகமாயிருந்தால் ஒன்றுக் கொன்று நெருக்கப்படாதோ ? படாது. இதற்குச் சித்தாந்த மெப்படியென்னில் ஆகாசத்திலுள்ள நட்சத் திரங்கள் எல்லாம் பலபல விதமாயிருந்தாலும் அதனுடைய பிரகாசம் ஒன்ருயிருக்கிறது போல என்றறிக.

**ஆன்மலட்சணம் என்ரெரு சிந்தனை :** அது என்ன ? ஆன்மா ஏகதேசமோ வியாபகமோ? ஆனல் ஏகதேசம். ஏகதேசமானல் அழிந்து போமே? ஆனல் வியாபகம். வியாபகமானல் எங்கும் வியாபகமாய் இருக்கிற உயிரை உடல் சுமக்கிறதோ, உயிர் சுமக்கிறதோ? ஆனல் உடல் சுமக்கிறது. எங்கும் வியாபகமாய் இருக்கிற உயிரை உடல் சுமக்கிறதே யானல் கொட்டைப் பெட்டி போலே சுமந்து கொண்டு திரியுமோ ? உயிர் சுமக்கும். உயிர் சுமக்கிறது மெய்யானல் ஆளைப்போலே சுமந்துகொண்டு, திரியுமோ ? ஆனல் என்ன ? திருவருளானது தேகமாய், கரணமாய், புவனமாய், போகமாய், எல்லாமாய் இருந்து நடத்தும் போது ஆன்மா கருவி கரணதிகளிலே பதிந்துகொண் இன்பதுன்பங்களைப் பொசிக்கும். இதற்குச் சித்தாந்தம் எப்படி யென்னில் சமுத்திரத்திலே பரவன் தோணியைத் துடுப்பிட்டுத் தள்ளிக்கொண்டு போவன். அது எப்படிப் போல? சமுத்திரத்தைப் போல ஆன்மா. பரவனைப் போலத் திருவருள். தோணியைப்போல, தேகம். துடுப்பைப்போலே கருவி கரணதிகள். அது எப்படி? இப்படிப் போல என்றறிக.

முற்றும்.

## சருவ ஞாேனாத்தர ஆகமம்.

நிர்க்குணமாய் நின்மல நிருவிகற்ப நிட்களமாய்
நித்த நிரஞ்சன நிராதார நிராமயமாய்
அற்புதமாயப் பிராகிருதயப் பிரமேய
அசந்தேகமாய் விபாவயமாய்ச் சூக்கமமாய்த்.
தற்பரமாய், ஞான மொழியாற் காணுமவிசுத்த
சாசுதமாய்ச் சருவக் கனுமாய்ச் சருவவகதமாய்ச்
சிற்பரமாய்ச் சருவதோமுக வியாபகமாம்
சிவனைத் தன்னிடத்திலே பின்னமறத் தெளிந்து

மந்திரம், பதம், வன்னம் புவனந் தத்துவங்கள்
மருவுகலையாதி மூர்த்தா மூர்த்தமாக
முந்து பிரக்கிரியா மார்க்கங்களாம் அண்டம்
முழுதும் தன்னிடத்திருப்பதாகவே கண்டோன்
சந்ததமுஞ் சருவதரிசன சருவக்கினனுய்ச்
சருவபரிபூரண நிமலவி முத்தனுமாய்
வந்த கேவல பூதநிரதிச யானந்த
மயனுகிச் சிவசாட்சாத் காரதையாய் இருப்பன்

ஒருவசனமாகவே முடிந்த பொருளுரைத்தோம்
ஒன்ருகக் காண்பதுவே காட்சியின்னுந் திரும்பப்
பெருவசனமாகவே பலபட நீ கேட்டாலும்
பின்னும் நானிகழ்த்துவதும் இந்த வுபதேசந்
தருவசன சமுதாயம் பலபொருளும் விளக்குந்
தடுமாருது ஏகமாய்த் தானே தானுகி
நிருவசனமாய் ஞானமோனமொன்றும் இன்றி
நில்லாத நிலையின்றி நின்ற நிலை நிலையே

சத்தியவாசகமுரைத்தோமுன்னு மின்னு முரைத்தோஞ்
சாட்சாத் காரதை யானதாதான்மிய சம்பந்த
சுத்தவத்து விதம்இதுவே திரும்பாதமுத்தி
துவிதாத்து விதந்துவித மதோபாக மாகும்
ஒத்த அசாதாரண சாதாரண கற்பிதங்க
ளுணர்ந்து சுயம்பிரகாசமாய் எங்கும் நிறைவாய்த்
தத்துவாதீதமாய்த் தனையறிதல் முத்தி
சருவக்கி ஞாேனாத்தரஞ் சம்பூரணஞ் சமாப்தம்

சருவக்கி ஞாேனாத்தரம் முற்றும்.

## பதி பசு பாச தரிசனம்.

சுபாவம், வியாத்தி, வியாபகம், குணம், விசேடம், உரூபகம், உரூபம், சொரூபம், தரிசனம், சுத்தி, இலாபம் ஆக 11.

பாசசுபாவமாவது அறியாமை. (1) பாசவியாத்தியாவது ஆணவம், மாயை, கன்மம், மாமாயை, திரோதாயி என்றறிக. பாசவியாபகமாவது : ஆணவம் ஒன்றுயிருக்கச் சருவான்மாக்களிடத்திலும் வியாத்தியாய் நிற்பது மாயையொன்றுயிருக்கத்தனு கரண புவன போகங்கள் வெகுவிதமாகியும், கன்மம் ஒன்றுயிருக்கச் சஞ்சித புண்ணிய பாவங்களாகியும், பிராரப்த புண்ணிய பாவங்களாகியும், ஆகாமிய புண்ணிய பாவங்களாகியும் இருக்கை. (2) மகாமாயை ஒன்றுயிருக்கச் சுத்த தத்துவங்களாகியும், சத்தகோடி மகாமந்திரங்களாகியும், வேதாகம சாத்திர புராணங்களாகியும் நிற்கை 3. திரோதாயி ஒன்றுயிருந்தும் சருவான்மாக்களையும் மறைப்பித்து நிற்கை.

4. பாச குணமாவது தான் சடமாயிருக்கை.

5. பாச விசேடமாவது தான் செடமாயிருக்கச் செயற்படுதல்.

6. பாச ரூபகமாவது இத்தன்மை யெல்லாம் உடையதொரு பாசம் உண்டென நிற்றல்.

7. பாசரூபமாவது தானடுத்த தேகவடிவாய் நிற்கை.

8. பாசசொரூபமாவது ஆன்மா தன்னிடத்திலே செம்பில் காளிதம் எனவும், உடலில் கலந்த விடம் எனவும் தவிராத தெண்டம் எனவும், தேருக்குப் பாகன் எனவும் இருளுக்கு இருளெனவும் மறைப்பித்து மயக்கியும் பொசிப்பித்தும் பிரேரிப்பித்தும் விட்டுநீங்காத அந்தகாரமாய் நிற்கை.

9. பாச தரிசனமாவது ஆன்மாக்களுக்குப் பொய்யைப் பொய்யென்று அறியாமலும், தன்னைத்தனக்குத் தெரியாமலும், அருளைத் தெரியாமலும், சிவனைத் தெரியா

மலும், தான் பிரம்மம் என்னும்படியும், இதம்அகி தங்களைப் பொசித்தும் பிரபஞ்சம் தோன்ருமலும் நிற்கை.

10. பாச சுத்தியாவது இந்தப் பாசத்துக்கும் சிவனுக்கும் பணியில்லை என்றும், ஆன்மா இதுவல்ல என்றறிந்து விடுதல்.

1. ஆக இந்தப் பத்து அவதரமும் அருளாய் நின்றறிக. மேல் ஆன்ம சுபாவமாவது அனவரதமும் தத்துவங்களுடனே கூடுதல்.

2. ஆன்ம வியாத்தியாவது கூடின தத்துவங்கள் தானய் அந்தத் தத்துவங்கள் உள்ளளவும் வியாத்தமாய் இருக்கும்.

3. ஆன்ம வியாபகமாவது தத்துவங்கள் உள்ளளவும் ஒழியாமல் யான் எனது என்கை மேலிடுதல்.

4. ஆன்ம குணமாவது அறியாதிருக்கை.

5. ஆன்ம விசேடமாவது அறியாமை குணமாய் இருக்கிற போது பக்குவம் வந்தஇடத்து அறிவிக்க அறிந்து அறிவாய் விடுகை.

6. ஆன்ம ரூபகமாவது உடம்பொழிய உயிரும் உண்டெனப் பொருந்துதல்.

7. ஆன்ம ரூபமாவது இச்சா ஞானக் கிரியா சொரூபமாய் நிற்கை. இச்சையாவது ஒரு பண்ட பதார்த்தங்களுக்கு ஆசைப் படுகை. ஞானமானது ஆசைப்பட்ட பதார்த்தங்களைப் பகுத்தறிதல். கிரியையாவது அறிந்த பதார்த்தங்களை அபகரிக்கச் செய்யும் தொழில்.

8. ஆன்ம சொரூபமாவது மெய் போலத் தோன்றிய தேகாதிப் பிரபஞ்சங்களைப் பொய் பொய்யென அறிவிக்க அறிந்த அறிவு,

9. ஆன்ம தரிசனமாவது அந்த அறிவைத் தானே காண்கை.

10. ஆன்ம சுத்தியாவது தன்னுடைய இச்சா ஞானக்

கிரியை முதலான எல்லாவற்றையும் விட்டுஉணர்வும் அசைவும் அற்று நிற்கை.

*11.* ஆன்ம லாபமாவது இப்படி நிரஞ்சனமாய் நின்ற அவதரத்தில் விளைகிற பரமானந்த போகத்தை அனுபவிக்கை.

*1.* சிவசுபாவமாவது தத்துவாதீதமாய் நிற்கை.

*2.* சிவ வியாத்தியாவது சருவ லோகங்களினும் சருவான்மாக்களினும் ஒழிவற நிறைந்து நிற்கை.

*3.* சிவ வியாபகமாவது பூரணமாய் நிராமயமாய் நிற்கிற நிலைமையிலே ஆன்மாக்களை இரட்சிக்கைக் காரணமாகத் திருமேனிக்கொண்டு தோன்றுதல்.

*4.* சிவகுணமாவது அனவரதமும் ஒழியா அறிவாய் நிற்கை.

*5.* சிவ விசேடமாவது அறிவுக்கு அறிவாகியும் செடத்துக்குச் செயலாகியும் நின்று அறிவித்தும் சேட்டிப்பித்தும் செய்கை.

*6.* சிவரூபகமாவது அப்படி நிற்கிற அறிவுக்குப் பிராணனாய் நிற்பாரொருமுதல்உண்டெனத் தோன்றுதல்.

*7.* சிவ ரூபமாவது இச்சா ஞானக் கிரியா சொரூபமாய் நிற்கை. இச்சையாவது சருவான்மாக்களையும் இரட்சிக்க வேணும் என்கிற ஆசை. ஞானமாவது எல்லா உலகங்களையும் எல்லா உயிர்களையும் ஒரு காலத்திலே சேர அறிந்திருக்கை. கிரியையாவது ஆன்மாக்களையும், தேகாதி இந்திரியங்களையும் கூடின கன்மத்துக்கு ஈடாகப் பொசிப்பிக்கை.

*8.* சிவ சொரூபமாவது இந்த இச்சா ஞானக்கிரியைகளையுடையதானாலும் தான் நிருவிகற்பமாய் நின்ற நிலை.

*9.* சிவ தரிசனமாவது இப்படி நிருவிகற்பமாய்ப் பரிபூரணமாய் நின்ற பொருளைத் தானற நின்று காண்கை.

10. சிவயோகமாவது அந்த நிலையிலே கலந்து பூரணமாய் விடுகை.

11. சிவ போகமாவது.ஒழியாத பரமானந்தமாய்த் தோன்றுதல். முன் சொன்ன ஆன்மலாபமென்பதும் இது தன்னை என்றறிக.

முற்றும்

---

சுத்தாவவத்தைத் தத்துவங்களுடைய தொழிலை எல்லாம் பகுத்தறிதல் தத்துவரூபம். இவை சடமாக்கும் இதற்கொரு செயலில்லை என்றறிகிறது தத்துவ தரிசனம். செயல் இல்லாவிட்டால சேட்டிக்குதே என்முல் எல்லா முன்னலேயாக்கும் தொழில்படுகிறது. இதற்கொரு செயல் இல்லை என்று திருவுளம் பற்றியதே. அப்படியா? நம்மாலேயோ தொழில் படுகிறது; இதற்கொரு செயல் இல்லை அல்லவா என்று அறிந்தால் அங்கே ஆன்மரூபம். ஆன்மரூபத்திலே தத்துவசுத்தி. இது நின்மலசாக்கிரம். நீ தானே ஒரு பொருள் என்று இராதே. உனக்கு மேல் ஒரு பொருள் உண்டு. அப்படியா? நமக்கு மேல் ஒரு பொருள் உண்டு என்று அறிந்தால் அங்கே சிவரூபம். சிவரூபத்தில் ஆன்மதரிசனம். இது நின்மல சொற்பனம். உனக்கு ஒரு செயலில்லை. நீயும் அந்த தத்துவத்தைப் போலச் சுத்தஜடந்தான். எல்லாம் திருவருளாக்கும் செய்விக்கிறது. அப்படியா? எல்லாம் திருவருளா செய்விக்கிறது? நமக்கு ஒரு செயல் இல்லையல்லவா? என்று அறிந்தால் அங்கே சிவதரிசனம். சிவதரிசனத்தில் ஆன்மசுத்தி. இது நின்மல சுழுத்தி. இது குணமாக்கும். இதற்கு மேல் குணி ஒன்று உண்டு. அதை அனுபவித்தாலாக்கும் இன்பமது திருவருளுக்கே ஒழிந்து மற்றதற்குக் கூடாது. நீயும் அந்தத் திருவருளாய்ப் போனல் அதை அனுபவிக்கலாம். அப்படியா என்று திருவருளாய்ப் போனல் அங்கே சிவயோகம். சிவயோகத்திலே நின்மல துரியம். உடனே ஆனந்தத்து அழுந்திவிட்டால் அது சிவபோகம். இது நின்மல துரியாதீதம். அறிந்தது தொடர்ந்தது. ஒருவன் விடிய இரண்டு நாழிகையென்ன எழுந்திருக்கவேண்டுமென்று நித்திரை செய்தான். அப்

போது, விடிந்து போயிற்று. விடிந்துபோயிற்றே என்று ஒளியிலே போயொளித்தால் ஒளி விட்டு விடுமோ விடாதது போலறிந்தது துடர்ந்தது. அறிந்தது பிரிந்தது. தம்பிதமையன் இரண்டு பெயர். தம்பி வீட்டிலொரு திருடன் நிதம் திருடிக் கொண்டு போவான். தம்பி தமையனண்டை யில் போயண்ணேயென் வீட்டில் நிதம் திருடிக் கொண்டு போகிறான் நீ வந்தின்றைத் தினம் படுத்துக்கொள்ள வேணுமென்று சொன்னான். நல்லது என்று வந்து படுத்துக் கொண்டான், பின்பு திருடன் வந்து கதவைத் தட்டினான் அப்போது திருடன் வந்தானென்று தமைய னுடனே சொல்வதனைக் கள்ளன் கேட்டோடத் தம்பி, வெளியிலே புறப்பட்டான். தமையன் கள்ளன் ஓடிப் போனா னென்று தம்பியை நிறுத்திக் கொண்டான். தமையன் போல் சிவன்; தம்பியைப் போல் ஆன்மா, கள்ளனைப் போல மலம்.

**திருவடி** :—திருவடியாவது பரிபூரணமாயிருக்கும். அதற்கு இரண்டு கால் முளைந்திருக்குமோ? இல்லை. பின்னை யெப்படி? நிலவு கால் வீசித்தென்றாற் போலறிக.

பன்னு தத்துவரூபகமுந் தத்துவ தெரிசனம்
பகர் தத்துவ சுத்தியுமான்ம ரூபகமு
மின்னான்கு நின்மல சாக்கிரத்திலடக்கம்
இனி ஆன்ம தெரிசனமுஞ் சிவரூபமுஞ்
சொன்னோங் காணின் மலசொற்பனத்தின் அடக்கஞ்
சுழுத்திதனிலொன்றுமிலைத் துரியந்தன்னி
லுன்னு மனுச்சுத்தி சிவதெரிசனஞ் சிவயோக
மோங்குந் துரியாதீதத் தடங்குஞ் சிவபோகம்

அத்தனுரை சிவஞான போத மிரண்டதனி
லறைகுவர் தத்துவ ரூபகமுமஞ் சில
வித்தகமாந் தத்துவ தெரிசனமு மாறில்
விளம்பிய தத்துவ சுத்தியும் ஏழி
லித்தகைமையான் மரூபகமுமெட்டி
லியம்பான்ம தெரிசனமுஞ் சிவரூபமொன்பான்
பத்தான்ம சுத்தி சிவதெரிசனம் பின்
பகர் சிவயோகம் சிவபோகம் பதினொன்றே.

# உண்மை நிட்டை கூடும் உபாயம்

பக்குவம் வந்துழி குருகடாட்சத்தினாலே உதித்த சிவ ஞானத்தான் முப்பொருள் உண்மையை அறிந்து, சூடானது நெருப்பை யடைந்த இடத்தல்லது நீருக்குள தாகாத முறைமை போல யான்எனது என்னும் தற்போதம் கருவியை யடைந்த இடத்தல்லது ஆன்மாவுக்கு இயல்பாக உளதாகாது என்றறிந்து நீங்கிப் படிகம் போல ஆன்மா அடைந்ததன் மயமாயிருக்கும் தன்மையால் கேவலத்தில் ஆணவத்தை யடைந்து வியாபித்து அசைவற நின்றாற் போலச் சிவத்தையடைந்து வியாபித்து அசைவற நின்றவ புடைந்தன் முயற்சியாலடைந்ததாய்க்கருதாது, வாயுவெங்கு நிறைந்து நின்றாலும் தானறியாமலதுதானாய்ச் சீவித்துத் தன்னையடைந்தாற் போல இன்புருவாகிய சிவம் தானே பிர காசித்துத் தன்னை அடைந்த இடத்து, அது ஆன்மாவின் தன்வசமாகாமல் வலித்து இரும்பைக் காந்தம் வசம் செய் தாற்போல ஆன்மா அந்தச் சிவானந்த வசமாய் நின்றாற் போலச் சிவானந்த மயமாய் நின்று இரும்பு அக்னிமயமாய் நின்றாற்போலச் சிவானந்த மயமாய் நின்று தெரிவைப் பரு வத்தில் சேயிழையார் நல்ல பருவத் தலைவனோடு புல்கியுருகி யேயின்புருவாய்ப் பக்குவத்தாலென்றாற் போல ஆனந்தச் சிதாகாசத்திலே முழுகிச் சிப்பிவெள்ளியாய்த் தோன்றின முறைமை போலவும் சீதம் வெம்மையை யடைந்த போதின் பமாயிருந்தும் வெம்மை நீங்கின இடத்துத் துன்பமானாற் போலவும் விடய போகமனைத்தும் இன்பமாய்த் தோன்றி னும் உபாதி நீங்கினவிடத்துத் துன்பமாய்த் தோன்றுமாறு போலத்தோன்றாது சிவானந்த மின்பமயமாக இருத்தலால் அதனைவிட்டு நீங்காமல் அனுபவித்துக்கொண்டே யிருக்கு மென்று இப்படிப் பலகாலும் சிந்தித்துத் தெளியத்தெளிய நிட்டைகூடும். பக்குவமில்லாத இடத்து இந்த நிட்டை கூடாது, கூடாதானால் புருவமத்தியிலே யருளிச்செய்யப் பட்ட உபாய நிட்டை கூடவே உண்மை நிட்டையும் கூடு மென்று அறிந்து அவ்வாறு நிற்க இருளிலே விழித்திட்ட வனைப் போலச்சிவானந்த நிறைவிலே விழிக்க வேறொன்றும் தோன்றாதென்றதாம்.

உண்மை நிட்டை கூடுமுபாய முற்றும்.

திருச்சிற்றம்பலம்.

# சுத்தாவத்தைக்குத் திட்டாந்தம்

கண்ணானது இராக்காலத்திருளினாலே மறைபட்டு இருளாய் நிற்பது கேவலம். கண்ணானது விளக்கு வந்த இடத்து இருட்டுச் சிறிது நீங்க விளக்காய் நின்று பதார்த்தங்களைக் கண்டு நிற்பது சகலம். கண்ணானது விளக்குத் தகளி, நெய், திரி, அக்கினி, ஒளி கூடித் தொழிற்படும் செய்தியறிதல். 1. தகளி, நெய், திரி, அக்கினி, ஒளி இவ்வைந்தும் தனித்தனித் தொழிற்படாது, ஒருவன் தனித்தனித் தொழிற்படுத்திக் கூட்டுவித்தலும் கண்ணுக்கு விளக்கினிடமாய்க் காணும் செய்தியொழிந்து விளக்குக்குக் காணும்செய்தியில்லையென்று நிற்பது.

2. கண்ணுக்கு விளக்கு பதார்த்தங்களைக் காட்டுகிற தொழிந்து சூரியனைக் காட்டாதென்று ஒருவராலறிந்து விளக்கினிடத்திலே பற்றற்று நிற்பது.

3. விளக்கைக் கண்டறிந்து நீங்கினது கண்ணேயல்லாமல் வேறேயொருவன் முதலில்லை, கண்ணே முதன்மை என்று நிற்பது.

4. கண்ணானது சூரியகிரணம் கூட்டினாலல்லது தானாய்க் காணும் செய்தியில்லை என்று நிற்பது.

5. கண்ணுக்கு இராக் காலமெல்லாம் விளக்கைக் கொண்டு காட்டியும், பகற்காலம் சூரியன் கிரணத்தினாலே காட்டிக்கொண்டு நிற்பரென்றறிவது.

6. கண்ணொளி சூரியகிரணத்தைப் பொருந்தியிருக்கிறதனாலே காட்டும் தொழில் செய்வேனென்று சொல்ல சூரியகிரணத்தைப் பொருந்தின கண் மற்றொருவன் கண்ணுக்குக் காட்டமாட்டா தென்றறிந்து எல்லாக் கண்ணுக்கும் சூரியகிரணமே காட்டுமென்று கண்டு நிற்றல்,

7. கண்ணொளியானது சூரிய கிரணத்தினாலே பதார்த்தங்களில் பற்றுதல் விட்டு கிரணத்தையே நோக்கிக் கொண்டு நிற்பது.

8, கண்ணொளியானது கிரணத்திலே யடங்கி நிற்பது வேயல்லது மேலே சூரியனில்லையென்று சொல்ல கிரணம்

வந்து கண்ணையும் பதார்த்தத்தையும் காட்டினது போல, சூரியனையும் காட்டும். அப்படிக் கிரணத்தினாலே சூரியனைக் கண்டார் கண்ணுக்குப் பிரயோசனமென்று மறுக்கச் சம்மதித்து இருளிலே கண்ணொளியடங்கியிருப்பது போலக் கிரணத்திலே கண்ணொளி யொன்றாய் நிற்கக் கண்ணொளியும் சீவியாது கண்ணுக்குள்ள குற்றமும் நீங்கும். கண்ணொளியானது கிரணத்திலே அடங்கி நிற்கவே சூரியன் தோன்றும். அதை நீங்காமற்கண்டு நிற்பதுவே கண்ணுக்கு உள்தீபம்.

முற்றும்

# உன்மனை வகுப்புத் தெரிசனை

அபானத்துக்கும் இலிங்கத்துக்கும் நடுவே முக்கோணம். அசபையுமிலிங்கந்துடங்கி உந்திக்குக் கீழ் ஓங்காரமும் ஹ்ரீங்காரமும் முக்கோணத்தைச் சூழ்ந்து சொரிதழல் பிரகாசமாயிருக்கும். உந்திக்குமேல் நாலங்குலத்திலே அகாரம் கொழுந்துவிட்டெரிகின்ற அக்கினிப் பிரகாசமாயிருக்கும், மார்பிலே உகாரம் சந்திரனும் சூரியனும் கூடிய பிரகாசமாயிருக்கும். நாவடியிலே மகாரம் மின்னொளி போன்றிருக்கும். விந்துவுக்கு மேல் மூன்றங்குலத்திலே அர்த்த சந்திரன் வாளொளி போன்றிருக்கும். அர்த்த சந்திரனுக்கு மேல் மூன்றங்குலத்திலே நிரோதி புகையொளி போன்றிருக்கும். நிரோதிக்கு மேல் மூன்றங்குலத்திலே நாதம் மாணிக்க வொளியாயிருக்கும். உச்சித்தலையில் நாதாந்தமிரண்டும் மின்னொளி போன்றிருக்கும், உச்சித் தலைக்கு மேல் நாலங்குலத்திலே சத்தி நூறுயிரங்கோடி ஆதித்தர் உதயகாலத்துப் பிரகாசமாயிருக்கும். அதற்கு மேல் நாலங்குலத்திலே வியாபினி நூறுயிரங்கோடி ஆதித்த வட்டத்துள்ளே நீராளமான ஒளியாயிருக்கும். அதற்கு மேல் மூன்றங்குலத்திலே சமனை நூறுயிரங்கோடி ஆதித்தர் வெயிற்பிரகாசமாயிருக்கும். அதற்குமேல் ஓரங்குலத்திலே உன்மனை இருளாயிருக்கும். அதற்கு மேலோரங்குலத்திலே வியோம ரூபிணி ஞானாகாசமாயிருக்கும். அதற்கு மேல் ஓரங்குலத்திலே அநந்தை ஞானவாழியாயிருக்கும். அதற்கு மேல் ஓரங்குலத்திலே அனுதை ஞானக்கண்ணுடியாயிருக்கும். அதற்கு மேல் ஓரங்குலத்திலே அனுசிருதை நூறுயிரங்கோடி பூர்ண சந்திரர் கூடின பிரகாசமாயிருக்கும். அதற்கு மேலுபதேசம் புண்ணிய குருவின் தண்ணளி தருமே-தெரிசனை முற்றும்.

---

மூலாதாரத்திலே மூத்த நயினர் 600. பிருதுவியில் பிரமா 6000. அப்புவில் விட்டுணு 6000. தேயுவில் உருத்திரன் 6000. வாயுவில் மகேசுரன் 1000. ஆகாசத்தில் சதாசிவம் 1000. நாதாந்தத்தில் தெக்ஷுணமூர்த்தி 1000. ஆக நாளொன்றுக்கு 21600 சுவாசம் உருச்செபிக்கும் மூலாதாரத்தில் அசபை இயக்கம்.

நீடுஞ்சிவநிலே பன்னிரண்டங்குலம்
ஓடியுயிரெழுந்தோங்கி யுதித்திடும்
நாடுமினுதாந்த நம்பெருமானுகந்
தாடுமிடந்திருவம் பலந்தானே.

தெளிவுகுருவின் றிருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவின் றிருநாமஞ் செப்பல்
தெளிவு குருவின் றிருமேனி காண்டல்
தெளிவுகுருவுருவஞ் சிந்தித்தல் தானே

எட்டு மண்டலத்துளே யிரண்டுமண்டலம் வளைந்
திட்ட மண்டலத்துளே யெண்ணியாறு மண்டலந்
தொட்டமண்டலத்துளே தோன்றுமூன்றுமண்டல
நட்டமண்டலத்துளே நாத னுடு கின்றதே.

முற்றும்

———

# ஞானம் உணர்த்தும் முறைமை

ஞானத்துக்குப் பக்குவமானுன் ஒருவன் தனக்குக் கன்ம ஒப்பு மலபரிபாகம் உண்டான காலத்திலே எழுந்தருளின பரமசிவமான ஞானுசாரியனைத் தரிசனம் பண்ணிச் சீர் பாதங்களில் வணங்கி நின்று அடியேனுக்கு ஞான போதனை அருளிச் செய்ய வேணுமென்று கேட்க, அப்போது ஞானுசாரியர் ஆனவர் சிஷ்யனைப் பார்த்து வாராய் மாணவகனே ஞானபோதனையறியுமிடத்துப் பதியென்றும், பசுவென்றும், பாசமென்றும் சொல்லப்பட்ட பொருள் மூன்று. இதில் பதியாவது சிவம். பசுவாவது ஆன்மா. பாசமாவது ஆணவம். மாயை காமியமென்றும் பெயர் பெற்றிருக்கும். இதில் பசுவாகிய ஆன்மா பாசமான ஆணவ மாயை காமியங்களாகிய பாசத்தை நீக்கிக்கொண்டு பதியாகிய சிவத்திலே கூடுகிறது முத்தி முடிவாகிய மோட்சமெனப்படும். இதையறியும் மார்க்கமே ஞான போதனை என்னப்படும். ஆகையால், வாராய் மாணவகனே எண்சாண் உடம்பான சரீரத்திலே பொருந்திய கருவி கரணங்களிலே சுகதுக்கங்களை அனுபவிக்கப்பட்ட ஆன்மாவாகிய நீ யொருத்தன் உண்டே, உன்னை இன்னுனென்று சொல்லப்பா என்று கேட்ட ஆசாரியரைப் பார்த்து சீடன் சொல்லுவது, வாரீர் சுவாமியாரே, நானுரோவென்று கேட்பீராகில் சொல்லுகிறேன். பிருதுவி என்று சொல்லப்பட்ட பூதமே ஆன்மாவாகிய நான் என்று சொன்ன சீடனைப் பார்த்து ஆசாரியார் சொல்லுகிருர். வாராய் மாணவகனே, பிருதுவி நீயாகிய பூதமானது உருத்தரித்துக்கொண்டு எண்சாண் உடம்பாகிய மயிர் எலும்பு நரம்பு தோல் தசை என்று சொல்லப்பட்ட அஞ்சு விதங்களாக இருக்கும். இப்படி இருக்கிரும் என்றும் தான் அறியாது; வேறே வரப்பட்ட பொருள்களையும் அறியமாட்டாது. இறந்தான் ஒருவன் சரீரம் கிடக்க, உயிர் போயிற்று என்று கிலேசப்படுவது தெரியும். ஆதலால் பிருதுவி ஆகிய பூதம் நீயல்ல. உன்னை வேறே காண்பாயாக என்று ஆசாரியர் சொன்னவுடனே சீடன் சொல்லுவது, வாரீர் சுவாமியாரே, தேவரீர் போதித்த போதனையாலே பிருதுவி நானல்ல என்பது கண்டு கொண்டேன், இனி அப்புவாகிய பூதம் நானென்று சொன்ன சீடனைப் பார்த்து, ஆசாரியர் சொல்லுவது, வாராய் மாணவகனே அப்புவானது உன்னி

டத்திலே இருந்து பதம் செய்துகொண்டு மச்சை, உதிரம், நீர், சுக்கிலம், மூளை என்கின்ற அஞ்சு விதங்களாக இருக்கும், இப்படி இருக்கிறோம் என்று தன்னைத்தான் அறியமாட்டாது; பிற பொருளையும் அறியமாட்டாது அசத்து. ஆதலால், அப்புவாகிய பூதம் நீயல்ல, உன்னை வேறே காண்பாயாக என்று ஆசாரியார் சொன்னவுடனே, சீடன் சொல்லுவது, வாரீர் சுவாமியாரே! அப்புவாகிய பூதம் நான் அல்ல என்பது கண்டுகொண்டேன். இனி தேயு என்கிற பூதமே நான் என்று சொன்ன சீடனைப் பார்த்து, ஆசாரியார் சொல்லுவது, தேயுவாகிய பூதம் உன்னிடத்திலே சுட்டு ஒன்றிவித்துக்கொண்டு ஆகாரம், பயம், மைதுனம், சோம்பு, நித்திரை என்கின்ற அஞ்சு காரியங்களாகி இருக்கும், இப்படி இருக்கிறோம் என்று தன்னைத் தான் அறியமாட்டாது அசத்து. ஆதலால் தேயு வாகிய பூதம் நீயல்ல. உன்னை வேறே காண்பாயாக என்று சொன்ன ஆசாரியாரைப் பார்த்துச் சீடன் சொல்லுவது, தேயுவாகிய பூதம் நானல்ல என்பது கண்டுகொண்டேன். இனி வாயுவாகிய பூதமே நானென்று சொன்ன சீடனைப் பார்த்து ஆசாரியார் சொல்லுவது, வாயுவானது உன்னிடத்திலே சலித்து திரட்டிக்கொண்டு ஓடல், நடத்தல், நிறுத்தல், இருத்தல், கிடத்தல் என்கின்ற அஞ்சு காரியங்களாகவும் உச்சுவாச, நிச்சுவாசங்களாகவும் இருக்கும். இப்படி இருக்கிறோமென்று தன்னைத்தானறிய மாட்டாது; பிற பொருளையும் அறியமாட்டாது அசத்து. ஆதலால் வாயு பூதம் நீயல்ல, உன்னை வேறே காண்பாயாக என்று சொன்ன ஆசாரியாரைப் பார்த்துச் சீடன் சொல்லுவது, வாயுவாகிய பூதம் நானல்ல என்பது கண்டுகொண்டேன். இனி ஆகாசம் என்கின்ற பூதமே நான் என்று சொன்ன சீடனைப் பார்த்து ஆசாரியார் சொல்லுவது, ஆகாசமாகிய பூதம் நிரந்தரமாக நாலு பூதத்துக்கும் இடங்கொடுத்துக் கொண்டு உன்னிடத்திலே காம, குரோத, லோப, மோக மாச்சரியங்களாகிய அஞ்சு விதங்களாக இருக்கும். இப்படி இருக்கிறோம் என்று தன்னைத் தானறிய மாட்டாது; வேறொரு பொருளையும் அறியமாட்டாது அசத்து. ஆதலால் ஆகாசமாகிய பூதம் நீயல்ல. உன்னை வேறே காண்பாயாக என்று ஆசாரியார் சொன்னவுடனே சீடன் சொல்லுவது,

ஆகாசம் என்கிற பூதம் நானல்ல என்பது கண்டுகொண்டேன். இந்தப் பஞ்ச பூதங்களும் ஒன்றையொன்று அறியாததும் கண்டு கொண்டேன். இனி நான் ஆறென்னில், சோத்திராதிகளாகிய ஞான இந்திரியங்களே நான் என்று சொன்ன சீடனைப் பார்த்து ஆசாரியார் சொல்லுவது:- ஞான இந்திரியங்களாவது செவி, தோல், கண், நாக்கு, மூக்கு என்கின்ற அஞ்சு விதங்களாக இருக்கும். இந்த அஞ்சுமே சத்தாதிகள் வரப்பட்ட வாசலாக இருக்கும். இப்படி இருக்கிறோம் என்று தன்னைத்தான் அறியமாட்டாது, அசத்து. ஆதலால் ஞான இந்திரியங்கள் அஞ்சும் நீயல்ல, உன்னை வேறே காண்பாயாக என்று ஆசாரியார் சொன்னவுடனே சீடன் சொல்லுவது, ஞான இந்திரியங்கள் நானல்ல என்பது கண்டு கொண்டேன். இனிச் சத்தாதிகளே நான் என்று சொன்ன சீடனைப்பார்த்து ஆசாரியார்சொல்லுவது, சத்தாதிகளானவை புலன்களாகச் சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்கிற அஞ்சு விதங்களாக இருக்கும். அஞ்சு காரியமும் உனக்குப்புறம்பாக இருந்து சோத்திராதியின் வழியாகப் பொருந்தி நிற்கும். இப்படிப் பொருந்தியிருக்கிறோம் என்று தன்னைத் தானறியமாட்டாது; பிறபொருளையும் அறியாது அசத்து. ஆதலால் சத்தாதிகள் ஐந்தும் நீயல்ல உன்னை வேறே காண்பாயாக என்று ஆசாரியார் சொன்னவுடனே சீடன் சொல்லுவது; சத்தாதிகள் நான் அல்ல என்பது கண்டுகொண்டேன், சத்தாதிகள் சோத்திராதிகளை அறியாது என்பதும் கண்டேன். சோத்திராதிகள் சத்தாதிகளை அறியாது என்பதும் கண்டேன். சத்தாதிகள் ஐந்தும் ஒன்றை ஒன்று அறியாது என்பதும் கண்டேன். இனி வாக்காதிகளாகிய கன்ம இந்திரியங்களே நானென்று சொன்ன சீடனைப் பார்த்து ஆசாரியார் சொல்லுவது வாக்காதிகள் ஆனவை அஞ்சும் உன்னிடத்திலே அஞ்சு காரியங்கள் பண்ணுவிக்கும். அது ஏதென்னில், வாக்கு வசனிக்கும். பாதம் கமனிக்கும். பாணி, இடுதல் ஏற்றுதல் செய்யும். பாயு மல விசர்க்கத்தை விடும். உபத்தம் ஆனந்தத்தை விடும். உனக்களிக்கப்பட்ட சோத்திராதிகளைப் போலே பார்ப்பாயாக. இப்படி இருக்கிறோம் என்று தன்னைத் தானறிய மாட்டாது; வாக்காதிகள் ஒன்றை ஒன்று அறியமாட்டாது அசத்து. ஆதலால் வாக்காதிகள்

நீயல்ல. உன்னை வேறே காண்பாயாக என்று சொன்ன ஆசாரியாரைப் பார்த்து சீடன் சொல்லுவது, வாக்காதிகள் நானல்ல என்பதும் கண்டுகொண்டேன். இனி அந்தக் கரணங்களே நான் என்று சொன்ன சீடனைப் பார்த்து ஆசாரியார் சொல்லுவது, அந்தக் கரணங்களாவது மனம் என்றும், புத்தி என்றும், ஆங்காரம் என்றும், சித்தம் என்றும் நாலு விதங்களாக இருக்கும். இதில் மனமானது இந்திரியத்தின் வழியாக வரப்பட்ட புலாதிகளைப் பற்றுதல் செய்யும். இப்படிப் பற்றுதல் செய்கிறோம் என்றும் தன்னைத்தான் அறியமாட்டாது; ஐம்புலாதிகளையும் அறிய மாட்டாது அசத்து. ஆதலால், மனம் நீயல்ல. இனி, புத்தியோ என்னில், புத்தியானது மனம் பற்றிய காரியங்களைப் புத்தி நிச்சயிக்கும். இப்படி நிச்சயிக்கிறோம் என்று தன்னைத்தான் அறிய மாட்டாது; மனத்தையும் அறிய மாட்டாது அசத்து. ஆதலால் புத்தி நீயல்ல. இனி ஆங்காரமோ என்னில் ஆங்காரமானது புத்தி நிச்சயித்த காரியங்களை எழுப்புதல் செய்யும், இப்படி எழுப்புதல் செய்கிறோம் என்று தன்னையும் தானறியமாட்டாது; புத்தியையும் அறியமாட்டாது அசத்து. ஆதலால் ஆங்காரம் நீயல்ல. இனி சித்தமோ என்னில், சித்தமானது ஆங்காரம் எழுப்பின காரியங்களைச் சிந்திக்கும். இப்படிச் சிந்திக்கிறோம் என்றும் தன்னையும் தானறிய மாட்டாது அசத்து. ஆதலால் சித்தம் நீயல்ல. உன்னை வேறே காண்பாயாக. இங்ஙனம் நீயல்ல என்று கழிக்கப்பட்ட தத்துவம் இருபத்திநாலும் பிரகிருதிமாயை. ஆதலால் இது கழிந்த இடம் பிரகிருதி மாயையானது உன்னை விட்டு நீங்கிற்றென அறிவாயாக. இனி இந்தத் தத்துவங்களாலேயே வரப்பட்ட காரியப் பொருள்களை அனுபவிக்கப்பட்ட ஆன்மாவாகிய நீ ஒருத்தனுண்டு. உன்னை வேறே காண்பாயாக என்று ஆசாரியார் சொன்னவுடனே சீடன் சொல்லுவது, வாரீர் சாமியாரே அந்தக்கரணங்கள் நான்கும் நானல்ல என்பது கண்டு கொண்டேன், எப்படியென்னில் எனக்கு மனம் கலக்கமாயிருக்கிறது, மனந்தெளிவாயிருக்கிறது என்று சொல்லுகையால் சொன்ஞன் ஒருவன் வேருஞன். ஆகையால் மனஸாதிகளாகிய அந்தக் கரணம் நானல்ல என்பது கண்டு கொண்டேன். பிரகிருதி மாயை என்னை விட்டு நீங்கினதும் கண்டு கொண்டேன்,

இனி, நான் யாரோவென்னில் வித்தியா தத்துவங்களே நான் என்று சொன்ன சீடனைப்பார்த்து ஆசாரியார் சொல்லுவது, வாராய் மாணவகனே வித்தியாதத்துவத்தில் காலமாவது உன்னுடைய வினையை நீ பொசிக்கும் வேளைகளாகவும், பலன்களாகவும் வெகுபுதுமைகளாகவுமிருக்கும். இப்படி யிருக்கிறேம் என்று தன்னைத் தானறிய மாட்டாது; உன்னையும் அறியாது அசத்து. ஆதலால் காலம் நீ அல்ல. இனி நியதியோ என்னில் நியதியானது உன்னுடைய வினையை நீ பொசிக்கும்பொழுது பிரியாது. இராசாக்கினை போல நிறுத்தும்; இப்படி நிறுத்துகிறேம் என்றும் தன்னைத் தான் அறியமாட்டாது; காலத்தையும் அறியாது; உன்னையும் அறியாது அசத்து. ஆதலால் நியதி நீ அல்ல. இனிக்கலையோ என்னில் கலையாவது உன்னுடைய வினையை நீ பொசிக்கும்படிக்கு உன்னை மறைத்த ஆணவத்தைச் சிறிது நீக்கும். இப்படி நீக்குகிறேம் என்று தன்னைத் தான் அறியமாட்டாது; நியதியையும் அறியமாட்டாது; உன்னையும் அறியாது அசத்து. ஆதலால் கலை நீ அல்ல. இனி வித்தையோ என்னில், வித்தையானது உன்னுடைய வினையை நீ பொசிப்பிக்கும்படி அறிவை எழுப்பும். உனக்கு இப்படி எழுப்புகிறேமென்று தன்னைத் தானறிய மாட்டாது. கலையையும் அறியாது; உன்னையுமறியாது அசத்து. ஆதலால் வித்தை நீ அல்ல. இனி அராகமோ என்னில் அராகமானது உன்னுடைய வினையை நீ பொசிக்கும்பொழுது கூடின பொசிப்பைக் கீழ்ப்படுத்தி, கூடாத பொசிப்பிலே இச்சைகளை உண்டாக்கும். இப்படிச் செய்கிறேமென்று தன்னைத் தானறிய மாட்டாது; வித்தையையுமறியாது, உன்னையுமறியாது அசத்து; ஆதலால் அராகத் தத்துவம் நீயல்ல. இனிப்புருடனோ எனில் உன்னுடைய வினையை நீ பொசிக்கும்பொழுது உன்னை அழுத்துதல் செய்யும். இப்படிச் செய்கிறேமென்று தன்னைத் தானறிய மாட்டாது; அராகத்தையும் அறியாது; உன்னையும் அறியாது, அசத்து, ஆதலால் புருடத் தத்துவம் நீயல்ல. இனி மாயையோ என்னில் மாயையானது உன்னை மயக்கும். இப்படி மயக்குகிறேம் என்று தன்னைத் தானறியமாட்டாது; புருடனையும் அறியாது; உன்னையும் அறியாது அசத்து, அதலால் மாயையும் நீயல்ல. இங்ஙனம் சொல்லிக் கழிக்கப்பட்ட தத்துவங்கள் ஏழும்

அசுத்த மாயா தத்துவம் ஆதலால் இவை நீயல்ல என்று கழிக்கப்பட்ட விடயத்தில் அசுத்த மாயை உன்னை விட்டு நீங்கினதென அறிவாயாக. இவை ஏழு தத்துவமும் செய்கிற கோட்பாட்டை அறியும் பொருளாகிய ஆன்மாவாகிய உன்னை வேறே காண்பாயாக என்று ஆசாரியார் சொன்ன வுடனே சீடன் சொல்லுவது, வாரீர் சாமியாரே வித்தியா தத்துவங்கள் ஏழும் நானல்லஎன்பது கண்டுகொண்டேன். அசுத்தமாயை நீங்கலானதும் கண்டுகொண்டேன். இனி நான் ஆரோவென்னில் சுத்த தத்துவங்களே நான் என்று சொன்ன சீடனைப் பார்த்து ஆசாரியார் சொல்லுவது வாராய் மாணவகனே! சுத்த தத்துவங்கள் அஞ்சிலே சுத்த வித்தையாவது உனக்குக் கிரியைக் குறைத்து ஞானத்தை ஏற்றிவைக்கும். ஈசுரம் ஞானத்தைக் குறைத்துக் கிரியையை ஏற்றிவிக்கும். சாதாக்கியம் ஞானமும் கிரியையும் ஒத்திருக்கும். சத்தி தத்துவம் கிரியையை ஏற்றிவிக்கும். சிவதத்துவம் ஞானத்தை ஏற்றிவிக்கும். இங்ஙனம் சொல் லப்பட்ட தத்துவம் அஞ்சும் உனக்கு ஞானக்கிரியைகளை அறிவிக்கும். இப்படி அறிவிக்கிறோம் என்று தன்னைத் தானறியாது. அஞ்சும் ஒன்றையொன்று அறியாது, உன்னையும் அறியாது அசத்து. ஆதலால் சுத்த தத்து வங்கள் நீயல்ல என்று கண்ட இடமே சுத்தமாயையானது உன்னை விட்டு நீங்கினதென அறிவாயாக. இனி உன்னை ஞானத்துக்குப் பக்குவன் என்று எனது கண்ணுலே உன்னைப்பார்த்தபோதே சஞ்சிதவினை உன்னைவிட்டு நீங்கிற் றென்று அறிவாயாக. இங்ஙனம் தத்துவங்கள் 36ம் உனக் குப்புறம்பாக, நீ அகன்ற இடமே மூன்று மாயையும் சஞ்சித பிராரத்தமாகிய வினையும் நீங்கிற்றென அறிவாயாக. இனி உன்னை வேறே காண்பாயாக என்று ஆசாரியார் அனுக்கிரகம் பண்ணினது கேட்டு சீடன் சொல்லுவது வாரீர் சுவாமியாரே, இங்ஙனம் நான் நான் என்று எண்ணி யிருந்த தத்துவம் (36ம்) நானல்ல என்பது கண்டு கொண் டேன். மாயையும் சஞ்சிதப் பிராரத்தவினையும் நீங்கினதும் கண்டேன். சந்தேகமும் தீர்ந்தேன். இனி அப்பால் என்னை எனக்குத் தெரியவில்லை. தேவரீர் என்னை எனக்குத் தெரியக் காட்ட வேணும் என்ற சீடனைப் பார்த்து ஆசாரியார் சொல்லுவது, வாராய் மாணவகனே, இங்ஙனம் தத்துவம் 36ம் நானல்ல என்பது கண்டாயே. மூன்று மாயையும்

வினையும் நீங்கினதும் கண்டாயே, இனி ஆன்மாவாகிய உன்னை இன்ன பொருளென்று கருதிய இன்னுன் என்று எனக்குச் சொல்லப்பா என்று கேட்ட ஆசாரியாரைப் பார்த்துச் சீடன் சொல்லுவது, தத்துவம் 36ம் நானல்ல என்பது தெரியலானேன். தேவரீர் கடாட்சத்திலுலே மாயையும் வினையும் அகன்று நீங்கலானேன். மேல் என்னை எனக்குத் தெரியவில்லை, அந்தகாரமாய் மறைப்ப ஒன்றையும் காணேன் என்று சொன்னவுடனே ஆசாரியார் சொல்லுவது, வாராய் மாணவகனே நீ ஒரு பொருளாய் ஆன்மாஎன்று பெயர் பெற்றிருந்து உன்னை உனக்குத் தெரியவில்லையென்று சொல்லுகிருயே, இந்த நிலையை உன்னை மறைத்த ஆணவமலம் என்று அறிவாயாக. இப்படி அந்தகாரமாய் ஒன்றும் உனக்குத் தெரியாதபடிக்கு எந்தக் காலமும் இப்படி மறைத்திருக்கப்பட்ட மறைப்பே ஆணவ மல ரூபமென அறிவாயாக. இந்த ஆணவமானது இத்தனை நாளும் இப்படியே உன்னை மறைத்துக்கொண்டு விடாது பற்றி நின்றதென்று அறிவாயாக என்று ஆசாரியார் சொன்னவுடனே சீடன் சொல்லுவது, வாரீர் சுவாமியாரே இத்தனை நாளும் என்னை மறைத்திருந்த ஆணவமலத்தையும் கண்டு கொண்டேன். அதன் குணங்களையும் அறிந்தேன். இப்போது என்னை எனக்குத் தெரியவேண்டும் என்கிற ஒரு இச்சையானது என்னிடத்திலே தோன்றியிருக்கிறது என்று சொன்ன சீடனைப் பார்த்து ஆசாரியார், வாராய் மாணவகனே உன்னை நீயறிய வேணும் என்கின்ற இச்சை உன்னிடத்திலே தோன்றியதே சிவனுடைய திருவருட் சத்தி அஞ்சிலே ஒரு சத்தியாகிய இச்சா சத்தி உன்னிடத்திலே பொருந்தி இணங்கி விளங்கினது என்றறிவாயாக, என்று சொன்ன ஆசாரியாரைப் பார்த்துச் சீடன் சொல்லுவது, வாரீர் சுவாமியாரே என்னிடத்திலே இச்சா சத்தி விளங்கி நின்ற தரிசனமும் கண்டு கொண்டேன். இப்பொழுது நான் ஒரு பொருள் அல்லவா, இந்த மலத்திலே முழுகிக்கொண்டுகிடக்கிறேமே, இந்த மலமானது நம்மை மறைத்துக் கொண்டிருக்கிறதே, இனி இத்தை விட்டு நீங்க வேணுமென்கிற ஒரு அறிவானது என்னிடத்திலே உண்டாகி இருக்கிறது என்ற சீடனைப் பார்த்து ஆசாரியார் சொல்லுவது, வாராய் மாணவகனே உன்னை மூடி மறைத்திருக்கின்ற ஆணவமலத்தை விட்டு

நீங்க வேணும் என்கின்ற அறிவானது உன்னிடத்திலே உண்டாயிருப்பதே ஞானசத்தி உன்னிடத்திலே பொருந்தி விளங்கினதென்று அறிவாயாக என்று ஆசாரியார் சொன்ன வுடனே சீடன் சொல்லுவது, வாரீர் சுவாமியாரே என்னிடத்திலே விளங்கின ஞான சத்தியின் தரிசனமும் கண்டு கொண்டேன். இப்பொழுது நான் என்னை மறைத்திருந்த ஆணவமலத்தை ஞானசத்தியினுலே விட்டு நீங்கி நான் வேருக மலம் வேருக நீங்கினதும் கண்டேன், நானுக ஆன்ம சொரூபமும் கண்டேன். இப்பொழுதே அந்த மலமான ஆணவ மலத்தினது அந்தகாரமான வடிவமும் அதனுடைய அறியாமையையும் கண்டேன். இது இந்தப்படியே நான் தோன்றின நாளே உடந்தையாய்ப் பொருந்தி இந்நாள் வரைக்கும் நின்றதை இப்பொழுது ஆசாரியன் அனுக்கிரகத்தாலே நீங்கித் தன்னை அறிந்தோமே; இங்ஙனம் தத்துவாதிகளையும் இந்த ஆணவமலத்தையும் வினையையும் இது இது என்று பகுத்தறிந்த பொருளே ஆன்மாவாகிய நான் என்று ஒரு தெளிவானது என்னிடத்திலே விளங்குகிறது என்ற சீடனைப் பார்த்து ஆசாரியார் சொல்லுவது, வாராய் மாணவகனே இப்பொழுது உன்னிடத்திலே தெளிவு விளங்கிற்று என்றுயே இதுவே ஆன்ம தரிசனம். இந்த ஆன்ம தரிசனமான இடமே கிரியா சத்தியானது உன்னிடத்திலே பொருந்தி விளங்கினது என்றறிக என்று ஆசாரியார் அனுக்கிரகம் பண்ணினவுடனே சீடன் சொல்லுவது வாரீர் சுவாமியாரே, உம்முடைய அனுக்கிரகத்தாலே ஆன்ம தரிசனமும் கண்டேன். என்னிடத்திலே விளங்கி நின்ற கிரியா சத்தியினது தரிசனமும் கண்டு கொண்டேன். இப்போது எனக்கு ஒரு ஞானம் தோன்றலாயிற்று. அது ஏதென்னில் நான் இத்தனைகாலமும் மலத்திலே மூழுகிக்கொண்டு சனன மரண துக்கங்களை அடைந்து கிடக்கப்பட்ட எனக்குத் தேவரீர் கடாட்சத்தாலே மலாதிகள் நீங்கலானேன். இனி பரமசிவன் சொரூபத்தை அறியவேணும் என்று ஒரு ஞானம் தோன்றினதென்ற சீடனைப் பார்த்து, ஆசாரியார் சொல்லுவது, வாராய் மாணவகனே சிவனை அறியவேணும் என்ற அறிவாகிய ஞானம் உன்னிடத்திலே தோன்றலானதே ஆன்மசுத்தி என்று அறிவாயாக. இந்த அவதரமே உன்னிடத்திலே திரோதான சத்தி கருணையாகி விளங்கின

தென்று கண்டுகொள்வாயாக. இனி முன் சொல்லப்பட்ட இச்சா சத்தி, ஞானசத்தி, கிரியா சத்தியாகிய மூன்று சத்தியும் நீங்கினதென்று கண்டு கொள்வாயாக. இனி சிவதரிசனம் எப்படி என்னில், நீ அறிவித்தால் அறிகிறவன் ஆகையாலே உனக்கு இப்போது அறிவித்த அறிவே சிவரூபம் என்று கண்டுகொள்வாயாக என்று ஆசாரியார் சொன்னவுடனே, சீடன் சொல்லுவது, வாரீர் சுவாமியாரே தேவரீர் அனுக்கிரகத்தாலே ஆன்மசுத்தியும் ஆனேன். திரோதானம், கருணையானதும் கண்டேன். மூன்று சத்திகளும் நீங்கலானதும் கண்டுகொண்டேன். இங்ஙனம் எனக்கு இப்படி அறிவித்த அறிவே, சிவரூபம் என்பதும் கண்டுகொண்டேன். சகல சந்தேகமும் தீர்ந்தேன். இனி அடியேனுக்குச் சிவதரிசனம் உணர்த்தவேணும் என்ற சீடனைப் பார்த்து ஆசாரியார் சொல்லுவது, வாராய் மாணவகனே இந்தச் சிவமானது உன்னிடத்திலே எக்காலமும் உன்னைவிட்டு நீங்காது நின்றதை உன்னை மறைக்கப்பட்ட ஆணவ மலத்தினது கோட்பாட்டினாலே சிவரூபம் உனக்குத் தோணுமல் இத்தனை காலமும் மயங்கினாய். இப்போது மலபரிபாகமானபடியினாலே உனக்குத் தெரியலாயிற்று. இப்போது தெரியலானதே சிவரூபமானது, சகல ஆன்மாக்கள் தோறும் இப்படிக் கலந்து தோன்றாமல் விளங்கும் என்று சருவ பரிபூரணமாய்த் தோற்றம் முடிவில்லாமல் இருக்கும் என்றும் ஆன்மாக்களுக்குக் கன்ம ஒப்பு மலபரிபாகம் வரும்படிக்குப் பஞ்சகிருத்தியங்களைச் செய்துவிக்கும் ஒரு முதலாக நின்றதென்றும் சிவத்தினுடைய வியாபக சொரூபங்களை அறிகிறதே சிவதெரிசனம் என்றும் கண்டு கொள்வாயாக என்று ஆசாரியார் சொன்னவுடனே சீடன் சொல்லுவது வாரீர் சுவாமியாரே, தேவரீர் அனுக்கிரகத்தாலே சிவதரிசனமும் கண்டுகொண்டேன். கிருதார்த்தன் ஆனேன். இனி அடியேனுக்குச் சிவயோகம் சொல்ல வேணும் என்ற சீடனைப் பார்த்து ஆசாரியார் சொல்லுவது, வாராய் மாணவகனே உனக்குச் சிவயோகம் அறிய வேணும் என்னும் அது உன்னிடத்திலே தோன்றலானபடியினாலே உன்னிடத்திலே திருவருளாகிய பராசத்தி விளங்கினதென்று அறிவாயாக. இனிச் சிவயோகம் எப்படியென உன்னிடத்திலே விளங்கி நின்ற திருவருளே அதுவாக நின்றுகொண்டு இங்ஙனம் தோன்றப்பட்ட சிவ

தரிசனம். ஞானமாவது உன்னை விட்டு நீங்காமல் எந்நாளும் இப்படியே நின்றுகொண்டு நீ முன் சனனங்களிலே செய்த வினைகளையெல்லாம் அவன், அவள், அது முன்னிலையாக ஊட்டிவித்து நின்றதென்று அறிந்து நீ ஒரு முன்னிலைகளை நாடாது உனக்கு ஒரு சுதந்தரம் இல்லாமல் எல்லாம் சிவன் செயல் என்றும், உன் செய்தியெல்லாம் சிவன் செய்தி என்றும் நீ ஒன்றையும் கோசரியாமல் சிவபோதம் மேலிட உன்னுடைய போதம் கீழ்ப்பட நிற்பதுவே சிவயோகம் எனப்படும். இவ்விடமே.........இவ்விடமே பராசத்தி நீங்கி நின்றது என்று கண்டுகொள்வாயாக என்று ஆசாரியார் சொன்னவுடனே சீடன் சொல்லுவது, வாரீர் சுவாமியாரே தேவரீர் அநுக்கிரகத்தாலே சிவயோகம் அடையலானேன். கன்ம மலமாகிய ஆகாமிய வினை நட்டமானதும் திருவருட் சத்தி அஞ்சும் இவ்விடத்திலேவிட்டு நீங்கினதும் கண்டேன். இனி அடியேனுக்குச் சிவபோகமாகிய நேயத்து அழுந்து தலைச் சொல்லவேணும் என்ற சீடனைப்பார்த்து ஆசாரியார் சொல்லுவது வாராய் மாணவகனே, சிவபோகம் எப்படி என்னில் நீ சிவனைக்கூடினது என்றும், உன்னைச் சிவன் கூடினது என்றும் சொல்லப்பட்ட நினைப்பும் மறப்பும் இல்லாமல் நீ அறிந்தவனும் ஆகாமல் அறியாதவனும் ஆகாமல் நீரிலே முழுகினவன் எப்படி நீருக்குள்ளே அடங்கி நின்றானோ பொன்னானது குளிகையிலே எப்படி அடங்கி நின்றதோ நிறைய உண்டவன் எப்படி இறுமாந்து இருப்பனோ அப் படிப்போல சிவபோகத்திலே கலந்து வேறற நிற்பதுவே நேயத்து அழுந்தல் என்று அறிவாயாக, இது முத்தி முடிவாகிய சாயுச்சியம் என்பது கண்டுகொள்க. இதற்குப் பிர மாணம் சிவபோகசாரம்,

"இந்தனத்தி லங்கி எரியுறுநீர் தேனிரதம்
கந்தமலர்ப் போதுவான் காலொளிகண்-சந்ததமும்
அத்துவித மானதுபோல் ஆன்மாவும் ஈசனுமாய்
முத்தியிலே நிற்கும்முறை"

என்றும்,

மனையில் வருபோக மாதா மக்கள் பாச
வினையிலழுந்திவிடாதே-உனையிழந்து
காணாமல் கண்டதனைக் காட்சிபெறக் கலந்து
பூணாமல் எப்போதும் பூண்

என்றும் வருவனவற்ருல் காண்க. இப்படியாகிய உணர்த்தும் முறைமையாகிய ஞானமானது கைகூடா விட்டால் வேருென்ருலும் ஆன்மாக்களுக்குச் சனன மரணம் அறுதலும் சிவனைக் கூடுதலும் கிடையாது என்று அறிக. இதற்குப் பிரமாணம் திருவுந்தியார் :—

அவிழாதிருக்கும் அறிவுடன் நின்றவர்க்கு
அவிழும் இவ்வல்லலென்றுந்தீ பற
அன்றி அவிழாதென்றுந்தீ பற"

என்றும் வருவனவற்ருல் காண்க என்று ஆசாரியார் சொன்னவுடனே சீடனுனவன் பேசும் உரை இல்லாமல் சிவானந்தாதிபோகம் மேலிடக் கிருதார்த்தன் ஆனுன்.

ஞானம் உணர்த்தும் முறைமை முற்றும்

# பஞ்சபூதத்தில் தசகாரியத்தின் வகை

*பஞ்சபூதத்திலே தானே தசகாரியத்தின் வகை விரித்த உரை. சிவரூபமுதல் சிவபோகம் மட்டும் தசகாரியம்.*

**பூததரிசனம்**

**பூதங்களாவன:**—*பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் ஆக 5. இதில்* **பிருதுவியாவது** : *காரண தத்துவம் என்றும், காரியதத்துவம் என்றும் 2. இதில் காரணம் 1. கந்தத்தை உடைத்தாய் அழிந்துபோம். காரியம் 3. அஃதாவது புறம்பில் பிருதுவி நூறுகோடி யோசனை விஸ்தீரணமாய்க் கிடப்பது 1. உடம்பில் பிருதுவி, மயிர், எலும்பு, தோல், நரம்பு, தசை ஆக அஞ்சாக நிற்பது 1. சீவனத்தில் பிருதுவி ஆக்கிராணம் கந்தத்தைக் கிரகிக்கைக்குஇடமாய் நிற்பது 1. ஆக 3. இவையிற்றில் கடின தாரகங்கள் இருக்கும்படி புறம்பில் பிருதுவி நூற்று நாற்பது நாகத்தையும் ஏழு பாதாளத்தையும் பூமியில் இவ்வருஷத்தையும் மகாமேரு முதலாகிய பருவதங்களையும் சக்கிரவாளத்தையும் பூலோகம் முதலாகிய சத்தலோகங்களையும் இதற்கு வித்தியாகிய நூற்றெட்டுப் புவனங்களையும் தரித்துக்கொண்டு நிற்பது தாரகம். இவையிற்றில் சிக்கனவு கடினம். இனி உடம்பில் பிருதுவி என்பு முதலான வன்மை சிக்கனவு கடினம். பாதாதிகேசம் முதல் என்பு முதலானவற்றைத் தரித்துக் கொண்டு நிற்பது தாரகம்.*

*சீவனத்தில் பிருதுவி ஆக்கிராணம் கந்தத்தை வாங்குமது சிக்கனவு. கந்தம் கிராணத்தில் ஆறுமது தாரகம். அறிவில் காரணமாகிய பிருதுவி தரிசிக்கும்படி முன் சொன்ன காரிய வித்தியான மூன்று வகையும் அறிவினுல் தரித்துக்கிடப்பது தாரகம். அவையிற்றைத் தனதாக அபிமானம் பண்ணுமது சிக்கனவு. ஆகப் பிருதுவியின் குணம் 8.*

**அப்புவாவது** : *—காரணதத்துவம் என்றும், காரிய தத்துவம் என்றும் இரண்டு வகைப்படும். இதில் காரணம் ஒன்று இரசத்தை உடைத்தாய் அழிந்துபோம். காரிய தத்துவம் மூன்று. அவையாவன புறம்பில் அப்பு ஆயிரங்*

கோடி யோசனை விஸ்தீரணமாய் இருப்பது 1. உடம்பில் அப்பு ஓடு, நீர், உதிரம், சுக்கிலம், மூளை, மச்சை ஆக 5 ஆக நிற்பது. சீவனத்தில் அப்பு சிங்நுவை இரசத்தைக் கிரகிக்கைக்கு இடமாய் இருப்பது 1. இவையிற்றில் குளிர்ச்சி, நெகிழ்ச்சி இருக்கும்படி புறம்பில் அப்பு உட்டணத்தைக் கூடி ஆறித் தன்னிலையில் குளிர்ந்து நிற்பது குளிர்ச்சி. தன்னுடன் சேர்ந்தவைகளை இளகப் பண்ணுமது நெகிழ்ச்சி. உடலில் அப்பு ஓடு, நீர் முதலான ஐந்தும் சுரத்தில் வாதைப் படுகையால் வாதைப்பட்டு ஆறித்தன்னிலையில் குளிர்ந்து நிற்பது குளிர்ச்சி; இவைகள் இளகி இருப்பது நெகிழ்ச்சி. சீவனத்தில் அப்பு சிங்நுவை இரசத்தைக் கிரகிக்கும் அவசரத்தில் வறண்ட நாவில் அன்றியே மற்றை நாவுக்கிதமாய் இருப்பது குளிர்ச்சி. நாவில் நீர் ஊறுமது நெகிழ்ச்சி. அறிவில் காரணமாகிய அப்பு இருக்கும்படி தாரகமும் கடினமுமான பதார்த்தங்களில் இதம் குளிர்ச்சி, அவைகளாக அறிவைக் கரையப் பண்ணுமது நெகிழ்ச்சி. ஆக அப்புவின் குணம் 8.

**தேயுவாவது:**—காரண தத்துவம் என்றும் காரிய தத்துவம் என்றும் இரண்டு வகைப்படும். இதில் காரணம் 1. உருபத்தை உடைத்தாய் அழிந்துபோம். காரியதத்துவம் 3. இதில் புறம்பில்தேயு பதினாயிரங்கோடியோசனை விஸ்தீரணமாய் இருப்பது 1. உடலில் தேயு, பசி ஆகியது; பயமாகிய தண்ணீர்த்தாகம், சோம்பு, உறக்கம், மைதுனம் ஆக ஐந்தாக நிற்பது 1. சீவனத்தில் தேயு சட்சு ரூபத்தைக் கிரகிக்கைக்கு இடமாய் இருப்பது 1. இவையிற்றில் சுடுதலும் ஒன்றுவித்தலும் இருக்கும்படி புறம்பில் தேயு ஒளியாய்த் தெரிவித்துக்கொண்டு நிற்பது. சுடுதல் தகனப்படுத்திச் செல்வது. ஒன்றுவித்தல் உடலில் தேயு பசிமுதலான ஐந்தும் தோற்றல் சுடுதல் இவை ஐந்தும் திருத்தி வருதல் ஒன்றுவித்தல். சீவனத்தில் தேயு சட்சுவுக்கு ரூபங்களைக் காட்டுதல் சுடுதல். ரூபத்துடன் சட்சுவைக் கலப்பித்தல் ஒன்றுவித்தல். இனி அறிவில் காரணமாகிய தேயு இருக்கும்படி அறிவிலே தாரகம் கடினமாய் இதப்பட்டுக் கவிழ்ந்திருப்பதாய்ப் பதார்த்தங்களை அறிவிலே விளக்கம் செய்திருப்பது சுடுதல். அவையிற்றை ஒன்றுபடச் செய்வது ஒன்றுவித்தல். ஆகத் தேயுவின் குணம் 8.

**வாயுவாவது** :—காரண தத்துவம் என்றும் காரியதத்துவம் என்றும் இரண்டு வகைப்படும். இதில் காரணம் 1. பரிசத்தை உடைத்தாய் அழிந்துபோம். காரியதத்துவம் 3. இதில் புறம்பில் வாயு நூறுயிரங்கோடி யோசனை விஸ்தீரணமாய் இருப்பது 1. உடலில் வாயு நிற்றல், நடத்தல், தத்தல், சுழல்தல், சலிப்பு ஆக 5 இப்படி அஞ்சாக நிற்பது 1. சீவனத்தில் வாயு தொக்குப் பரிசத்தை அறிய இடமாய் இருப்பது 1. ஆக 3. இவையிற்றில் சலிப்பும் திரட்டுதலும் இருக்கும்படி புறம்பில் வாயு காலங்களைப்பற்றி வாடையாயும், கொண்டலாயும், தென்றலாயும், கோடையாயும் திக்குகள் இடமாகச் சலிப்பது, சலித்தல். மகாமேருவில் கொடுமுடியாகிய சிகரத்தை இலங்கையில் திரிகூட பருவதமாகப் போடுதல் முதலாக உள்ளன திரட்டுதல். உடலில் வாயு நிற்றல் முதலான ஐந்தும் செய்தல், சலித்தல். பாதாதிகேசம் அளவாக உறுப்புக்களை ஒன்றுடன் ஒன்று கூட்டா நிற்றல் திரட்டல். சீவனத்தில் வாயு தொக்கை வந்து பரிசித்தல் சலித்தல். பாரித்தலுறுதல் திரட்டுதல். இனி அறிவில் காரணமான வாயு இருக்கும்படி தாரககடினமாய் இதமாய்க் கவிழ்ந்து வெளிசெய்து ஒன்றுபட்டு நின்ற பதார்த்தங்களிலே அறிவைப் பரம்புவிப்பது, சலிப்பு. அந்தப்பதார்த்தங்களைத் தனதாக அறிவிலே சேர்ப்பது திரட்டுதல். ஆக வாயுவின் குணம் 8.

**ஆகாசமாவது** :— காரணதத்துவம் என்றும் காரிய தத்துவம் என்றும் இரண்டு வகைப்படும். இதில் காரண தத்துவம் 1. சத்தத்தை உடைத்தாய் அழிந்து போம். காரிய தத்துவம் 3. அவையாவன. புறம்பில் ஆகாசம் பத்து நூறுயிரங்கோடி யோசனை விஸ்தீரணமாய் இருப்பது 1. உடலில் ஆகாசம் காமம், மோகம், கோபம், பயம், லோபம் ஆக 5 ஆக நிற்பது 1. சீவனத்தில் ஆகாசம் சோத்திரம் சத்தத்தைக் கிரகிக்கும் இடமாக நிற்பது 1. ஆக 3. இவையிற்றில் இடங்கொடுத்தலும் தோய்வறுதியும் இருக்கும்படி புறம்பில் ஆகாசம் பிருதுவி முதலாக நாலு பூதத்துக்கும் இடமாய் இருப்பது இடங்கொடுத்தல். நாலுபூதமும் நீங்கின இடத்திலும் தான் நீங்காதுநிற்றல் தோய்வறுதி. உடலில் ஆகாசம் காமாதிகுணம் ஐந்தும் தற்போதத்தை உண்டாக்கிச் செல்லுதல் இடம் கொடுத்தல். இவைகள் முன்சொன்ன பூதங்கள் போல

வடிவைப்பற்றி உண்டாக்காமல் வடிவற நிற்பது தோய் வறுதி. இனிச் சீவனத்தில் ஆகாசம் சத்தம் தோன்று கைக்கு இடமாய் இருப்பது இடங்கொடுத்தல். அந்தச் சத் தம் ஆகாசத்தில் காணுதது தோய்வறுதி. இனி அறிவில் காரணமான ஆகாசம் இருக்கும்படி தாரக கடினமாய் இதப்பட்டுக் கவிழ்ந்து வெளிசெய்து ஒன்றுபட்டு அவற்றில் பரம்புவித்துச் சேர்த்துக்கொண்டு நிற்கும். முன் சொன்ன விரிவான பதார்த்தம் அடங்கலுக்கும் அறிவிலே இடமாக்கிச் செல்லுமது இடங்கொடுத்தல். அகண்ட பரி பூரணமுகிய சிவனுடைய பூரணத்துக்குள்ளே பசுமுதலும் பாச முதலும் ஒத்து நிற்பினும் பொருளிலே தோயாமல் நிறுத்தும் பரமாகாசம் போல இந்தப் பதார்த்தங்களைச் சைதன்னியனிடத்தில் தோயாமல் நிறுத்துவது தோய் வறுதி. ஆக ஆகாசத்தின் குணம் 8. ஆகப் பஞ்சபூதக்குணங் கள் 40. ஆகப் பஞ்ச பூதங்களாகிய குணி இப்படி தரி சிப்பான்.

பிருதுவிக்கு விஷயம் கந்தம். கந்தாதி ஐந்தும் குணம். இந்திரியம் கிராணமும் உபத்தமும் அவத்தைச் சாக்கிரம். வீசாக்கிரம் லகாரம். நாடி இடை, பிங்கலை இரண்டும். வாயுபிராணன், அபானன் இரண்டும். மண்டிலம் ஆதித்த மண்டிலம். நிறம் பொன்மை. அடை யாளக் குறி வச்சிரம். வடிவு சதுரச்சிரம். விஸ்தீரணம் நூறுகோடி யோசனை. காரணேசுரன் பிரமா. அப்புவுக்கு விஷயம் இரசம். இரசம் முதலாக நாலும் குணம். இந்திரி யம் சிங்நுவையும் பாயுவும். அவத்தை சொற்பனம். வீசம் வகாரம். நாடி காந்தாரி சுழுமுனை இவை இரண்டும். வாயு சமானன், உதானன். மண்டிலம் சந்திர மண்டிலம். நிறம் வெள்ளை. அடையாளம். கோகனகம். வடிவு பிறை. விஸ் தீரணம் முன் சொன்ன ஆயிரங்கோடி யோசனை. காரணே சுரன் விட்டுணு. தேயுவுக்கு விஷயம் ரூபம். ரூபம் முதல் மூன்றும் குணம். இந்திரியம் சட்சுவும் பாணியும். அவத்தை சுழுத்தி. வீசம் ரகாரம். நாடி அத்தியும் சிங்நுவையும். வாயு வியானனும் நாகனும். இவைஇரண்டும். மண்டிலம் அக்கினி மண்டிலம். நிறம் சிவப்பு. அடையாளம் சுவத்திகம். வடிவு திரிகோணம். விஸ்தீரணம் பதினுயிரங்கோடி யோசனை காரணேசுரன் ருத்திரன். வாயுவுக்கு விஷயம் பரிசம். பரிசம் சத்தம் இரண்டும் குணம். இந்திரியம் துவக்குவும் பாதமும். அவத்தை துரியம். வீசம் யகாரம். நாடி அலம் புருடன்

ஆக 2. வாயுவாவது கிருகரன், கூருமன். மண்டிலம் சத்தி மண்டிலம். நிறம் கறுப்பு. அடையாளம் அறுபுள்ளி. வடிவு அறுகோணம். விஸ்தீரணம் நூறுயிரங்கோடி யோசனே. காரணேசுரன் ஈசுரன், ஆகாசத்துக்கு விஷயம் சத்தம். சத்தம் ஒன்றுமே குணம். இந்திரியம் சோத்திரம் வாக்கு ஆக 2. அவத்தை அதீதம். வீசம் ஹகாரம். நாடி குருவும் சங்கினியும் ஆக 2. வாயு தேவதத்தன், தனஞ்செயன். மண் டிலம் சிவமண்டிலம். நிறம் தூம்பிர வன்னம். அடையாளம் அமுதவிந்து. வடிவு வட்டம். விஸ்தீரணம் பத்துநூறுயிரங் கோடியோசனே. காரணேசுரன் சதாசிவம். இப்படி மகா பூதங்களே அறிவான்.

இனிக் காரியமாவது பத்துக்காரியமாகச் சொல்லப் படும். அவையாவன தத்துவ ரூபம், தத்துவதரிசனம், தத்துவசுத்தி, ஆன்ம ரூபம், ஆன்மதரிசனம், ஆன்மசுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம் ஆகப்பத்து. இதில் தத்துவரூபம், தத்துவதரிசனம், தத்துவசுத்தி முன் சொல்லப்பட்டது. இவையிற்றில் தத்து வம் முப்பத்தாறும் உண்டாயிருக்கும். ஞானேந்திரியம், கன்மேந்திரியம் பத்துக்குமே ரூபம், தரிசனம், சுத்தி சொன்னது என்ன? இந்தப் பத்துக்கருவிக்கும் அதிட்டான மானது பூதங்கள் ஆகையாலும், ஞானேந்திரியங்களுக்குச் சத்தாதி விஷயங்கள் ஆகையாலும், ஞானேந்திரியங்கள் இட மாக அந்தக்கரணங்கள் அறிகையாலும், அறிகிற அந்தக் கரணங்களுக்கு இச்சா ஞானக்கிரியைக் கலாதிகள் எழுப்பு கையாலும், கலாதிகளேச் சிவதத்துவங்கள் பிரேரிக்கை யாலும், ஞானேந்திரியம் கன்மேந்திரியம் பத்துக்குள்ளே நீக்கி நின்ற இருபத்தாறும் தொழில்பட்டு ஒடுங்கி அடங்கு வதாய் இருக்கும். ஆதலால் இந்தப் பத்து இந்திரியத் துக்குமே ரூப தரிசன சுத்தி சொல்லப்பட்டது. ரூபமாவது புகையைக் கண்டு நெருப்பு உண்டு என்றால் போல விஷய அனுபவத்தைக் கண்டு இதில் ஒரு இந்திரியம் உண்டென்று காட்டுவது. அது சத்த பரிச ரூப ரச கந்தங்களேயும், வசன, கெமன, தான விசர்க்க ஆனந்தங்களேயும் எனக்குக் கேட்ட தில்லே என்றும், கிள்ளினுலும் உறைக்குதில்லே என்றும், கண்ணுக்குத் தெரிவதில்லே என்றும், மூக்கினுல் மணமேற இல்லே என்றும், நாவுக்கு ரசமில்லே என்றும், மனசுக்குத்

தெரியத் தோன்றுவதில்லை என்றும் சொல்லுதலாலும் எனக்கு வசனிக்க ஒண்ணுதென்றும், நடக்க ஒண்ணு தென்றும், கை உதவாதென்றும், மலம் விடுக்குதில்லை என்றும், விகாரம் அற்றிருக்கும் என்றும் இவன் சொல்லு தலால் இந்த இந்திரியங்கள் இவன் அல்ல. இந்தத்தானங்கள் இருக்க இவைகள் சேட்டியாது இருத்தலால், இந்தத் தானங்களுக்கு அல்ல ஆதலால், ஆன்மாவும் அல்லாமல் தானங்களும் அல்லாமல் விஷயத்தைக் கிரகிக்க இந்திரியங் கள் வேறேஉண்டென்பதுவே தத்துவரூபம். இனித் தத்துவ தரிசனம் இருக்கும்படி சத்தபோதமும், பரிசபோதமும், ரூப போதமும், இரசபோதமும், கந்தபோதமுமாய், வசனபோத மும், கெமன போதமும், தானபோதமும், விசர்க்க போத மும், ஆனந்த போதமுமாய் ஆகாசாதி பூதங்கள் அதிட் டானங்கள் இடமாக அனுபவித்து இருப்பதே இந்திரி யங்கள். இவைகள் விளங்க அறிகிற ஞானேந்திரியங்களும் கன்மேந்திரியங்களும் சகலத்தில் அனுபவித்த விஷயங்களில் அழுத்தம். சொற்பனத்தில் புலப்பட்டு நிற்றலால் தானமு மல்லாமல் அறிவில் பிடிபாடு. இந்திரியமென்னவும், துரியத் தில் அந்த இந்திரியங்கள் தோற்றுமலால் ஆன்மாவுக்கு இந்திரியங்கள் பேதப்பட நின்றதை விளங்கக் காண்பது பேததத்துவ தரிசனம். தத்துவசுத்தி இருக்கும்படி சத்தாதி வசனாதி விஷயங்கள் விரும்பவும் வெறுக்கவும் வந்துற்ற இடத்து ஆன்மாதன்னை அனாதியாகச் சார்ந்து வருகிற பழக்கத்திலே இந்திரியப் பொசிப்புக்களைத் தன் பொசிப் பாக மயங்கி இதம் அகிதம் உற்றதன்றி நம்முடைய புசிப்பு இவை அன்றென்று நீங்குமது சுத்தி. இந்திரியங்களைப் பிரித்து நிற்பது தத்துவசுத்தி. இப்படித் தத்துவசுத்திவர இவைகளைச் சார்ந்து நின்ற வாயுக்களும் இவையிற்றைச் சேட்டித்து நின்ற தெய்வதைகளும் பிரியும். அவைகள் நின்ற படி சொல்லில் சோத்திரத்துக்கு நாகனும் தொக்குவுக்கு வியானனும், சட்சுவுக்குக் கூர்மனும், சிங்நுவைக்குப் பிராணனும், கிராணத்துக்குக் கிருகரனும், வாக்குவுக்கு உதானனும், பாதத்துக்குத் தெய்வதத்தனும் பாணிக்குச் சமானனும், பாயுருவுக்கு அபானனும், உபத்தத்துக்குத் தனஞ்செயனுமாய் இப்படி வாயுக்களும் நின்றியங்கும். இந்த இந்திரியங்களைச் சேட்டிக்கும் தெய்வதைகள் சோத்தி ரத்துக்குச் சிவன். தொக்குவுக்கு வாயு பகவான். சட்சுவுக்கு

அக்கினி பகவான். சிங்நுவுக்கு வருணபகவான். ஆக்கிராணத் துக்குப் பூமாதேவி. வாக்குவுக்கு சரசோதி, பாதத்துக்கு விட்டுணு. பாணிக்கு இந்திரன்; பாயுருக்கு மித்திரன். உபத் தத்துக்குப் பிரமாவாகவும் மேற்சொல்லும் அந்தக்கரணங் களுக்கு மனதுக்குச் சந்திரன். புத்திக்குக் கேத்திரபாலன். ஆங்காரத்துக்கு ருத்திரன். சித்தத்துக்கு ஈசுரனுகவும் இந் திரியங்களுக்கு அதிட்டானங்களான பஞ்ச பூதியங்களுக்கும் அதிதெய்வதையான பிரமா, விட்டுணு, ருத்திரன், மகேசுரன், சதாசிவன் இவர்கள் செய்யும் பஞ்ச கிருத்தியங் களும் தத்துவம் பத்தும் பிரிய இவர்களும் பிரிவார்கள். இப்படித்தத்துவசுத்தி பண்ணுவான். இந்தத் தத்துவங் களுக்கு உபகரணமான அந்தக்கரணங்களையும் கலாதி களையும் சிவதத்துவங்களையும் விசாரித்துச் சொல்லில் மனம் பற்றும். இதுபற்றி நின்று சீவிக்கும்பொழுது இரண்டு பேதமாகப் பிரியும். அவை இந்திரியங்களிலே ஒன்றும் அறிவிலே ஒன்றுமாய் இருக்கும். இந்திரியங்களிலே நிற்பது விடையங்களிலே சலிக்கும். அறிவிலே நிற்பது சலியாமல் இருக்கும், ஆங்காரம் மூன்று வகையாம். பூதங்களுக்கும் வாக்காதிகளுக்கும் ஞானேந்திரியங்களுக்கும் மூன்று உபா தானமாய் இருக்கும். ஆதலால் ஆங்காரம தன்னைப் பண்ணிக்கொண்டு எழுந்திருக்கும். புத்தி, தன்மம், ஞானம், வயிராக்கியம், ஐசுவரியம், அதன்மம், அஞ்ஞானம், அவ்வயி ராக்கியம், அனைசுவரியம், ஆக எட்டு வகையிலும் அறு நூறு பாவகமாகி நிச்சயித்து நிற்பது புத்தி. சித்தம் சைதன்னியத்தானமாய் ஐயுறவாக நின்று அழுந்திப் பல பேதமாகாமல் ஒன்றுபட்டு நிற்கும். ஆக ஆன்மதத்துவம் 24. மேல் வித்தியா தத்துவங்களாவன காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை ஆக 7. காலமாவது மூன்று வகையாயிருக்கும். செல்காலம், நிகழ்காலம், எதிர் காலம் என்று வரும். இவை சூக்குமமாயும், தூலமாயும் இருக்கும், நூறு தாமரை இதழை அடுக்கிச்சிற்றூசி செறித் தால் இதற்குள்ளே மூன்று காலமும் வழங்கும். அது எங்ஙனையோ என்னில் இவனுக்குக் கன்மங்கட்டுண்ட எல்லை யிலே கொண்டுபோய் வைக்குமது செல்காலம் என்றது. ஒரு விஷயம் அனுபவித்து அற்றவாறே அன்னிய விஷயம் தோன்றினபொழுது அதிலே சீவன் போதமாக அனு பவித்து அற்றகாலம் செல்காலம். நிகழ்காலம் ஆவது

அனுபவிக்கும் காலம். அந்தவிஷயத்தை இச்சித்து அதிசயப் பட்டு மேலும் இது வேணும் என்ன இச்சித்த நினைவிலே இருக்குமேல் வருவது, எதிர்காலம். இது சூக்குமம் க்ஷணம், நிமிஷம், துடி, மாத்திரை, நாழிகை, நாள், வாரம், பக்ஷம், மாதம், இருது, ஆண்டு, கற்பம், யுகம் என்ன இப்படி பூத பவுஷத வர்த்தமானமாக வருவது தூலம்.

**நியதி ஆவது** :—இவன் கன்மம் பொசிக்கும் இடத்து இராசாக்கினைபோல நிச்சயம் பண்ணி நிறுத்துமது என்றது பிராரத்த கன்மத்தைப்பொசிக்கும் இடத்து விஷயங்களிலே அமைத்த, அமைத்த மட்டுக்களிலே சத்தாதி விஷயங் களிலே நிறுத்துமது. பாட்டுக்கேட்டு மேலும் அவன் பாட்டு மட்டு அமையும் என்றும், கூத்து முதலானவை இம்மட்டு அமையும் என்றும், இரசம் முதலானவைதே கிட்டியது இம்மட்டு அமையும் என்றும், சுகந்தன்னைக் கிரகித்து இம்மட்டு அமையும் என்றும், கன்மம் அமைத்த மட்டிலே விஷயங்களை நிறுத்தி வருவது சூக்குமம். சத்தாதி விஷய வித்தி மிகுதியால் உண்டாயிருக்கப் பாலவெச்சு முதலாக ஆகாதென்றும் ஸ்திரீமுகம் பார்க்க ஒண்ணாது என்றும் இப்படி நிறுத்துவது தூலம். இது நியதி.

**கலையாவது** :—ஆணவ மலத்தாலே மறைப்புண்டு கிட வாமல் மலத்தைச் சிறிது நீக்கி இவனுக்குக் கிரியா சத்தியை உண்டாக்குமது. ஆணவம் அந்தகாரமாகக் கேவலப்பட்டுக் கிடக்கிற ஆன்மாவுக்கு விஷயபோதத்திலே தொழிற்படுத்து மது கலை.

**வித்தையாவது** :—அந்தக் கிரியை எழுந்திருந்த இடத் திலே இவன் சருவத்தையும் அறிந்து பொசிக்கைக்கு ஆன் மாவின் இடத்து ஞானத்தை எழுப்புமது என்பது தோன் றின விஷயத்தை விபரித்து அறிய ஆன்மாவினுடைய ஞானத்தை எழுப்புமது. இயாதானும் ஓரிடத்து ஞானம் முந்தியே கிரியை சீவிக்கவேண்டி இருக்கக் கலை முன்னாகவும் வித்தை பின்னாகவும் வேண்டியதென்னை? ஆன்ம போதத் தில் கிரியை ஞானம் ஒழிந்து தனித்துக்கிரியை சீவியாது. ஆதலால் முற்பிற்பாடின்ஞ் ஞானமே அரும்பிக் கிரியையாய் ஞானம் சீவனமானதெனக்கொள்க.

**அராகமாவது:**—இவன் கன்மம் பொசிக்கும் இடத்துப் பெற்றத்தைச் சிறிதாக்கிப் பெருததன் மேலே இச்சையை விரிக்கப்பட்டது என்பது விஷய போதமாய்க் கிடந்த இச்சையிலே விஷய நாட்டம் ஆகிய ஞானமும் கிரியையும் ஒத்து முன்னிலையாகிய இச்சையாய் விடுமது அராகம். ஆக இவை மூன்றும் ஆன்மாவினுடைய இச்சா ஞானக் கிரியையை எழுப்புமது.

**புருடன் ஆவது:**— ஆன்மா அவிகாரியாய் இருப்பன் ஆதலால் இவனுக்கு விகாரத்தை உண்டாக்கி ஓர் இந்திரியத்திலே நின்றால் போலப் பஞ்சேந்திரியங்களிலும் கொள்ளி வட்டம் போலக் கொண்டு திரியுமது என்பது. ஆன்மாவுக்கு எப்பொழுதும் அதீதநிலை ஆதலால் அவிகாரியாய் இருப்பன். கலாதி ஆகிய பஞ்ச கஞ்சுகமும் கூடின சமுதாயத்திலே அறிவனாய் இருப்பன். செடத்துவம் ஆன மதுபான விஷயத்திலே பிறஞ்ஞானம் எழுந்திருந்தால்போலச் செடமாகிய இந்திரியக் கூட்டாவிலே ஆன்மா விகாரமாக எழுந்திருந்த போதம் புருடன் ஆதலால் ஆன்மாவைப் புருடன் என்னலும் ஆம். இந்திரியங்களுடன் ஆன்மா கூடாதபோது இந்த விகாரம் அறிவில்லை. ஆதலால் குணமல்லாமல் இவை தெரியாது ஆதலால் இந்தப் போதத்தைச் செடமாகிய புருடத்துவம் என்று நீக்கப்படும், இது விஷயங்களில் ஆன்மாவைக் கொள்ளி வட்டம் போலக் கொண்டு திரியுமது என்பது விஷய ஏதுவாகக் கருவிகூட்டா ஆதலால் தேகாத்தேகாந்தம் போலப் பக்குவமான விஷயங்களிலே அறிவை விகாரப்படுத்தல். இது புருடதத்துவம்.

**மாயையாவது:**—இயாதொரு விஷயத்தைப் பொசிக்கும் இடத்தில் அந்த விஷயம் என்ன இவன் என்ன இரண்டற மயக்கி இது ஒழிந்து இல்லை என்று மோகத்தைச் செய்யுமது என்பது விஷய அனுபோகத்தில் அந்த விஷயமும் தானும் பிரிந்து தோன்றமல் மதுபான மயக்கம்போல இவனைத் தனக்குள்ளே மறைப்பது. இது ஒழிந்து இல்லை என்று அதிசயம் பண்ணுவித்து முன் எழுந்து ஆன்மாவினுடைய இச்சையில் சலிப்பு மோகத்தைச் செய்தலாவது ஒருவனுக்கு வாயுத்தம்பனை வரமூர்ச்சை வந்தால்போல ஆன்ம ஞானத்துக்கு அனுபோகம் ஆகிய சிவ இழப்பிலே விஷயங்

களில் இதம், அகிதங்களிலே மோகிப்பது மாயை. இப்படி வித்தியா தத்துவங்களைத் தரிசிப்பான்.

**இனிச் சிவதத்துவம் ஆவது:**—குடிலையிலே உண்டாவதாய் ஆன்ம காரியமாய் எழுந்திருக்கப்பட்டது. சிவனுடைய விகாரம் சத்தியாவது எழுந்திருந்த விகாரத்தைக் காருண்ணியத்தினாலே பொதிந்துகொண்டு வடிவாக்குமது. சாதாக்கியம் ஆவது அந்த வடிவு ஆகிற அவதரத்திலே அஞ்சு. திருமுகமும் பத்து சிகத்தமுமாகக் (ஸ்ரீஹஸ்தம்) கண்டிக்கப்பட்டது. மகேசுரமாவது ரூபமாகக் கண்டித்த இடத்திலே ஆன்மகாரியமாக இருபத்தைந்து விக்கிரகமாக விகாரப்படுவது.

**சுத்தவித்தையாவது:**—ஞானமே வடிவாய் ஆன்மாக்கள் செய்யப்பட்ட கன்மங்கள் அடங்கலையும் திருவுளத்தடைத்து அறிந்துகொண்டு இருப்பதாக விகாரப்படுத்துமது என்பது குடிலை ஆகிய மகா மாயையிலே ஆன்மாக்களுடைய கன்ம பக்குவத்தை நாடி நிட்களம் ஆகிய பரம சிவனுடைய விகார அவிகாரம் இல்லாத நாட்டத்திலே சங்கற்ப மாத்திரத்திலே சந்திராதித்தர் கூடிய பருவத்திலே சமுத்திர விகாரம் போலே கண்ணாடி நிழல்போலச் சிவ விகாரத்துக்கு இடமாக வையிந்தவத்திற் கலக்கத்திலே தோன்றுமது சிவ தத்துவம். சுத்த வித்தைக்கு நெகிழ்ச்சி போலச் சிவ விகாரத்துக்குக் கிரியை விளையுமதாய்ச் சிவனுக்கு வலியாய் மேல் எடுக்கும் வடிவுகளுக்கு எல்லாம் உற்பத்தித் தானமாய் இருப்பது. முன் எழுந்த ஞானம் ஆகிய நாதமும், அந்த ஞானத்தை உட்பொதிந்த கிரியை ஆகிய விந்துவும் தம்மில் ஒத்த அவதரத்திலே ஆன்ம காரியமாக அஞ்சு திருமுகமும், பத்துச் சிகத்தமும், சிகத்தம் தோறும் வலத்தில் சத்தியும், சூலமும், வேலும், கட்டுவாங்கமும், இடத்திலே தமருகமும், தாது மாதுளம்பழமும், பாம்பும், செபமாலையும், நீலோற்பலமும் இவை உடைய ராகத் தியானத்திலே தோன்றுகிற வடிவும், திருசியம் ஆகாத வடிவறுதியுமாக ரூபா ரூபமிச்சிரமான திருமேனிக் கொண்டு ஆன்ம காரியமாக அனுக்கிரகம் பண்ணிக் கொண்டு இருப்பது சதாசிவம். இவை பஞ்ச கிருத்தியத்துக்கு உற்பத்தித்தானம் ஆகையால் அஞ்சு திருமுகம்

ஆனது. இந்த மூர்த்திக்கு இடமாய் இருப்பது சதாசிவ தத்துவம். இது ஆன்மாவினுடைய இச்சையை எழுப்புகிற அராக தத்துவத்தைச் சேட்டித்து இருக்கும். சதாசிவ மூர்த்திக்கு பிரதம ஆவரணமாக அணுசதாசிவர்கள் இருத யாதி சடங்கங்களிலே நேத்திரம் ஒழிந்த அங்கங்களை மூர்த்தமாகப் பெற்றுச் சுத்த மாயையில் கிருத்தியத்தையும் பிரபஞ்ச அனுக்கிரகத்தையும் பண்ணிக்கொண்டு இருப்பார்கள். இவர்கள் தியானம் இருக்கும்படி அக்கினி திக்கு, ஈசான திக்கு, நிருதி திக்கு, வாயு திக்கிலே நிரைநிரையாக இருதயம், சிரசு, சிகை, கவசம்; இவர்களுக்கு வடிவு இருதயம்; வெள்ளை சிரசு; பொன்மை சிகை: சிந்தூரம் கவசம்; வண்டொளியாகவும் பத்மாசனத்தராய்ச் செடா மகுடங்களிலே இளம்பிறை உடையராய் நாலு முகங்களும் உடையராய்ப் பன்னிரண்டு கண்ணும் உடையராய்ச் சருவாபரண பூஷிதராய் நாலு கையிலும் சத்தியும் சூலமும் இரண்டு கையும் மற்ற இரண்டு கையாலும் சதாசிவ மூர்த்தியை ஆசரித்துக்கொண்டு இருப்பாராய்ச் சிவனை நோக்கிய கண்களை உடையராய்த் தியானிக்கப்படுவார்கள், அத்திர மானது கோடி ஆதித்தப் பிரகாசமும் புறப்பட்ட தெந்தமும் இடிபோன்ற ஓசையும் உடையவராய்த் தெற்கு, மேற்கு வடக்கு, கிழக்கு நாலு திசையிலும் தியானிக்கப்படும் இவர்கள் அணுசதாசிவர். இந்தத் சதாசிவத்தில் கிரியை மிகுதியாக ஆன்ம காரியமாக இருபத்தைஞ்சு விக்கிரக மாகக் கண்டிக்குமது மகேசுரம். இந்த மூர்த்திக்கு இடமாக இருப்பது மகேசுர தத்துவம். ஆன்மாவி னுடைய கிரியையை எழுப்பும் கலையைச் சேட்டித்துக் கொண்டு நிற்கும். இந்தத் தத்துவத்திலே அனந்தாதி அட்ட வித்தேசுரர் இருப்பார்கள். ஆகையால் அனந்ததேவர் அசுத்த மாயையில் கிருத்தியத்தைப் பண்ணிக்கொண்டு கலைமுதலாகிய தத்துவங்களை எழுப்புமது மகேசுரம். இந்த மகேசுரம் இருபத்தஞ்சு மூர்த்தமாய் இருக்கும். அது வருமாறு:—சந்திரசேகரம், அர்த்தநாரீசுரம், இடப வாகனர், நிருத்தமூர்த்தி, கல்யாணசுந்தரர், பிட்சாடனம், காமதகனர், காலதகனர், திரிபுரதகனர், கங்காதரர், யானைஉரித்தவர், வீரபத்திரர், அரியரன், கிராதவேடர், கங்காளவேடம், சண்டேசுரப் பிரசாதர், ஆலகால பட்ச ணர், விட்டுணுவுக்குச் சக்கரப்பிரசாதர், விக்கினேசுரப்

பிரசாதர், உமாக்கந்தர், ஏகபாதர், சுகாசனர், தெக்ஷணு மூர்த்தி, இலிங்கோற்பவர், நாரிபாகன் ஆக 25 விக்கிரகம். இனி இவரிடத்தில் ஞானம் மிகுதியானபொழுது, உருத்திர ராம் இந்த உருத்திரமூர்த்தி சருவான்மாக்களுக்கும் சங்கார கிருத்தியத்தைப் பண்ணிக்கொண்டு ஆன்மாக்கள் செய்த கன்மங்கள் அடங்கலும் திருவுளத்து அடைத்துக்கொண்டு இருப்பர். இந்த மூர்த்திக்கு இடமாய் இருப்பது சுத்த வித்தியா தத்துவம். இது ஆன்மாவினுடைய ஞானத்தை எழுப்பும் வித்தையைச் சேட்டித்துக்கொண்டு இருக்கும். சிவ தத்துவங்கள் ஐந்தாகவும் ஆன்மாக்கள் கன்மநாட்டம் அற்றிருப்பது பரநாதமாகவும், விசுவத்தில் தொழில் அறுதி பரவிந்துவாகவும் சொல்லப்படும். இந்தப் பரநாதம், பரவிந்து, அபரநாதம், அபரவிந்து நாலும் ஆலயத்தானம் சதாசிவம் போகத்தானம், மகேசுரம், அதிகாரத்தானம், இப்படி சிவ தத்துவங்களை தரிசித்து சுத்த வித்தையாவது உருத்திர மூர்த்திதமாய் ஆன்மாக்களை ஒடுக்குவிக்கும். மகேசுரமாவது ஆன்மாக்களை மறைப்பிக்கும். சாதாக்கிய மாவது ஆன்மாக்களுடைய மறைப்பைப் பொசிப்பிக்கும். சத்தியாவது சிவனுடைய காருண்ணியம் விளைதற்கு நில மாய் இருக்கும். சிவமாவது சிவனுடைய ஆன்மகாரியமான விகாரத்துக்கு வடிவுமாய் அதற்கு ஆதனமாய் இருக்கும். சிவனுக்கு வடிவானது கொண்டு அத்தையும் சிவதத்துவம் என்னப்படும். காருண்ணிய சத்தி தத்துவத்துக்கு விந்து என்றும் பேர் என்பது ஆன்மாக்களை விஷய இறுதியிலும், தேக இறுதியிலும், பிரபஞ்ச ஒழிவிலும் பிராரத்த இறுதி யிலே உருத்திரமூர்த்தமாய் நின்று ஒடுக்குமது சுத்த வித்தை. முன்சொன்ன மூன்று வகையிலும் ஆன்மாக்களைப் பிராரப்தம் பொசிக்கும் இடத்து இதப்படமறைத்து நின்று புசிப்பிக்கும் திரோபவ சத்தி உடைத்தாய் இருப்பது மகேசுரமாம். இப்படிப்பட்ட ஆன்மதுக்கம் எக்காலம் ஒழிந்து சாயுச்சியத்தைப் பெறுவன் என்னும் அனுக்கிர கத்தை உடைய இச்சா-சத்திக்கு ஆதாரமாய் இருப்பது சதாசிவம். முன்சொன்ன விஷயத்தோற்றரவிலும் பிரபஞ்ச உற்பத்தியிலும் நிர்மிதம் ஆன சிவ விகாரத் தானமாகிய நாதத்தை உட்பொதிந்து கிரியையே செயற்பாடாய் இருப் பது சத்திதத்துவம். இது பராசத்தியுடைய கிருபைக்கு அதிட்டானம் ஆகையால் சத்தி தத்துவம் என்று

பேரானது. வயிந்தவ காரியம் ஆகிய நாலு வாக்குக்கும் ஐம்பத்தோர் அக்ஷரத்துக்கும் சத்தகோடி மகாமந்திரத்துக்கும், இருபத்தெட்டு திவ்விய ஆகமத்துக்கும் உற்பத்தித் தானமாகிய விதை ஆகையினுலே விந்து என்று பேரானது.

**சிவமாவது:**-முன்சொன்ன சிவ விகாரத்துக்கும் அதிட்டானமாய் இருக்கும் சுத்த மாயா லக்ஷணம். சத்த சொரூபமும் அத்த சொரூபமுமாய் இருக்கும். ஆதலால் வயிந்தவமான அத்த சொரூபத்துக்குச் சகசமாய் இருக்கையினுலே நாதம் என்று பேரானது. இப்படி சிவ தத்துவங்களைத் தரிசித்துச் சிவதத்துவத்தைப் பிரேரகாண்டம் என்றும், வித்தியாதத்துவத்தைப் போக காண்டம் என்றும், ஆன்ம தத்துவத்தைப் போக்கிய காண்டம் என்றும், இவ்வகை தத்துவம் முப்பத்தாறையும் தரிசிப்பான். நாதம் கலா தத்துவத்தையும் புருட தத்துவத்தையும் சேட்டிக்கும். விந்து, நியதியையும், மாயையையும் சேட்டிக்கும். சதாசிவம் அராகத்தைச் சேட்டிக்கும். மகேசுரம் கலையைச் சேட்டிக்கும், சுத்தவித்தை வித்தையைச் சேட்டிக்கும். இப்படி சிவகருவி சேட்டிக்கக் கலா தத்துவங்களை எழுப்பி ஆன்மாவினுடைய இச்சா ஞானக் கிரியைகள் அந்தக்கரணங்களிலே வாழும்படி மனத்திலே இச்சையும், புத்தியிலே ஞானமும் ஆங்காரத்திலே கிரியையும் வாழும். இவைகள் புறக்கருவிகளிலே சீவிக்கும்படி மனது முன்பு இரண்டு வகையாகப் பிரிந்தவற்றில் இந்திரிய வித்தியான மனத்திலே இச்சை சீவிக்கும். ஞானேந்திரியத்திலே ஞானம் சீவிக்கும். கன்மேந்திரியத்திலே கிரியை சீவிக்கும். ஆக இந்த ஞானேந்திரியங்களுக்கும், கன்மேந்திரியங்களுக்கும் இடமாய் இருப்பது ஆகாசாதி பஞ்ச பூதியங்களும், இந்த ஞானேந்திரியங்களுக்கும் கன்மேந்திரியங்களுக்கும் சத்தாதியும், வசனுதியும் விஷயங்கள் இருபத்தாறு தத்துவத்தையும் துணையாகக் கொண்டு ஆன்மாவுக்குப் புசிப்புக்கு ஏதுவான ஞானேந்திரியம், கன்மேந்திரியம் பத்தையும் ரூபக தரிசன சுத்தியால் இப்படி தரிசிப்பான். இந்த ஆன்ம தத்துவம் இருபத்து நாலும் மாயா தத்துவத்தில் இருக்கிற உருத்திரராலே தோற்றுவிக்கவும் உட்பட்டுச் சேட்டிக்கவும் படும். நின்மல சிவனுடைய நின்மலையாகிய பரை இச்சா ஞானக்கிரியைகளைச் சேட்டிக்கும். இச்சா ஞானக்கிரியை நாதவிந்து

சதாசிவங்களைச் சேட்டிக்கவும், சதாசிவம் மகேசுரனைச் சேட்டிக்கவும், உருத்திரனைச் சேட்டிக்கவும் சதாசிவன் அனுக்கிரகத்தாலே அணுசதாசிவர் அட்டவித்தியேசுரரில் அனந்ததேவர் கலை முதலான தத்துவங்களுக்கும் உற்பனம் ஆன மாயையிலே இருக்கும் உருத்திரரைச் சேட்டிக்கவும் படும். இப்படி சேட்டித்துக்கொண்டு நிற்றலால் தத்து வங்கள் செடமாகவும் தான் அறிவிக்க அறிவனுகவும் கண்டு இவைகளைக் கூட்டிப் புசிப்பிக்கிற பேர்கள் ஆகிய சிவ முதலைச் சார்ந்து இந்திரிய போகம் தாக்காமல் நிற்பது தத்துவ சுத்தி. இனி ஆன்ம ரூபகம், ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி வருமாறு:

ஆன்மாவுக்கு வடிவு சொல்லில், ஆன்மாவும் இச்சா ஞானக்கிரியா சொரூபனுய் இருப்பன். ஆன்மாவுக்கு இச்சை ஏது என்னில் பண்டபதார்த்தங்களிலே சென்று பற்றுதல். ஞானம் ஏது என்னில் இவையிற்றை இன்னது இது என்று பகுத்தறிதல். கிரியை ஏது என்னில் சருவத் தையும் தனது விஷயம் என்று பற்றி நின்று செய்து கொள்ளுதல் என்பது ஆன்மாவுக்கு வடிவு ஒன்ருய் இரா மல் இச்சா ஞானக்கிரியை மூன்று விதம் ஒரு வடிவு ஆமோ என்னில், தூல சூக்குமங்களுக்குப் பஞ்ச பூதியங்களும் புரியட்டகமும் பல கூடி ஒரு வடிவானுற்போலே இச்சா ஞானக்கிரியையே வடிவாம். பதார்த்தங்களில் பற்றுவது இச்சையென்றது. விஷயங்களைக் கண்டு பற்றுவது ஒன்றுமேயல்ல. அறிவில் தோன்றிய விஷயங்கள் தோறும் அமைவு பெருமல் எழுந்திருந்த அறிவினுடைய அவாவாக் கும் சென்று பற்றுதல் என்பது இச்சித்த விஷயம் ஒன்றை விட்டு ஒன்றிலே செலுத்திச் செல்லுமது. இது ஆன்மக ரூபகமாக அனுமானத்தாலே இச்சா ஞானக்கிரியை என் கிற ஏதுக்களைக் கொண்டு ஒரு ஆன்மா உண்டு என்றது எப்படி என்னில், சிவனுடைய இச்சா ஞானக்கிரியையான சிவ தத்துவங்கள் ஆன்மாவினுடைய இச்சா ஞானக் கிரியையை எழுப்புதலாலும் ஆன்மாவினுடைய இச்சா ஞானக்கிரியை அந்தக்கரணங்களில் நின்று சீவிக்கை யாலும், இக்கருவிகளிடத்திலும் கரணங்களிடத்திலும் உண்டான இச்சா ஞானக்கிரியை அன்றியே சொயமாக

இச்சா ஞானக் கிரியை ஆன்மாவுக்குச் சீவிக்கையால் இவைகளைக் கொண்டே ஒரு ஆன்மா உண்டென்று அறுதியிடுதல் ஆன்ம ரூபகம் எனக் கொள்க.

இனி **ஆன்ம தரிசனம்** வருமாறு: இச்சா ஞானக் கிரியை கரணங்களிலும், ஞானேந்திரியங்களிலும், கன்மேந்திரியங்களிலும் சீவிக்கும்பொழுது அறிதலும் பற்றுதலும் அழுந்தலும் கருவிகளை அடுத்த தன்மையில் வந்த குணமென்றும் அறிந்து, படிகம்போல அடுத்த தன்மையால் நிற்குமது சைதன்னியம் என்றும், விஷயங்களை ஒன்றை விட்டு ஒன்று அனுபவித்து வருதலானும், கரணங்களிலே ஒன்றை விட்டு ஒன்று நிற்றலானும், மதுபான மயக்கம் போலச் செட கருவிகளும் சேதனனும் கூடின இடத்தில் உண்டான போதம் விஷய போதம் எனத் தள்ளி இந்தத் தற்போதத்தைக் கண்டு நீங்கின போதம் ஆன்ம தரிசனம். ஆன்ம சுத்தி இருக்கும்படி சைதன்னியனைக் கண்ட இடத்துச் சிவனாலேதான் சருவத்தையும் அறியும் முறைமையும் கண்டு சிவன் ஆன்மாவுக்கு அறியும் முறைமை கொடான் என்பதும் கண்டு, சிவனுடைய ஞான சத்தியாலே தன்னுடைய ஞானத்தை அழுந்தும்படி நின்று தனக்கெனச் சேட்டை அற்று அந்த அருளே வடிவாய்த் தன்னிடத்திலே வருகிற இன்ப துன்பங்களையும் சிவனிடத்திலே ஆக்கித் தான் மலமும் ஆகாமல் சிவமும் ஆகாமல் நின்ற இடம் ஆன்ம சுத்தி என்பது. விளக்கொளி இடமாகப் பதார்த்தங்களைக் கண் கண்டால்போலச் சிவனுடைய ஞானசத்தி காட்டக் கண்டுவரும் தொழிலை உடையது ஆன்ம ஞானம் என்று அறிந்து சிவனுடைய ஞானம் காட்டக் காண்கிற ஞானம் சிவன் கொடுத்த ஞானம் அல்ல என்றும், அவ்விடத்தில் காண விகற்ப மடமாலே தற்சேட்டை அறுதியாக இந்திரியங்களையும், தன்னையும் பிரித்த அருளே வடிவாக நின்று அறிந்த அருளே முன்னிலையிலும் நின்று உபகரிக்கிற முறைமையைக் கண்டு விஷய போகத்தில் இதாகிதமுன்னிலையால் வருதலும், தான் பெறுதலும், இதம் அகிதத்தை அருளுக்கே ஆக்கின தன்மையும் நிகழாமல் பேய் பிடியுண்டவனைப் போலத் தான் சிவானுபவத்துக்கே முதலாகி அந்த அனுபவப் பேறு எல்லாம் தன்னிலே ஆதலால் தான் சிவமும் ஆகாமல், விஷய போதம் ஆக்காமலாற்று

முற்பட நின்று மலமும் ஆகாமல், சிவானுபவத்தை இரண்டற நின்று அனுபவிப்பது ஆன்ம சுத்தி, இனிச் **சிவரூபகம்** வருமாறு: சிவனுக்கு வடிவு சொல்லில், சிவனும் இச்சா ஞானக் கிரியா சொரூபனாய் இருப்பன். சிவனுக்கு இச்சை ஏது என்னில் ஆன்மாக்களை முத்தியிலே விடவேணும் என்பது. சிவனுக்கு ஞானம் ஏது என்னில் ஆன்மாக்கள் செய்யப்பட்ட அனாதி கன்மங்கள் அடங்கலும் திருவுளத்து அடைத்திருத்தல். சிவனுக்குக் கிரியை ஏது என்னில், கன்ம சாமியம் பிறக்கும்படி ஆன்மாக்களுக்கு அனாதியாய் வரப் பட்டகன்மங்கள் அடங்கலும் பக்குவா பக்குவம் அறிந்து கூட்டிப்புசிப்பித்துத் தொலைப்பித்து அருளுதல், இது சிவ ரூபகம் என்பது. ஆன்மாக்கள் செனன மரணத்தை நீக்கித் திருவடி ஞானத்தைக் கொடுக்கவேணும் என்பது இச்சை யாகவும், ஆன்மாக்கள் திருவடி ஞானம் பெறும் அளவும் கன்மசாமியத்தை நாடித் தற்செய்த கன்மங்களைத் திரு வுளத்து அடைத்தல் ஞானம் ஆகவும், அந்தக் கன்மசாமியம் பிறக்க அனாதியே ஆன்ம பேதமாய் வரப்பட்ட கன்மங் களைப் பக்குவா பக்குவம் அறிந்து கூட்டிப் பொசிப்பித்துத் தொலைப்பிக்கப் பஞ்சகிருத்தியம் நடப்பித்தல் கிரியை ஆகவும், இதனால் சிவரூபகமானவாறு எப்படி யென்னில், சருவக்ஞனாய் அகண்ட பரிபூரணனாய் நிருவிகாரியாய் உள்ள சிவன் விசுவத்தை நடத்தும்படி ஆதித்தனிடத்து ஒரு அபிமானமற்றிருக்கையிலே அவன் சந்நிதி மாத்திரத்திலே தாமரை அலரவும், ஆம்பல் குவியவும், பறித்த பூ உலரவும் கண்டதுபோல விசுவத்தைத் தோற்றுவித்து அளித்தலால் கடங்களைக் கண்டு குலாலனை நிருத்தேசம் பண்ணினாற் போலச் சிவனால் பஞ்சகிருத்தியம் பண்ணப்படும் என்று விசுவத்தைக் கண்டு அன்னுவயவெதிரேகி அனுமானத்தி னால் இந்த விசுவத்தைச் செய்தற்கு இச்சாஞானக்கிரியா சொரூபனாய்ச் சிவன் என்றொரு கர்த்தா உண்டெனக் கருதல் இந்த ரூபகம் எனப்படும். சிவதரிசனம் பண்ணும் படி இவன் கன்மம் பொசிக்கும் இடத்து இவனுக்கு மூன்று வகையாக நின்று உபகரிப்பன் சிவன். அது எப்படி என்னில் அவன், அவள், அதுவாக நின்று உபகரிப்பன். இப்படி உப கரிக்கும் இடத்துத் தோன்றுகிற மூன்று வகையும் கழித்து அவையிடமாக நின்று சேட்டித்துத் தனக்கு அந்தக் கன்மத்தையும் பொசிப்பித்துத் தன்னிடத்திலும் மறைந்து

நின்று இந்திரியங்களையும் தன்னையும் சேட்டித்துத் தனக்கு அந்தக் கன்மம் உருசிக்கும்படி பண்ணி இடைவிடாமல் தனக்கு ஊட்டுகிற சீகத்தத்தைப் (ஸ்ரீஹஸ்தம்—சிவபெருமான் திருக்கரம்) பார்க்குமது சிவதரிசனம் என்பது. அவன், அவள், அது மூன்றையும் செடசித்துக்களாயுள்ள வகை...ன...னெ பிரவர்த்திக்கமாட்டாதென்று முறைமையையும் அவைகளிடத்து இவனுக்குப் பக்குவப்பட்ட கன்மம் செடம் ஆகையாலும், அவைகள் முன்னிலையாகச் சிவன் நின்று தருகிற முறைமையும் கண்டு தான் கிஞ்சிக்கன் ஆகையால் மேல்வரும் போகம் இன்னதென்று தெரியாதாகையாலும், இந்திரியங்கள் செடம் ஆகையாலும் தன்னையும் இந்திரியங்களையும் கூட்டிப்பக்குவப்பட்ட கன்மத்துக்கு உண்டான முன்னிலையும் சேட்டித்துச் சருவ வியாபியாய் ஆனந்தசொரூபியாய் உள்ள சிவநாட்டம் ஒழிந்து முன்னிலையும் தானும்அறத் தன்னிடத்திலும், முன்னிலை இடத்திலும் இரண்டற நின்று உபகரிக்கும் அருளாகிய சீகத்தத்தை ஒழியாமல் நாடி இருப்பதே சிவதரிசனம்.

இனிச் **சிவயோகம்** பண்ணும்படி இவனுக்கு ஞான பூசையால் ஒழிந்து சிவயோகம் ஆகாது. அது எப்படி என்னில் அந்த ஞானபூசைக்குப் பஞ்ச சுத்தி வேணும். இதில் பூத சுத்தி பண்ணும்படி பிருதுவி முதலாகச் சிவ தத்துவம் ஈறாகத் தத்துவம் முப்பத்தாறும் செடம் என்று கழித்துத் தானதில் தாக்காமல் நீங்குமது பூத சுத்தி. தத்துவம் முப்பத்தாறும், செடம் என்று கழித்த அறிவிலே அலையாமல் நிற்குமது ஆன்ம சுத்தி. தோன்றின விஷயங்களை ஞான திருட்டியாலே அழியப் பார்க்குமது திரவிய சுத்தி. மந்திர சுத்தி பண்ணும்படி பஞ்சாட்சரத்தை விதிப்படியிலே 'சிவ்' முன்னாகக் கொண்டு நடுநின்ற 'யவ்' வென்ற ஆன்மாவானவன் 'நவ்' வாகிய திரோதாயியையும் 'மவ்' வாகிய மலத்தையும் நீக்கி 'வவ்' வாகிய ஞானசத்தி இடமாக நின்று சீயாகிய சிவத்திலே வாவும் கழல நின்று அழுந்துமது மந்திரசுத்தி.

**இலிங்கசுத்தி** பண்ணும்படி பஞ்சாக்ஷரம் வழியாகச் சென்று அகண்ட பரிபூரணம் ஆகிய சிவத்தினுள்ளே அழுந்தி உள்ளு, புறம்பு என்னுமல் சிவனை உள்ளபடி

கண்டு நிற்பது இலிங்க சுத்தி. இப்படி நின்மல வியாபகம் பிறக்க இந்த ஞான பூசையாலே சிவனை இரண்டறப் புணர்ந்திருக்குமது சிவயோகம் என்பது.

ஞான பூசையால் கூடும் சிவபோகம் இருக்கும்படி சொல்லில் பூத சுத்தி, ஆன்ம சுத்தி, திரவிய சுத்தி, மந்திர சுத்தி, இலிங்க சுத்தி என்கிற பஞ்ச சுத்தியினாலே ஞான பூசை பண்ணும்படி இவை இருக்கும்படி பூத சுத்தி பண்ணும் இடத்து முன்ன மாறத்தியிலும், தேகத்திலும், சீவனத்திலும் நின்ற பஞ்ச பூத காரியங்களைக் கழித்துக் குணகுணியாய் நின்ற கடின தாரகமாய்க் குளிர்ந்து, நெகிழ்ந்து, சுட்டு ஒன்றுவித்துச் சலித்துத் திரட்டி இடங் கொடுத்துத் தோய்வற்று நிற்கும் பஞ்ச பூதியங்களைத் தற்போத சங்கற்ப மாத்திரமென்று பிரித்து நிற்கவே பூத சுத்தியாம். இப்படி பூத சுத்தி பண்ணவே இவையிடமாகச் சீவிக்கும் ஞானேந்திரியங்களும் கன்மேந்திரியங்களும் இதுக்கு விஷயமான சத்தாதிகளும், புறக் கருவியிலே வந்த விஷயங்களை ஆன்மாவுக்கு வாங்கிக்கொடுக்கும் உட்கருவி யாகிய அந்தக்கரணங்களும், அந்தக் கரணங்களைச் சேட் டிக்கும் கலாதத்துவங்களும், கலாதத்துவங்களை எழுப்பும் சிவ தத்துவங்களும், ஆகத் தத்துவம் முப்பத்தாறும் செடம் என்று நீங்கிப் பிரிந்து பார்க்குமதே பூத சுத்தி. இனி **ஆன்மசுத்தி** வருமாறு: பிருதுவி முதலாக, நாதம் ஈறுக செடமென்று பிரித்துக் காட்டின சிவசத்தியாகிய அருளிட மாக விளக்கொளி காட்டக் கண்ட கண்போல முன்னின்ற கருவிப்போதமும் ஆகாமல் அருளும் ஆகாமல் அருட்போத மாய் அருளிலே அழுந்துமது ஆன்ம சுத்தி.

**திரவியசுத்தி** வருமாறு:—சத்தாதி விஷயங்களை அனுப விக்கும் இடத்து விஷய போதம் தாக்காமல் விஷயத்தில் இதம் அகிதம் எல்லாம் பேய் பிடியுண்டவனுக்கு இலாபம் இல்லாதாற் போலவும், அக்கினிச் சுவரிலாக்குத் தூரிகை கொண்டு எழுதினல் தொழில் உண்டாய பயன் அற்றாற் போலவும், விஷயத் தோற்றத்தில் இதம் அகிதம் எல்லாம் ஞானதிருட்டியால் அழியப் பார்க்குமது திரவியசுத்தி.

**மந்திரசுத்தி** வருமாறு: பெத்த பஞ்சாட்சரமாய் நின்ற திரோதாயியும், மலமும், சிவமும், அருளும், ஆன்மாவுமாய்

நின்ற நிலையை மாறிச் சிவத்தையும், அருளையும் கீழிட்டுத் தான் முன்னாக ஆணவம் சேட்டித்துக்கொண்டு நின்றதைப் பக்குவப்பட்டு வரும்படிக்கு நின்ற திரோதாயி ஆகிய நகாரத்தையும் மகாரத்துடன் கீழ்படுத்திச்சிவமும் அருளும் ஆகிய சிகாரவகாரங்களை முன்னிட்டு யகாரமாகிய தான் நின்ற நிலையே நிலையாக வாவாகிய அருளிடமாகச் சீயாகிய சிவானுபவத்திலே வாவாகிய அருளும் கழலாமல் கழல அனுபவத்திலே அதீதப்படுவது பஞ்சாட்சர தரிசனம்.

இதில் திரிபதார்த்தமும் நித்தியமாய் இருக்கும்படி பதி முதலாகிய சீயும் வாவும், பசு முதலாகிய யகாரம் பெறுதி யாய் நின்று அனுபவிக்கப் பாசமுதலாகிய மல இருள் கெட்டு விளக்குக்கு இடமானால் போல ஆணவ வலி கெட்டுத் தன் முதல் கெடாமல் அனுபவ ஏதுவாய் நிற்க நகாரமாகிய திரோதாயி விசுவத் தோற்றமற நிற்ப, இப்படி பஞ்சாக்ஷரத்தைத் தெரிசிப்பது. இது திரிபதார்த்தங் களுடைய நித்தமான தரிசனம். இந்தப் பஞ்சாக்ஷரத்தைச் செபிக்கும்படி சிவானுபோகம் சிகாரமாகவும், அனுபவத் தின் விளக்கம் அருளாகவும், அனுபவ இலாபம் அனுபவத் துக்கு இல்லாமலால் இவனுக்கே இலாபம் ஆகையால் அனு பவம் எல்லாம் இவனாகிய யகாரமாகவும், அனுபவமாகிய சிவமும், பெறுவானாகிய தானும் இரண்டு பாவகமும் தெரி யாமல் மறைந்து அனுபவத்திலே அதீதம் ஆக்குவது திரோ பவம் ஆகிய நகாரமாகவும், இருளினுடைய கேடெல்லாம் விளக்கொளி ஆனாற் போலவும், அக்கினியினுடைய பிறபல மெல்லாம் மந்திரசத்திக்குப் பலம் கொடுத்தால் போலவும் தற்கேடே அனுபவ ஏதுவாய் நிற்கும் மகாரமாகிய மலத்தையும் ஒரு நிலையாக நின்று அனுபவிப்பதே பஞ்சாக்ஷர செபம். இது ஒருவகைப்பட்டு நின்றதற்கு அத்தம் சிவன் பொருட்டு நமற்காரம் என்ன அனுபவத் திலே தான் கீழ்ப்பட்டு வர பஞ்சாக்ஷர செபமாம்.

இதில் பஞ்ச கிருத்தியம், அனுபவத்தினுடைய தோற்றம், சிருட்டி. அனுபவத்தைக் கொடுப்பது திதி. அனு பவத்தில் தான் நிகழாத் தன்னழிவு சங்காரம். அனுபவம் தோற்றாதது. திரோபவம். அனுபவமேலீடு அனுக்கிரகம். இதில் திருக்கூத்து இருக்கும்படி தற்பத அங்கிசமாகிப்

சிகாரமாகிய அனுபவமே தனுவாகத் தற்பத வலியாகிய அருளே சாக்ஷியாகத் தொம்பத அங்கிசமாகிய யகார மாகிய ஆன்மா அசிபதமாகிய அனுதியிலே இரண்டற்ற கலப்பைப் பெறுவதே தானத் திரையமாகத் தொம்பத பெந்தம் ஆகிய ஆணவக்கேடே அசிபதமாக வர்த்திக்க இப்படி தானத்திரையமான வாக்கியம் மூன்றினும் உள்ளடங்கிய சுத்த பஞ்சாக்ஷரமே திருக்கூத்தாகத் தரிசிக் கப்படும். பெத்த பஞ்சாக்ஷரத்தை அனுபவத்திலே தரிசிக் கும்படி திரோதாயி இல்லை; மலமில்லை; சிவமில்லை; அருளில்லை; ஆன்மா இல்லையென்ன அனுபவமேயாய் நின்ற நி லை யே நமசிவாய எனவும் காண்க. இது மந்திரசுத்தி.

இனி **இலிங்கசுத்தி** வருமாறு: **விசுவத்தை** உருசிப் பித்துப்பொருளை மறைத்த திரோதாயியையும், அனுதியிலே சிவ இழப்பைத்தந்த ஆணவத்தையும், தான் பிரிந்து பரையே நிலையாக அனுபவத்தைப்பெறும் பஞ்சாக்ஷரம் வழி யாக அந்த அனுபவம் ஆகிய அகண்ட பரிபூரண போதா னந்தமாகிய சிவத்துடன் ஒன்றும் ஆகாமல் இரண்டும் ஆகாமல், ஆகாசத்தில் சத்த வாயுப் போலப் பிரிக்கப்படாத அனுபவத்துடன் இரண்டற அழுந்தி, உள்ளு புறம்பு என்னும் வேறுபாடற ஆணவ போதத்தாற்கு விஷேவத் தோற்றம்காணுமது ஒழிந்து வேறென்றும் காணுதாற் போல இவர்கள் எவ்விடத்தும் பொருளினுடைய தோற்றமே கண்டிருப்பது இலிங்கசுத்தி. இப்படிக் கண்டி ருப்பதே இலிங்கத்துக்குச் சுத்தியானவாறு எப்படி யென்னில் ஆன்மா உபாதியான தத்துவ சாலங்கள் கழல அத்தன்மையைக் காண்பதே ஆன்மசுத்தியாறல் போலச் சிவ உபாதியாகிய சகளநிட்களங்கங்கள் கழலச் சிவனுடைய நிருவிகாரம் ஆகிய ஆனந்த சொரூபம் ஆகிய பரிபூரணத் தைத்தரிசித்தது இலிங்கசுத்தியாம்.

இங்குச் சொல்லிவந்த பஞ்ச சுத்தியுடனே சிவயோகம் அளவாக யோசிக்கும்படி தத்துவரூபகம், தத்துவ தரிசனம், தத்துவசுத்தி என்னும் இவை பூதசுத்தி. ஆன்மரூபகம், ஆன்ம தரிசனம், ஆன்மசுத்தி இவையே ஆன்மசுத்தி என்றது. இனிச் சிவரூபகம், திரவியசுத்தி, சிவதரிசனம். மந்திரசுத்தி, சிவயோகம், இலிங்கசுத்தி ஆக இப்படி

முன்னொடு பின் யோசித்துப் பஞ்சசுத்தி பண்ணுவான். இனிச் சிவயோகம் இருக்கும்படி நின்மல சாக்கிரம் என்றும் நின்மல சொற்பனம் என்றும், நின்மல சுழுத்தி என்றும், நின்மல துரியம் என்றும், நின்மல துரியாதீதம் என்றும் அஞ்சு வகைப்படும்.

நின்மல சாக்கிரம் இருக்கும்படி புறக்கருவிகள் அடங்கலும் கழிந்த இடம் நின்மல சாக்கிரம் கழிந்த இடம். அந்தக்கரண வியாத்தியிலே நின்றும் அதனைக் கழிந்த இடம் நின்மல சொற்பனம் கழிந்த இடம். சித்த விருத்தியிலே நின்று சிந்தனை ஒழிந்த இடம் நின்மல சுழுத்தி கழிந்த இடம். நின்மல துரியம் இருக்கும்படி பிராணவாயுவுடனே கூடி நின்று வேறொரு கருவியும் அற்றது. அந்தப் பிராண வாயுவும் கழன்ற இடம் நின்மல துரியம் கழிந்த இடம். நின் மலாதீதம் இருக்கும்படி ஆடி ஓய்ந்த பம்பரம் போலவும் கயிறற்ற ஊசல் போலவும் சுத்தாவத்தையிலே நிற்கின்ற அவதரம் அதிலே மயக்க மடுக்கிற கேவலமாம் விகற்ப மடுக்கிலே சகலமாம். இவை இரண்டும் தாக்காமல் ஆணவத்தைக் கேவல அவத்தையாலே கழித்து, மாயையைச் சகல அவத்தையாலே கழித்து, சுத்தாவத்தையாலே கன்மத்தை ஒழித்தும் ஆக இவ்வகையே மும்மலங்களும் ஒழித்து இச்சாசத்தியினாலே மலத்தினுடைய வாதனையை ஒழித்துக்கிரியா சத்தியினாலே ஞானசத்தியிலே நின்று ஞானசத்தியினாலே திரோதான சத்தியைக் கழித்து மேற் பராசத்தி இடமாக நின்று அனுபவ சத்தியுடனே கலந்து பேரின்பமாகிய சிவனென்னத்தானென்ன இரண்டற்று ஞாதுரு ஞானஞேயங்கள் மூன்றும் நழுவாமல் நழுவ நித்தியம், ஞானம், அனந்தம், ஆனந்தம் இவை நாலும் ஒன்று பட்டு ஒன்று படுகையிலே ஒருப்படுகையும் குலையாமல் அநித்தியம், அஞ்ஞானம், அனனந்தம், அனானந்தம் இவை நாலும் கெடாமல் கெட்டு, இப்படிப்பட்ட பாச விசாரங்கள் அடங்கலும் பிடித்த பேய் கழல நின்றால் போல இவனை விட்டு அன்னியமாகத் தான் ஆதித்தன் சன்னிதியில் விளக்குப் போலத் தான் கெடுவதும் செய்யாமல் அவ்விடத் துத் தோன்றுவதும் செய்யாமல், சிவானுபவம் பிறக்கச் சிவனுடனே அக்கினிக்கு வெம்மை போலவும், சலத்துக்குச் சயித்தியம் போலவும், கண்ணும் ஆதித்தனும் போலவும்

கேவலப்பட்ட ஆன்மாப் போலவும் பரசிவத்துடன் துவிதமும் ஆகாமல் அத்துவிதமும் ஆகாமல், அனுபோகம் பிறக்க அழுந்துமது சிவபோகம் என்பது. ஆன்மாவுக்கு அவதர விருத்தியால் வந்த அவத்தைகள் பதினெட்டுள்ளும் சாக்கிராதி அவத்தை ஐந்தாகிய கீழாலவத்தையும், அதீ தாதியாகிய மத்தியாலவத்தையும், இவையிற்றை தரிசித்து வரும் நின்மல சாக்கிராதி அவத்தையான மேலாலவத்தை யும் இந்த மூன்றினுக்கும் காரணமாகிய கீழாலவத்தை யுடைய கேவலத்தையும், மத்தியாலவத்தையுடைய சகலாவத்தையும், நின்மல சாக்கிராதி அவத்தை உடைய சுத்தாவத்தையும் ஆகிய பதினெட்டும் கேவல அவத்தைக்கு ஆணவம் துணையாகவும், சகலாவத்தைக்கு மாயை துணையாகவும், சுத்தாவத்தைக்குச் சுத்தமாயை துணையாகவும் சொல்லப்படும். நின்மல சாக்கிராதி மூன்று வகையாய் இருக்கும். அது வருமாறு:—

சுத்த தத்துவம் அஞ்சாலும் கீழாலவத்தையும் மத் தியாலவத்தையும் தரிசித்துப் பிரியுமது ஒருவகையாகவும், புறக்கருவியாகிய இந்திரியங்கள் பத்தும் பூதம் ஐந்தும் இட மாக நின்று விஷயங்களைக் கிரகிக்கும். சீவன் போதம் இறக்க இருந்த இடம் நின்மல சாக்கிரம் என்றும், அந்தக் கரணங்களிலே ஆன்மாவினுடைய இச்சா ஞானக் கிரியைக்கு இடமான மனம், புத்தி, ஆங்காரம் ஆகிய கரண வியாத்தி அற்ற இடம் நின்மல சொற்பனம் என்றும் சைதன்னியனுக்கு அதிட்டானம் ஆன சித்தவிகற்பம் ஒடுங்கின இடம் நின்மல சுழுத்தி என்றும், சைதன்னிய வாகனமான பிராண வாயுவும் கழல இருந்த இடம் நின்மல துரியம் என்றும், ஆடி ஓய்ந்த பம்பரத்துக்கு விசைகுலைந் தால் விழுந்த இடமே இடமானால் போலவும், ஆடிய ஊசல் கயிறு அற்றால் விழுந்த இடமே அதற்குத் தாரகமானால் போலவும், கருவிக் கூட்டம் குலைந்தால் அருள் தாரகம் ஒழிந்து வேறு ஒன்றும் இல்லாமல் . . . . . ற் கருவிப்போதம் கழிய நின்ற சுத்தாவத்தையே நின்மலாதீதம் என்று சொல்லப்படும். இதுவும் ஒரு...யாகவும் இனிக் கருவிப் போதங்கள் இறந்த சுத்தாவத்தையிலே விளக்குக் காட்டக் கண்ட கண் போல அருளாதாரமாக நிற்றல் சாக்கிரம். அருளிலே நின்ற தன்னைத் தரிசித்தல் நின்மல சொற்பனம்

ஆகவும், அந்தப் பரையில் நின்மலம் எல்லாம் தனதாகத் தான் அந்தப் பரையாய் விடுதல் நின்மலசுழுத்தி ஆகவும். தான் அந்தப் பரையான இடத்திலே ஆதித்தன் ஒளியிலே அதீதப்பட்ட கண்ணுக்கு ஆதித்த சொரூபத்தினுடைய தோற்றம் போல, சிவானந்த உதயமாகிய அனுபவத்தைப் பெறுதல் நின்மல துரியமாகவும், ஆதித்த சொரூபத்தைக் கண்ட கண் ஆதித்தன் ஆகாமல் இருக்கையிலே தன்னுடைய பார்வை இழந்து பார்க்கிற முதலேயும் இழந்து ஆதித்தனுய் அதீதப்பட்டால் போலத் தற்பாவம், சிவபாவம் இரண்டும் கழல அனுபவமேயாய் அனுபவத்தில் அதீதப் படுதல் நின்மலாதீதம் ஆகவும், இதுவும் இதுவும் ஒருவகை யாகவும் சொல்லப்படும். இந்த மூன்று வகையினுள்ளும் நடுவில் சொல்லப்பட்ட நின்மல சாக்கிராதியின் அதீதத் திலே மலத்திரையங்களைக் கெடுக்கும்படி விகற்ப மடுக்கிற சகலமாம் என்றது கருவிப் போதம் கழன்ற இடத்திலே கருவிகளினுடைய கழற்றி நிகழ்ந்தாலும் சகலமாம் அதிலே மயக்கமடுக்கிற கேவலமாம் என்றது. கருவி கழன்ற இடத்திலே அறியாமையாய் இருப்பன் ஆகில் ஆணவ சகச மான கேவலமாம். இனி மயக்க விகற்பமும் அடாமல் நிற்கும் நிலே எப்படியென்னில் மயக்கத்தையும், விகற்பத் தையும் பிரித்துக்காட்டின அருளே ஆதாரமாக நிற்கப்படு மது. இனிக் கேவலத்தாலே ஆணவத்தைக் கழிக்கும்படி கருவிப் போதத்தில் அதீத நிலே கழலவே ஆணவம் கழலும். இனிச் சகல அவத்தையாலே மாயையைக் கழிக்கும்படி திரிவித கரணங்களேயும் சிவனுக்காக்கவே மாயாமலம் கழியும். சுத்தாவத்தையாலே கன்ம மலத்தை ஒழிக்கும்படி அருளாதாரமாக ஆகாமிய சுத்தி பிறந்து வரலால் கன்ம மலம் ஒழியும். இப்படி மலத்திரையங்களேச் சுத்தி பண்ணி மலத்தினுடைய வாதனேயை இச்சா சத்தியினுலே ஒழிக்கும்படி சிவனுடைய இச்சை ஆன்மாவை எக்காலம் திருவடியிலே இடுவோம் என்பதாதலால் இப் பொழுது அருட்போதனுனமையால் அவரை எடுத்துச் சாதித்தவர்களுக்குப் பஞ்சில் துகளொரு பாரமல்லா தால் போல அனுதியே பெத்தமாய் வருகிற செனன வலேயை இயற்றிய சிவனுடைய இச்சாசத்திக்கு வாதனு போதத்தை மாற்றுதல் பாரமலவாதலால் சிவன் தன் மேல் வைத்த கருணேயாகிய இச்சையை வியக்கவே வாதனு

போதம் கேடும். இனிக் கிரியாசத்தியினுலே ஞான சத்தி நிற்கும்படி தற்போதச் சேட்டை அற்ற அறிவுக்குப் போக்கு வரவில்லாமலால் இவனுக்குப் பெத்தத்திலே பஞ்ச கிருத்தியத்தைப் பண்ணின கிரியா சத்தி முத்தியிலும் பஞ்ச கிருத்தியம் ஒழியாதாதலால், இவன் கெடாமல் உண்டாக்கிச் செல்லுமதே கிரியா சத்தியாக ஞானமே இவனுக்கு ஆதாரமாகத் தெரிசனப்படுத்தி வருதலால் கிரியா சத்தியினுலே ஞானசத்தியிலே நிற்கப் பெற்றது ஞான சத்தியினுலே திரோதான சத்தியைக் கழிக்கும்படி விசுவத்தை மறைத்து உரிசிப்பிச்சு நின்ற திரோபவம் மாறி ஞான சத்தியாகவே அந்த விசுவம் கான்ற சோறு போலவும் பண்ணி, இந்திர சாலவித்தைக்குள் அகப்பட்டு மயங்கின கண் கட்டுவிடவே அது பொய்யாய் இயல்பான காரியம் தோன்றிஞல் போல அகண்டமும் வேறு ஒன்று அறச் சிவஞானமே பூரணமாகத் தோன்றுதலால், ஞான சத்தியினுலே திரோதான சத்தியைக் கழிக்கப்பட்டது பராசத்தியிடமாக நின்று அனுபவ சத்தியுடனே கலக்கும்படி விசுவக் கழற்றியின் உதயமான சிவஞான விகாரமும் அவிகாரமு மறிய ஆதித்தனுடைய பிரபை ஆதித்தனைக் கூடி நிற்குமாறு போலச் சிவனுடனே சகசமாய்ப் பூதங்கள் நாலுக்கும் ஆகாசம் இடம் கொடுத்து நின்ருலும் அவையிற்ருேயாத வாறு போலச் சகலத்தையும் தன்னிடத்திலே பொதிந்திருந் தாலும், அவையிற்ருேயாததுமாய் நின்மலமாய் இருப்பது பரை. இனி அனுபவ சத்தி இருக்கும்படி முன் சொன்ன பரையினுடைய சுபாவத்தைப் பெற்ற சைதன்னியனுக்கு அனுபவ உதயத்தை விளக்கம் செய்விப்பதாய்வது அனுபவசத்தியாதலால், பராசத்தியிடமாக நின்று அனுபவ சத்தியுடனே கலந்து இனிப் பேரின்பமாகி சிவன் என்னத்தான் என்ன இரண்டறும்படி அந்தப்பேரின்பம் எல்லாம் சிவமாகவும், அந்த இன்பம் இன்பத்துக்கு இல்லாதது தாஞகவும் இப்படி ஒன்றும் ஆகாமல் இரண்டும் ஆகாமல் இரண்டற்று ஞாதுருஞானஞேயங்கள் நழுவாமல் நழுவும்படி ஞாதுருவாகிய தானும், ஞானமாகிய அருளும், ஞேயமாகிய சிவமும், ஆதித்தனைக் காண்கிற கண்ணும், ஆதித்தனைக் காட்டுகிற ஒளியும், ஆதித்தனும் இந்த மூன்று விருத்தியும் பகுத்து விசாரியாமல் காட்சியே அதீதமாக நின்ருல் போல அனுபவானந்தமே அதீத நிலையாகச் சைதன்னியம்

பெறுவது. இனி ஞாதுரு ஞானஞேயங்கள் நழுவாமல் நழுவும் என்றது முனர் சொன்ன நின்மல சாக்கிராதி ஐந்தையும் மலத்திரையங்கள் கெட இருந்த இடத்து அருளாதாரமாகத் தன்னைக் கண்ட நிலையைச் சாக்கிரம் ஆகவும், இச்சாஞானக்கிரியைகளைக் கழித்துப் பரை தரிசனமான இடம் சொற்பனம் ஆகவும், பரையினுடைய சுபாவம் எல்லாம் தானாய் நின்ற நிலை சுழுத்தி ஆகவும், அனுபவ சத்தியுடன் கலந்து அனுபவத்தைப் பெறும் நிலை துரியமாகவும், பேரின்ப சிவனுடனே இரண்டறக் கலந்து தற்பாவ சிவ பாவம் இரண்டும் கழல இரண்டற அதீதப் பட்டு நிற்பது அதீதமாகவும் சொல்லப்படும். இந்தச் சுகாதீத நிலையிலே நித்தியம், ஞானம், அனந்தம், ஆனந் தங்கள் நாலும் ஒன்றுபட்டு, ஒன்றுபடுகையிலே ஒருப் படு கையும் குலையாமல்-என்பது-நித்தியம்-அழியாதது, ஞானம்-அறிவு; அனந்தம்-அளவிறந்தது; ஆனந்தம்-சுகம். இந்த நாலு குணமும் பதி இலக்கணம். பசு இலக்கணமும் பதி இலக்கண விபரமும், பசு இலக்கண விபரமும் வருமாறு.

ஆனந்தமாய் இருப்பது பதி. அந்த ஆனந்தத்தை அனுபவித்து ஆனந்தமாய் இருப்பான் பசு. அனந்தம்-அள விடப்படாமல் இருப்பது பதி. அந்த அளவிடப்படாமல் நின்ற பூரணம் எல்லாம் தன் இலாபமாக நின்று அனுபவிப் பான் பசு. ஆதலால் இவனும் அளவிடப்படான். சருவஜ் ஞனாய்ச் சருவத்தையும் அறிவிக்கும் ஞானத்தினை உடையவன் சிவன். அறிவிக்க அறியும் ஞானத்தினை உடையவன் பசு. இனி நித்தியமாய் உள்ளவன் சிவன். சிவனுடைய நித்தியமான சொரூபம் எல்லாம் சுக ரூபமாய் இருக்கும் ஆதலால், அவனுடைய சுகமெல்லாம் அவனுக் கில்லாமை இவனுடைய லாபம் ஆதலால் நித்தமான சுகம் உள்ளளவும் அனுபவிக்கிற ஆன்மாவும் நித்தன். இவைகள் ஒன்றுபடுகையிலே ஒருப்படுகையும் குலையாமல் - என்பது-சிவனுடைய நித்தம் இவனுடைய நித்தம் ஆகவும், சிவனுடைய ஞானம் இவனுடைய ஞானமாகவும், சிவ னுடைய அளவுபடாமை இவனுடைய அளவுபடாமை ஆகவும், சிவனுடைய ஆனந்தம் இவனுடைய ஆனந்த மாகவும் ஒன்றுபட்டு ஒன்றுபடுகையிலே இவைகள் எல்லாம் இவனுடைய லாபம் ஆதலால் ஒருப்படுகையும்

குலையாமல்-என்பது-அனித்தம், அஞ்ஞானம், அனனந்தம், அநுனந்தம். இவை நாலும் பாசலக்ஷணம். இவைகள் கெடாமல் கெடும்படி அனித்தம் என்பது அழியப்பட்டது. அஞ்ஞானம் என்பது செடம். அனனந்தம் என்பது அளவிடப்பட்டது. அநுனந்தம் என்பது சுகமில்லாதது. இவ்விடத்தில் பாசம் கெடாமல் கெட்டு நிற்கையிலே இந்த நாலு குணமும் தெரிசிக்கும்படி பாசம் என்பது முதல் கெடாது ஆதலால் அனித்தியம் கெட்டது. இவனை வாதிக்கும் பாசம் இவனை வாதியாதபடியால் நித்தம் கெட்டது. இதனுடைய செடத்துவம் கிடத்தலால் அஞ்ஞானம் கெடாமல் நின்றது. இவனுக்கு அஞ்ஞானத்தைக் கொடுக்கமாட்டாதாதலால் அஞ்ஞானம் கெட்டு மோக்ஷார்த்தம் பிறக்கையால் அனனந்தமாயம் கெடுபட்டது. எருக்கெட்டுப் பயிருக்குப் பிரபலம் கொடுத்தாற்போலத் தற்கேடே தனக்கு நிலையாதலால் அந்தமாகாமல் கெடாமல் நின்றது. இவனுக்குச் சிவ இழப்பாகச் செய்து அனுபூதி நின்ற நிலை கெடுதலால் அனந்தமாய்க் கெட்டது, இருள் கெட்டு விளக்கு ஒளி கொடுத்தாற்போல ஆணவக்கேடே அனுபவ விளைவாதலால் அநுனந்த பாவம் கெட்டு ஆனந்த ஏதுவா நின்றது. இப்படிக் கெடாமல் கெட்டு நிற்கும் பாச விகாரங்கள் அடங்கலும் பிடித்த பேய் கழல நின்றால்போல என்பது பேய் பிடியுண்டவனுக்கு உண்டான வியாபாரம் எல்லாம் பேயினதேயாய் இவனுக்கு இல்லாதவாறுபோல, சருவ உபாதியும் இவனை விட்டு அன்னியமாக ஆதித்தன் சன்னிதியில் விளக்குப் போல விளக்கினுடைய பிரபை மேலீடற ஆதித்த ஒளியிலே அடங்கி நின்றால்போலப் பெறுதி எல்லாம் சிவமும் பெருமை எல்லாம் தானுமாகச் சிவானுபவத்துடனே இரண்டறக் கலந்து அக்கினிக்கு வெம்மையும் சலத்துக்குச் சயித்தியம் போலவும் கண்ணும் ஆதித்தனும் போலவும், கேவலப்பட்ட ஆன்மாப் போலவும், பரசிவத்துடனே அனுபவம் பிறக்க அழுந்துமதே சிவபோகம். இப்படி தசகாரியம் தரிசிப்பான்.

**முத்துக்குமாரதேசிகர் திருவடி அடியேன் சிரசில்**
**நீங்காமல் வாழ்க.**